324
புதுமை
ஆசிரியர்: கோசல்ராம்
OFFICE OF THE REGISTRAR OF
24 OCT 1958
பாரதி மலர்
MAI செப்டம்பர் 1, 1958. விலை 25

தயாராகிறது!
நடிகவேள்
M.R.ராதா
நடிக்கும்..........
தனலக்ஷ்மி
பிக்சர்ஸாரின்...
சமஉரிமை
சத்தியம். A.கருணாநிதி. மாஸ்டர் கோபி. K.K. சவுந்தர்
சௌகார் ஜானகி. தேவிகா. மனோரமா. மற்றும் பலர்...
கதை:
G.ராஜகோபால்..
வசனம்:
விருதை. ந. இராமசாமி
பாடல்கள்:
தஞ்சை ராமையாதாஸ் · மருதகாசி
சங்கீதம்:
S.தக்ஷிணாமூர்த்தி...
ஒளிப்பதிவு:
P.K.மாதவன்
ஸ்டுடியோ:
பாரமவுண்ட்
தயாரிப்பு:
G.ராஜகோபால்
டைரக்ஷன்:
B.சம்பத்குமார்
விபரங்களுக்கு: தனலக்ஷ்மி பிக்சர்ஸ்
31, போயஸ் ரோடு, தேனாம்பேட்டை
சென்னை-18
PARTHAN

மெட்ரிக் முறை என்பது என்ன?



OFFICE OF THE REGISTRAR OF ...
24 OCT 1958
MADRAS

மெட்ரிக் முறையில் மீட்டர் என்பது அடிப்படை நீட்டல் அளவு. இந்த மீட்டரிலிருந்து உண்டான அளவுகளைக் குறிக்கும் முறை மெட்ரிக் முறை என்று பெயர் பெற்றது. எல்லா தசாம்ச முறைகளிலும் 10 ஆல் பெருக்கி அல்லது வகுத்து மற்ற அளவுகளைக் கணக்கிடுகிறோம். மெட்ரிக் முறையிலும் இப்படியே.

மெட்ரிக் முறையில் *டெகா* (பத்து தடவை), *ஹெக்டா* (10 × 10 = 100 தடவை), *கிலோ* (10×10×10 = 1000 தடவை) என்னும் சொற்களை முன்னால் இணைத்து அடிப்படை இலக்கத்தின் பெருக்கங்களைக் குறிப்பிடுகிறோம். அது போலவே, *டெசி* (1/10), *சென்டி* (1/100), *மில்லி* (1/1000) என்னும் சொற்களை முன்னால் இணைத்து கீழ்வாய் இலக்கங்களைக் குறிப்பிடுகிறோம்.

மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் 1958 அக்டோபரிலிருந்து அமுலுக்கு வருகின்றன

மெட்ரிக் நீட்டல் அளவுகள்

நீளக்கணக்கில் அடிப்படை அளவு
மீட்டர்
= சுமார் 40 அங்குலம்
1 கிலோ மீட்டர் = 5 பர்லாங் தூரம்

கீழ்வாய் இலக்கங்கள்

10 மில்லிமீட்டர்	= 1 சென்டிமீட்டர்
10 சென்டிமீட்டர்	= 1 டெசிமீட்டர்
10 டெசிமீட்டர்	= 1 மீட்டர்

பெருக்கங்கள்

10 மீட்டர்	= 1 டெகாமீட்டர்
10 டெகாமீட்டர்	= 1 ஹெக்டாமீட்டர்
10 ஹெக்டாமீட்டர்	= 1 கிலோமீட்டர்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

தென்னாட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி.

தபால் பெட்டி நெ. 30

போன் : 58 & 75 தந்தி : "லித்தோகிராப்"

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஒர்க்ஸ், ஜவுளி, காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரீஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரி

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

AT YOUR SERVICE

Grams : CORONATION

Phone : 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO. 2, SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: HOOGHLY INK Co, Private, Ltd.

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமையுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 2 | செப்டம்பர் 1958 | ஓசை 2

அரசியல் : பக்கம்

இது பசுதான், நேருஜி! (கார்ட்டூன்) ... 4
இதுவா, கிராம சுயாட்சி! ... 5
"ஹிந்து"-சில இரகசியங்கள் ... 11

தொடர் கதைகள் :

காமனே வென்ற கண் சுகி ... 35
வள்ளியின் உள்ளம்-கு.ப.சேது அம்மாள் ... 67

கட்டுரைகள் :

எட்டயபுரத் திருவிழா ... 16
காலம் கொன்ற விருந்து கி. வா. ஜ. ... 17
சேமிப்பும், செல்வப் பெருக்கும்.
டாக்டர் பா. நடராஜன் ... 23
பொருளாதார முன்னேற்றத்தில்
தனியார், அரசாங்கத் துறைகளின் பங்கு
மனுபாய்ஷா ... 29

கதைகள் :

மாதரசே! செல்வப் பெண்ணே! ராதே! ராதே!
ஆரெஸ்ஸஸ் ... 51
சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!
திருச்சி வாசுதேவன் ... 59
புல்லியன் செய்த பிழை —
வல்லிக்கண்ணன் ... 89
மோதி மிதித்துவிடு பாப்பா!
த. ச. சு. பாண்டியன் ... 97

கவிதைகள் :

இன்பக் கதைகளெல்லாம்—
சாலே. இளந்திரையன் ... 22
காற்றிலேறி— ஆரையம்பதி அன்புமணி ... 94
காக்கை குருவி அழகனார் ... 109

கலைப் பகுதி :

நாடோடி மன்னன் ரசிகன் ... 101
சாரங்கதரா " ... 103
வளரும் படங்கள் ... 106

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

"இது பசுதான், நேருஜி!"



190697

புதுமை

இதுவா, கிராம சுயாட்சி?

உலகம் போற்றும் உத்தமர், இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தி, 'இந்த நாட்டு ஏழைக் குடிமக்களின் வாழ்க்கை உயரவே சுதந்திரம் கேட்கிறேன்' என்று முழங்கினார்.

கவியரசன் பாரதியும்,

"எக்கால மும்பெரு
மகிழ்ச்சி — யங்கே
எவ்வகைக் கவலையும்
போருமில்லை"

என்று இன்ப நாடாக இந்தியா விளங்கும் என்றே கனவு கண்டான்.

நாமும் அரசியல் சுதந்திரம், சமுதாய, பொருளாதார விடுதலைக்கு வழிகோலும் என்று நம்பினோம்.

ஆனால் சமுதாய, பொருளாதார சுதந்திரங்கள் கிடைக்க நடக்கும் போராட்டத்தில், நமக்கு உதவ வேண்டிய நிர்வாக இயந்திரம் நமக்குப் பாதகமாகச் செயல்படுகிறது என்பதறிந்தால் எந்த தேசபக்தனும் தலைக்குனிவு கொள்வான்.

'இனி கிராம ராஜ்யம்... ராமராஜ்யம்' என்று விளக்கம் தந்த காந்தி அடிகள் இன்றிருந்தால்...?

அதிகாரம் தலைநகரிலே இருந்து, கிராமப் புறத்திற்குச் சென்று மக்கள் வாழ்வைப் பண்படுத்தும் கருவியாகப் பயன்பட வேண்டும் என்று கருதிய அண்ணல் இன்று வாழ்ந்தால்...?

ஏமாற்ற நெடுமூச்சு விட்டு, ஏக்கக்கண்ணீர் சிந்தியிருப்பார்!

சிவப்பு நாடாவும், அதிகாரக் குவியல் முறையும், அதிகார வர்க்க தோரணைகளும் சிரஞ்சீவிகளாக இருப்பது கண்டு காந்திஜியின் பக்தர்களான தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களும், கன்னியாகுமரியில் அண்மையில் நடைபெற்ற தங்கள் கூட்டத்திலே வாய் விட்டு வருந்தினார்கள்.

மக்கள் சேவையில், கிராம ராஜ்யப்பாதையில், முன்னணியில் நிற்க வேண்டிய முக்கிய இரண்டு அரசாங்க இலாகாக்களாகிய ஸ்தலஸ்தாபனத் துறையும், கூட்டுறவு இலாக்காவும் முடமாகிக் கிடப்பது

குறித்து அவர்களது வேதனை யை வெளியிட்டார்கள்.

*　　*　　*

ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் பகுதி மக்களுக்குத் தேவை யான பொது நலங்களாகிய சாலைகள், சுகாதார வசதிகள், தொழில்கள், கல்விச் சாலைகள், குடிதண்ணீர் வசதிகள் இன்ன பிறவற்றை அமைத்தும், பேணி யும் செயல்படுவதற்காக ஏற் பட்டவைகள்.

மக்கள் நலன் வளர்த்து, மக்கள் ஆட்சி சிறக்கச் செய் வது தான் ஊராண்மை, நக ராண்மை, மாவட்டக் கழகங் கள் ஆகியவற்றின் பணி.

நமது அமைச்சர் பெருமக்கள் அனைவரும், திரு. காமராஜ் உள்ளிட்டு, ஊர், ஊராக, "ஸ்தலஸ்தாபன அமைப்பு களுக்குப் பூரண அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளதாகவும் அவற்றிலே தலையிடும் உரிமை தங்களுக்கு இல்லை" என்றும் பறை சாற்றி வருகின்றார்கள்.

ஆனால், உண்மை நிலை என்ன ?

அக்கழகங்கள், தீர்மானத் தயாரிப்பு இயந்திரங்களாக மாத்திரம் விளங்கும் அலங் கோலமான நிலையையே நாட் டிலே நாம் பார்க்கிறோம். அவர் கள் நிறைவேற்றும் தீர்மானங் களை மாற்றும் அதிகாரம் கூட அமைச்சருக்கு உண்டு! இதுவா அதிகாரக்குவிப்பைத் தடுக்கும் முறை ! இதையா காந்திஜி வேண்டினார்?

சாதாரணமாக, ஒரு சாலை அமைக்க வேண்டுமென்றால் அல்லது புதிய தொழிலொன்று துவங்க வேண்டுமென்றால், நகர அமைப்பு இயக்குநர் (Director of Town Planning), பொது நல இயக்குநர் (Director of Public Health) ஆகியோர் அனுமதி பெறப் படவேண்டும்.

ஒரு சாலை போட ஒரு நகர சபை அங்கத்தினர் திட்ட மிட்டால், இவர்களது அனு மதி வேண்டும். இவர்கள் அனுமதியும் கிடைத்த பிறகு, ஸ்தலஸ்தாபன நிர்வாகத்திற் கும், அந்தக் கழகத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாது, நூற்றுக்கணக்கான மைல் களுக்கு அப்பால் சென்னை யிலே அலுவலகம் வைத் துள்ள என்ஜினியரிங் இலாகா வின் அனுமதியும் பெறப்பட வேண்டும். அதற்குள்ளாக நகரசபை அங்கத்தினரின் பத விக்காலம் முடிந்தே விடும் !

அது மாத்திரமா ? ஸ்தல ஸ்தாபனத்தின் பள்ளி ஆசிரி யர்கள், மருத்துவமனை ஊழியர் கள் போன்றவர்களுக்கு ஊதி யம் கொடுப்பது ஸ்தல ஸ்தா பனங்களின் பொறுப்பாக இருக்க, அவர்களது நடவடிக் கைகளைக் கண்காணிக்கும் அதிகாரம் பிற இலாகா அதி காரிகளிடம் விடப்பட்டுள்ளன.

ஸ்தல ஸ்தாபன மேற் பார்வையாளர் (Inspector of Local Boards) கூட பிற இலா காச் சிப்பந்திகளைக் கண் காணிக்க முடியாது !

குடி நீர் திட்டம் ஒன்று திட்டு வதாக வைத்துக் கொண்டால், பணத்தில் பெரும் பகுதியை ஸ்தல ஸ்தாபனம் வழங்க, திட்டத்தை நிறைவேற்றும் வேலையைச் சுகாதாரப் பொறி

யாளர் (Sanitary Engineer) மேற்கொள்ளுகிறார்.

இந்த வெள்ளையன் ஏற்படுத்திய பழைய ஏகாதிபத்ய 'இரட்டையாட்சி' முறையில் தேய்ந்து போன பழைய பாதையிலேயே செல்லும் நாட்டுப்புறத்து வண்டிமாடுகள் போல, நமது நிர்வாகத்தினரும் நன்ருக ஊறிப் போய், தளர் நடை போட்டு வருகிருர்கள்!

இந்த முறையால் ஸ்தல ஸ்தாபன இலாகாவின் வேலை பெரும்பாலும் தபால் பெட்டிகளைப் போல இயங்குவதிலேயே அடங்கி விடுகிறது! எந்த முன்னேற்றத் திட்டத்திற்கும் "நடைமுறைஅனுமதி" (administrative sanction) பிற துறைகள் வழங்க வேண்டியிருப்பதால், கோரிக்கைகளைப் பிற துறைகளுக்கு அனுப்பும் தபால்காரர்களாக, ஸ்தல ஸ்தாபனத் துறையின் அலுவலர் இயங்குகின்றனர்! எனவே பெருகிவரும் திறமையின்மையோடு, திறமை மிக்காருக்குச் சந்தர்ப்பமின்மையும் சேர்ந்து கொள்கிறது!

பின்னும் காலதாமதமும், ஊழல்களும் மிக, மிக அதிகமாகின்றன!

உதாரணமாக, திண்டிவனம் நகராட்சி மன்றத்தின் கட்டிடம் சம்பந்தமான ஒரு திட்டத்தை, நகர அமைப்பு இயக்குநரும், பொது நல இயக்குநரும் அங்கீகரித்து அனுப்ப எட்டு ஆண்டுகள் எடுத்துக் கொண்டுள்ளனர்!

திருநெல்வேலி மாவட்டக் கழகம் அனுமதி கொடுத்து இரண்டாண்டுகள் நடைபெற்ற பிறகு, உடனடியாக மூடும்படியாக பன்னம் பாறைதீப் பெட்டித் தொழிற்சாலைக்கு உத்திரவு வருகிறது! அத்தொழிற்சாலையின் நூற்றுக்கணக்கான ஊழியர்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்!

முதலமைச்சரின் சொந்த ஊராகிய விருதுநகரிலேயே, நகராண்மைக் கழகம் தேர்ந்தெடுத்த ஓர் தொழில் பகுதியையே நிராகரித்து 3 வருடங்களுக்குப் பிறகு உத்திரவு வருகிறது!

* * *

'டெல்லியிலே உள்ள அதிகாரம், கிராமத்திற்கு வந்தால் தான் கிராம சுயராஜ்யம் வரும்; ஜனநாயகம் தழைக்கும்' என்று விேனுபா பாவே சொல்கிருர்.

சென்னையிலுள்ள அதிகாரமே இன்னும் கிராமத்திற்குச் செல்லவில்லையே? பிறகல்லவா, டெல்லியைப் பார்க்க வேண்டும்!

மக்கள், அரசியல் சுதந்திரத்தைத் தொடர்ந்து விரைவில் சமுதாய சுதந்திரம் வரும், என்று கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து விட்டார்கள். எனவே, உடனடியாக அரசாங்க இயந்திரத்தைச் சீரமைத்தாக வேண்டும்.

இதோ சில யோசனைகள்!

முக்கிய துறையாகிய ஸ்தல ஸ்தாபனத்துறையின் இயக்குநராகிய ஸ்தல ஸ்தாபன மேற்பார்வையாளரிடமே, ஸ்தல ஸ்தாபன பயிற்சி பெற்ற சிப்பந்திகளைக் (Technical Staff) கண்காணிக்கும் பொறுப்பை

விடல் வேண்டும். ஸ்தல ஸ்தாபனத்திலுள்ள எல்லா வேலைகளுக்கும் மேற்பார்வையாளரே பொறுப்பாளியாக இருக்க வேண்டும்.

அரசாங்கம், பயிற்சி பெற்ற சிப்பந்திகளின் தலைமையை எவ்வாறு இப்படி மாற்றுவது? என்று கேட்கலாம்.

ஆனால், இந்த எல்லா 'டெக்னிகல்' சிப்பந்திகளையும் வேலை வாங்கும் அமைச்சர்களோ, அல்லது காரியதரிசிகளோ உண்மையில் அதற்கு பயிற்சி பெற்றவர்களா? இல்லையே! எனவே, அதே விதி, எமது யோசனைக்கும் பொருந்தும்.

ஸ்தல ஸ்தாபனங்களிடம் அதிக அதிகாரங்கள் வழங்கப் படல் வேண்டும்.

ஸ்தல ஸ்தாபனங்கள் நெறி மீறிவிடாது பார்த்துக் கொள்ள அமைச்சர்களிடம், 'தீர்மான ரத்து' அதிகாரம் மாத்திரம் இருப்பதை நாம் தவருகக் கருதவில்லை.

* * *

ஸ்தல ஸ்தாபனத்தைப்போல மற்ருரு முக்கிய இலாகா கூட்டுறவு இலாகாவாகும்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பது பலரின் நாவு முனையிலே அடிக்கடி நடமிடும் வார்த்தைகள். காங்கிரஸ் கட்சியும், தனது பழைய சட்ட திட்டத்தில், நாட்டை 'கூட்டுறவு காமன்வெல்த்' ஆக்கவே திட்டமிட்டது.

கூட்டுறவில் சென்னை மாநிலம் முன்னணியில் இருப்பதாக நாம் பெருமைப்படுவதுண்டு. பேப்பரிலே புள்ளி விவரங்களைக் கண்டு பூரித்துக் கொள்ளவும் செய்கிருேம்.

இரண்டாவது திட்ட காலத்தில் இந்தியாவின் 80% கிராமங்கள், கூட்டுறவுக் கழக வசதிகளைப் பெற்று இருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அத்திட்டத்தில் சுமார் 75 சதவிகிதம் இப்பொழுதே நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும் பிரசாரம் செய்யப்படுகிறது.

ஆனால், ஏட்டிலே சொல்லுகின்ற புள்ளி விவரத்திற்கும், நாட்டிலே காணப்படும் நடைமுறைக்கும் பெரும் வேறுபாடுகள் உள்ளன என்பது வெளிப்படை.

நமது "நிர்வாகத்தை நேராக்குக!" என்ற (டிசம்பர்—57 மாதத்) தலையங்கத்தில் இது குறித்து நாம் சுருக்கமாக விளக்கி இருக்கிருேம்.

நமது மாநிலத்தைப் பொறுத்த அளவில், நீதிக் கட்சி வெள்ளையரின் செல்லப் பிள்ளையாக இருந்து ஆட்சி பீடத்தை அலங்கரித்த நேரத்தில், தங்களுக்கு வேண்டிய சிலருக்கு உதவுவதற்காக ஏற்படுத்திய இயக்கம் தான், கூட்டுறவு இயக்கமாக நமது நாட்டில் புனிதமான பெயரோடும், அதற்குப் பொருந்தாத நடைமுறையோடும் தோன்றியது.

ஒரு சிலர், ஒரு சில குடும்பங்கள், ஒரு சில வகுப்பாரின் முன்னேற்றம் என்பதாக அதன் குறிக்கோள் சுருங்கி,பொது மக்களுக்கும், இந்தப் புதிய கூட்டுறவு முதலாளித்வ இனத்திற்கும் வேறுபாடு விரிவடைந்து கொண்டே வந்தது.

கூட்டுறவு இயக்கம் கூடகோபுரங்களில் சேர்ந்து வளர்ச்சி குன்றிப் போயிற்று; குடிசை வாழ்வோரை அடைந்து

பொதுமக்கள் இயக்கமாகப் பொலிய வில்லை.

சிலர், சில குடும்பத்தார், சில இனத்தாரின் தனி உரிமைச் சொத்தாக மாறிவிட்ட சத்தில்லா இக்கூட்டுறவைப் பேணி வளர்க்கச் செய்யப்பட்ட சட்டங்கள்—பழைய சட்டங்கள்—நீதிக்கட்சிகாலச் சட்டங்கள்—இன்னும் நேராக்கப்படவில்லை; அவைகளின் கூன் நிமிர்த்தப்படவில்லை; சிலரது உடைமையாக இருப்பதை மக்கள் சொத்தாக மலரச் செய்யும் மாற்றங்கள் சுதந்திரம் வந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் நடைபெறவில்லை என்பது வேதனைக்குரியதன்றோ?

உளுத்துப்போன சட்டத்தை உதறித் தள்ளும் மனப்பான்மை இன்னும் ஏனோ மந்திரிகளுக்கு வரவில்லை!

பழைய சட்டங்களோடு செய்யப்படும் இன்றைய கூட்டுறவுச் சங்கத்தில் குடிசை வாழ்வோரோ, அல்லது பொதுநல மனம் கொண்ட ஒரு சோஷலிஸ்டோ அங்கத்தினராக வர மனுச் செய்தால், அவரது மனுவை நிராகரிக்கும் உரிமையை இச்சனநாதனச் சங்கங்கள் பெற்றுள்ளன!

எனவே புதுமை விரும்பிகளை உள்ளே புகவே விட மறுக்கும் 'மூடிய கதவுக் கொள்கையை' (Shut-out policy) பழமைத் தாசர்கள் கையாண்டு வருகிறார்கள்!

நம் போன்றவர்களின் கிளர்ச்சியால், மாட்சிமை தங்கிய மாநில அரசியலார் ஒரு சிறு திருத்தத்தை மனமார வழங்கினார்கள். அதன்படி, நிராகரிக்கப்பட்ட மனுதார், சென்னையில் உள்ள கூட்டுறவு ரிஜிஸ்திராருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம் என்று கருணை காட்டியுள்ளார்கள்!

எத்தனை ஏழை அங்கத்தினர்கள் சென்னைக்கு வரவும், வழக்காடவும் வசதி பெற்றவர்கள்? கோட்டையிலே இருந்து சட்டமியற்றும் கோமான்களின் நடைமுறை அறிவுப் பஞ்சத்திற்கு இது மற்றொரு வெள்ளிடைமலையான எடுத்துக் காட்டு!

கூட்டுறவு இயக்கத்தின் அங்கத்தினர்களைச் சேர்ப்பதில் தாராளமாக இருந்தால், இயக்கத்தை எதிர்ப்போரும் உள்ளே புகுந்து அதை அழித்து விடுவார்கள் என்று அரசாங்கம் வாதிடலாம்.

பிறக்கப் போவது ஆணா, பெண்ணா என்று எவ்வாறு சோதிடம் கூற முடியாதோ, அதே போல வரப்போகின்றவர் கூட்டுறவை தாழ்த்துவாரா, என்று அவரை அங்கத்தினராக அறியு முன்னரே தீர்ப்பு தருவது ஒருதலைப் பட்சமானதல்லவா?

அவர் ஒரு வேளை கூட்டுறவு இயக்கத்தின் விரோதியாக, அங்கத்தினராக ஆன பிறகு காட்சியளித்தால் அவரை வெளியேற்ற விதி முறைகள் இருப்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. 'மூடிய கதவுக் கொள்கை'யையே நாம் கண்டிக்கிறோம்.

இக்குறைபாடு, கூட்டுறவு இலாகாவில் காணப்படும் பல வற்றில் ஒரு சிறு எடுத்துக்காட்டே. ஆண்டுபல ஆகியும் பதில் கிடைக்காத நிலை, அரசாங்க இலாகாவான இத்துறை தனியார் சிலரின் ஏகபோகமாக விளங்கும் இழிந்த போக்கு.

இவற்றை இன்று நாட்டு மக்கள் வெளிப்படையாகவே பேசிக் கொள்கிறார்கள்.

கன்னியா குமரியில் அண்மையில் நடைபெற்ற தமிழக காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள் சிலரே இவற்றையெல்லாம் ஒப்புக் கொண்டு, வேண்டிய மாறுதல்கள் செய்வதாக வாக்குறுதி அளித்தனர்.

வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்பட்டதாக அறிகுறிகள் என்னவோ காணவில்லை!

காந்திஜியின் ராம ராஜ்யம், கிராம சுய ஆட்சி ஏட்டளவிலே இல்லாது நாட்டுக்கு நடைமுறை ரீதியிலே வர, ஸ்தல ஸ்தாபன, கூட்டுறவுத் துறைகள் மாற்றியமைக்கப்படல் அவசியம்.

அதுவரை ராம ராஜ்யம் ஏற்பட்டதாகக் கூறிக் கொள்வது நாட்டை ஏமாற்றுகிறோம் என்பது மாத்திரமல்ல; நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதும் ஆகும்!

"ஹிந்து" - சில ரகசியங்கள்!

தமிழன் பெருமைப்பட வேண்டிய ஒரு சாதனை, "ஹிந்து". உலகெங்கும் நிருபர்களை அமைத்து, சிறந்த முறையில் நீண்ட காலமாகத் தொண்டாற்றிவரும் பெருமை பெற்ற ஏடல்லவா அது!

இங்கிலாந்தின் காமன்ஸ் சபையிலும், அமெரிக்க செனட்டிலும் மேற்கோளாகக் காட்டப்படக்கூடிய அளவு, புகழ்பெற்ற பத்திரிகை "ஹிந்து".

உலகமெங்கும் வாசகர்களைக் கொண்ட, இந்திய எண்ணப் போக்கைப் படம்பிடிப்பதாக அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்பான இதழ் "ஹிந்து".

நமது நாட்டில் காலையில் காப்பி குடிப்பதைப் பெரும்பாலோர் எவ்வாறு கடமையாகக் கொண்டு ஒழுகுகிறார்களோ, அதே அளவிற்குப் பக்தி, சிரத்தையோடு படிக்கப்படும் இசை வாய்ந்த நாளிதழ் "ஹிந்து".

ஏறத்தாழ எண்பது ஆண்டுகளாக உலாவி வரும் தொன்மையான வரலாறுகொண்ட ஸ்தாபனம் "ஹிந்து"

அதே "ஹிந்து", கடந்த மாதத்தில் சில நாட்கள் நிறுத்தப்பட வேண்டிய ஒரு நிலை வந்தது என்றதும் நாடே திடுக்கிட்டது. ஏன்? எதற்காக? என்ற கேள்விக் குறிகள் எழுந்தன.

தமிழகத்தின் எல்லாப் பத்திரிகைகளும் இது குறித்துத் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூறி விட்டன.

ஆனால்யாரும் கூறத்துணியாதசில இரகசியங்களை, இரகசிய உண்மைகளை வெளிப்படுத்தவே, நாம் இச்சிறு தலையங்கத்தைத் தீட்டுகிறோம்.

* * *

சுதந்திரமான ஒரு நாட்டிலே, ஜனநாயகக் குடியரசு என்று வர்ணிக்கப்படும் ஒரு தேசத்திலே, தொழிலாளர், முதலாளிகள், பொதுமக்கள் எல்லோருக்கும் சில உரிமைகளும், கடமைகளும் உண்டு. இது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால், நாட்டிலே சில காலமாக, உரிமைகளை வற்புறுத்துவோர், தங்கள் கடமைகளைப் புறக்கணிக்கும் மாபெரும் தவறைச் செய்து வருகிறார்கள்.

'உனக்கு கைத்தடியை வைத்துக் கொள்ளவும், மாலை வேளையில்

உலாவச் செல்லவும், அப்படிச் செல் கையில் கைத்தடியை உற்சாகமாகச் சுழற்றவும் உரிமை உண்டு. ஆனால் உன் அருகிலே வருபவரது மூக்கு நீளமாக இருப்பதை மறந்துவிடக் கூடாது' என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழி உண்டு.

மூக்கை நீளமாகப் பெற்றிருப்பது உனது பக்கத்திலே வருபவரது உரிமை.

ஆகவே உனது கைத்தடி, அவரது மூக்கோடு உறவாடும் எல்லைவரை செல்லக்கூடாது, உனதுஉரிமையின் அளவு என்பது அதன் பொருள்!

இந்த அடிப்படை உண்மை பலருக்கு நமது நாட்டில் தெரியாது; தெரிந்த பெரியவர்களே, அதை மதியாதிருக்கையில், அறியாதார்கள் அதைக் கடைப்பிடிக்காதிருப்பதில் என்ன ஆச்சரியம் உள்ளது!

நமது உரிமையோடு, அடுத்தவர் உரிமையையும் சேர்த்து ஒன்றாக எண்ணாத நிலை வருகையில்தான், தகராறுகள் முளைக்கின்றன.

இந்த உண்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு, "ஹிந்து" வேலை நிறுத்தமும், அதன் எதிரொலிகளும். அரசியல்சட்டப்படி, தொழிலாளர்கள் சங்கமமைக்கவும், சாத்தியமான முறைகளிலெல்லாம் பார்த்துக் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாவிட்டால் வேலை நிறுத்தம், அமைதியாக மறியல் செய்யவும் உரிமை பெற்றவர்கள். இந்த உரிமை யாயுதத்தைத் தொழிலாளர்கள் உபயோகிக்க நேர்ந்த நேரத்திலேதான், 'தங்களது உரிமைகளை அரசாங்கம் மதிக்கவில்லை' என்ற கூக்குரலை "ஹிந்து" அதிபர்கள் எழுப்பினார்கள்.

தொன்மையான "ஹிந்து", தொல்லுலகம் எங்கும் செல்லும் "ஹிந்து", தனது சொந்த வீட்டில் சில குறைகளைக் கொண்டுள்ளது என்ற உண்மைகள் இந்த வேலை நிறுத்தத்தில் வெளியாயின.

நீண்ட காலமாக நடந்து வரும் "ஹிந்து" பத்திரிகையின் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் தொழிற் சங்கம் அமைக்கும் அடிப்படை உரிமையைக்கூட இழந்து, துணிவின்றி நெடுநாள் வாடி இருக்கிறார்கள்.

முடிவிலே, ஒரு சிலரின் அச்சத் தெளிவால் 1956லேதான் தொழிற் சங்கம் "ஹிந்து" தொழிலாளர்கள் நேஷனல் பிரஸ் சிப்பந்திகளால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது! 19-வது நூற்றாண்டிலே தொடங்கிய பத்திரிகையின் ஊழியர்கள், 20-வது நூற்றாண்டிலே சங்கம் அமைத்து விட்டார்கள்!

இவ்வளவு நாள் இல்லாத புதுமையாகத் தொழிலாளர் காட்டிய புத்துணர்ச்சியைக்கண்ட நிர்வாகம், பழிவாங்கும் நடவடிக்கைகளைத் துவங்க ஆரம்பித்தது.

சங்கத்தைத் துவங்கிய தலைவர்களில் ஒருவரான உதவி ஆசிரியர் திரு. நரசிம்மன், (நேஷனல் உயர் நிலைப்பள்ளி ஸ்தாபகர் திரு. திருமலாச்சாரியாரின் மருமகன்) தொழிற் சங்கத்திற்குத் தலைமை தாங்கினார் என்பதற்காக, அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாது, வேறு ஏதோ காரணம் கூறி, வேலையில் இருந்து நீக்கப்பட்டாராம்.

அவரைப் போலவே இன்னும் பலர் பழிவாங்கப்பட்டார்கள் என்றும் தெரிகிறது

தொழில் தகராறுகளைச் சமரசமாக, தொழில் கமிஷனர் போன்ற நடுவர்களைக் கொண்டு தீர்த்துக் கொள்வதுதான் விவேகமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட எந்த முதலாளியும் செல்லும் இன்றைய நாகரீகம் நிறைந்த பாதை.

ஆனால் "ஹிந்து" நிர்வாகமோ இப்பொழுது முடிவடைந்த ஸ்டிரைக் வரை வேறு எந்தத் தகராறையும் நேரடிப் பேச்சு வார்த்தை மூலமாகத் தீர்த்துக் கொள்ளவில்லை என்ற பெருமையைப் பெற்றுள்ளதாம்! எந்தத் தகராறையும் லேபர் கோர்ட்டுக்கும், ஹைகோர்ட்,

சுப்ரீம் கோர்ட்டுக்கும் கொண்டு செல்வதே அவர்கள்பாணியாம்;அது மாத்திரமல்ல, தொழிலாளர்களின் சட்டபூர்வமான சங்கத்தையும் இது வரை அங்கிகரிக்கவில்லை என்றும் அறிகிறோம் !

அதோடு, அதைவிட ஒரு படி முன்னேறிச் சென்று, போட்டிச் சங்கம் ஒன்றையும் உருவாக்கியிருக்கிறார்களாம் !

முதலாளிகளின் பாதையிலே செல்லும் போட்டிச் சங்கத்திற்கு அடிக்கடி பல வடிவங்களில் "ஷொட்டுகள்" வழங்குவதையும், அதிபர்கள் தங்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனராம்! இத் தொழிற் சங்கம் ஏற்படு முன்னர் சாதாரணத் தொழிலாளியின் அடிப்படைச் சம்பளம் ரூ. 13 ஆக இருந்ததென்று அறிந்தபோது "ஹிந்து" வின் "தாராள" மனப்பான்மையை பாராட்டாது இருக்க முடியவில்லையே ! அடேயப்பா ! 13 ரூபாய் ! எவ்வளவு பெரிய தொகை !

பின்னர்தான், தொழிலாளர்கள் ஒற்றுமை வலுப்பெற்று, குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளம் ரூ. 13 லிருந்து ரூ. 27 ஆகத் தொழில் கோர்ட் தீர்ப்பால் உயர்த்தப் பெற்றதோடு, பல சலுகைகளும் கிடைத்தன என்று சொல்லப்படுகிறது.

எப்படியாவது தொழிலாளர் ஒற்றுமைக்கு வேட்டு வைக்க வேண்டுமென்று "ஹிந்து" நிர்வாகம் முயன்றுவந்ததற்குச் சான்றாக அவர்கள் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் விஷயத்தில் நடந்து கொண்ட முறையை எடுத்துக் காட்டிப் பேசுகிறார்கள்.

கூட்டுறவு நாணயச் சங்கத்திற்கு அங்கத்தினர் சம்பளத்தில் பிடித்தம் செய்து அளிக்க வேண்டிய பங்கை, நிர்வாகத்தினர் தங்களது 'பாக்கெட் சங்கத்திற்கு' மாத்திரம் வசூலித்துக் கொடுத்தார்களென்றும், அதனால் அதற்காகவே சென்னை

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—: பெருஞ்சினம் :—

"சக்கரவர்த்தி யென்றே—மேலாந்
தன்மை படைத் திருந்தோம் ;
பொக்கென ஓர்கணத்தே—எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய் !
நாட்டை யெல்லாந் தொலைத்தாய் ;—அண்ணே !
நாங்கள் பொறுத் திருந்தோம் ;
மீட்டும் எமை யடிமை—செய்தாய்,
மேலும் பொறுத் திருந்தோம்.
துருபதன் மகளைத்—திட்டத்
துய்ம னுடற் பிறப்பை,
இரு பகடை யென்றாய்,—ஐயோ !
இவர்க் கடிமை யென்றாய் !
இது பொறுப்ப தில்லை,—தம்பி !
எரி தழல் கொண்டு வா
கதிரை வைத் திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடு வோம்"

—"பாஞ்சாலி சபதம்"

அரசாங்கம் கூட்டுறவுச் சட்ட விதியைத் திருத்த நேர்ந்ததென்றும் தெரிகின்றது.

இந்தத் திருத்தத்திற்கு ஜனாதிபதியின் சம்மதம் அளிக்கப்படாமல் தடுக்க டெல்லிக்குக் காவடி எடுத்ததாம் 'ஹிந்து' முதலாளித்துவம்!

ஆனால், அவர்களுக்கு ஓர் பேரிடியாக, தொழிலாளர்களுக்கு வாடிய நிலத்திற்கு வரும் பெரு மழையாக, அச்சட்டத்திற்கு சம்மதம் ஜனாதிபதியால் அளிக்கப்பட்ட செய்தி, ஜூலை மாதம் 30-ந் தேதிதான் கிடைத்தது.

இந்த ஏமாற்றம் காரணமாக நிர்வாகம் சீறத் தொடங்கியதாம்; அன்றே அதன் எதிரொலி கிளம்பியது.

தொழிலாளர் சங்கத்தின் உபதலைவரான ஸ்ரீ பாலசுந்தரத்திடம் அன்று அவரது வேலை நாள் இல்லை என்றும், அவரது வேலைத் திட்டம் மாற்றப்பட்டு, அன்று அவருக்கு வாராந்திர விடுமுறை என்று தெரிவித்தார்கள். அதற்குஅவர், "அன்று ஏற்கெனவே சிறிது வேலை செய்து விட்டதால், அன்று தொடர்ந்து செய்து விடுவதாகவும், சட்டத்துக்கு முரண் இந்த உத்திரவு" என்பதையும் எடுத்துக் காட்டினர். உத்திரவை மீறிய குற்றம் சாட்டப்பட்டு, அவருக்குச் சீட்டு கிழித்தார்களாம்!

தொழில் சட்டம் பிரிவு 9 (A)படி தொழிலாளரின் விடுமுறை நாளை மாற்ற 21 நாள் நோட்டீஸ் வேண்டும்; பாக்டரி சட்டத்தின் பிரிவு 61 (10) படி ஒரு வார நோட்டீஸின்றி வார விடுமுறை மாற்றப்படுவது தவறு. இச்சட்டங்களை, "ஹிந்து" நிர்வாகம் உடைத்துவிட்டது. இத்தகராறு இப்பொழுது கோர்ட்டின் முன் இருப்பதால் விரிவாக விளக்க நாம் விரும்பவில்லை.

தங்களது உபதலைவருக்கு நேர்ந்த கதி கண்டு கலங்கிய தொழிலாளர்கள், வேலை நிறுத்தத்தில் இறங்கினர்கள்.

தகராறு முற்றியது கண்டும், சமரசத்தை நாடும் நாட்டமின்றி, நிர்வாகம் போலீஸைக் கூப்பிட்டது.

போலீஸார், தங்களது பணியைச் சரிவர உணராது, "ஹிந்து" அலுவலகத்தின் சாதாரண வேலைகளை அன்றிரவு செய்தனராம்.

அத்துடன் தொழிலாளிகள்மீது தடியடியும் செய்யப்பட்டதோடு சிலரைக் கைதும் செய்தார்களாம். தடியடியில் காயம்பெற்ற திருவாளர்கள் ஆர்.வி. ராமச்சந்திரன், பி.ஏழுமலை, என். ஏ. ராமச்சந்திரன், கே.சென்ன கேசவலு, எம். நாராயணன் ஆகியோர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிக்சை பெற்றுர்கள் என்றும் காயமுற்ற திரு. டி. நரசிம்மலுவை 'எக்ஸ்ரே' எடுத்ததாகவும் தெரிகிறது. மேலும் பலரும் காயமுற்றதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

போலீஸார் சில தொழிலாளர்களைக் காரியாலயத்துள் கடத்தவும் செய்தார்களாம்!

எனவே,தொழிலாளர்கள் போலீஸாரின் விபரீதப் போக்கு குறித்து அரசாங்கத்திடம் முறையிட்டனர். அரசாங்கம் உடனே போலீஸார், "முதலாளிகளின் உயிர், உடமை பாதுகாப்பிற்கு மாத்திரமே என்றும், ஸ்டிரைக்கை ஒடுக்கவோ, தொழிலாளர் சமாதான மறியலைத் தடுக்கவோ செல்லவில்லை" என்றும் அறிவுறுத்தினர்கள்.

இந்த முடிவோ, ஸ்ரீயான் பார்த்தசாரதி அய்யங்கார் காலத்திலே, அவரது தலைமையில் கூடிய அதிகாரிகள் மாநாட்டின்போது தீர்மானிக்கப்பட்டதாகும்.

எனவே போலீஸின் போக்கு மாறியது. அவர்கள் கடமையை உணர்ந்தனர். ஸ்டிரைக் வெற்றி கண்டது.

ஆனால்...'ஹிந்து" தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாகப் பலவேறு தொழில் சங்கங்களும் ஊக்கம் காட்டின. அவர்களில் ஒரு

சிலர் பலாத்காரத்தில் ஈடுபட்டதாவும் அறிந்து வேதனையுறுகிறோம். பலாத்காரச் செயல்கள் எத்தரப்பிலே நிகழ்ந்தாலும் தூற்றப்படவேண்டியவை.

* * *

இதுதான் சுருக்கமாக "ஹிந்து"வில் நடந்த வேலை நிறுத்தத்தின் விளக்கம்.

ஆனால் இதைத்திரித்து "இரட்டை வேட நாடகம்" ஒன்று நடிக்கிறார்கள் சிலர்.

சென்னையில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமனைப் பழிக்கிறார்கள். டெல்லியில் பிராமண "ஹிந்து"வை, காமராஜ் ஒடுக்குகிறார் என்று கூக்குரலிடுகிறார்கள்.

இது அழகல்ல; இவ்வாறு நடப்பதை "ஹிந்து" நிர்வாகம் தனக்குத் தெரியாது என்று சொல்லும் நிலையிலிருந்தாலும், இந்நடிப்பின் தீமையை பகிரங்கமாகக் கண்டிப்பதே நியாயம்.

மேலும் புகழ்பெற்ற "ஹிந்து" பத்திரிகை இந்த அளவு துன்ப நிலைக்குச் சென்றிருக்க வேண்டாம், முதலமைச்சர் முதலில் கூறிய மொழிகளைக் கேட்டிருந்தால்.

"எல்லாத் தகராறுகளையும் கோர்ட்டுக்கு விட்டுத் தீர்த்துக் கொள்ளுங்கள்!" என்ற இருதரப்புக்கும் நீதியான அவரது தீர்ப்பை அலட்சியம் செய்ததால்தான் இந்த அனுபவம் அவர்களுக்கு ஏற்பட்டது. அப்பொழுது அவர் வேண்டியதைவிட மிக அதிகமாகவே இப்பொழுது விட்டுக் கொடுத்துள்ளார்கள், "ஹிந்து" நிர்வாகத்தினர்.

இதிலும் நமக்கு ஒரு ஆறுதல். "ஹிந்து" நிர்வாகத்திலேயே ஓர் முக்கிய உறுப்பினர் திரு. பார்த்தசாரதி ஆரம்பமுதல் தொழிலாளர் கட்சியை ஆதரித்து வந்ததாகக் கேள்விப்பட்டு அவரது நியாய புத்திக்கு நமது பாராட்டுக்கள்.

முடிவாக ஓர் வார்த்தை. எரியும் வீட்டிலே கொள்ளி பிடுங்கும் சில 'அரசியல் மேல் தாவிகள்' தங்கள் புத்திசாலித்தனத்தை இந்த துர்ப்பாக்கியவசமான வேலை நிறுத்த

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

— அற்புதம் —

"பார், சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ! இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்!—செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்!—வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்!—பாரடீ!
நீலப் பொய்கைகள்!—அடடா, நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை!—கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிகரங்கள்!—காண்டி, ஆங்கு
தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்!—ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!"

—"பாஞ்சாலி சபதம்"

நேரத்திலே காட்டிக் கொண்டது குறித்து நினைப்பின் நகைப்பு வருகிறது.

"மாநிலத் தலைமையை மாற்ற இதுவே மணியான நேரம்" என்று "ஹிந்து" அதிபர்களிடம் சென்று "பந்தலிலே பாவக்காய்" என்று மாரடித்தார்களாம் !

தலையங்கங்கள் வேறு சர்க்கார் இதுபோல நடந்தால் "காங்கிரஸை பாதிக்கும்" என்று எழுதுகிறார்களாம்.

நீதியும், நேர்மையும் செய்யும் நேரத்திலே அதன் விளைவாக காங்கிரஸ் பாதிக்கப்பட்டால், உண்மையான காங்கிரஸ்வாதி கவலைப்பட மாட்டான் என்பதை அவர்கள் சிந்தனைக்குள் செலுத்த ஆசைப்படுகிறோம் !

காலம் மாறிவிட்டது. இது 20-ம் நூற்றுண்டு. மாறும் காலத்திற்கேற்ப நமது கருத்துக்களை அமைத்துக் கொள்வதே அறிவுடைமை.

இதை இனியாவது "ஹிந்து" நிர்வாகம் உணரட்டும் !

★

அட்டைச் சித்திர விளக்கம்

இந்த இதழ் அட்டைச் சித்திரமாக பாரதியாரின் 'ஞானரத'த்தில் நிகழும் கந்தர்வ லோகக் காட்சி, நமது ஓவியரால் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

பாக்டரி: **தச்சநல்லூர்** போன்: **195**
தந்தி: **ரோல்மில்**

நெல்லை மெட்டல் ரோலிங் மில்ஸ் (பிரைவேட்) லிட்.

111, அம்மன் சன்னதி தெரு, திருநெல்வேலி டவுன்.

பிராஸ் சர்க்கிள்கள், எல்லா டையாமீடர்களிலும், பல்வேறு அளவுகளிலும், சிறிய பட்டாக்களுமாக நாங்கள் தயார் செய்கின்றோம்.

தென்னிந்தியாவில் உள்ள பித்தளைச் சாமான் உற்பத்தியாளரிடம் இருந்து எங்கள் தயாரிப்புகள் உத்திரவாதத்திற்குப் பேர்போனதென்றும், சிறந்தவை என்றும் பாராட்டுதலை பெற்றுள்ளோம்.

வட இந்தியாவிலுள்ள, ஜாகத்ரியிலிருந்து தேர்ந்த வேலையாட்களைக் கொண்டு வந்து முதல்தரமான சர்க்கிள்களையும், ஷீட்டுகளையும் எங்கள் பாக்டரிகளிலேயே தயார் செய்கின்றோம்.

தென்னிந்தியாவின் பித்தளை சாமான் செய்பவரிடமிருந்தும், பித்தளை வியாபாரிகளிடமிருந்தும் அன்பான ஆதரவை வேண்டுகின்றோம்.

K. யக்ஞசங்கர நாராயண ஐயர்
P. தில்லைவனம் பிள்ளை,
டைரக்டர்கள்.

எட்டயபுரம் திருவிழா!

"பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேணும்" என்று பாடினன் பாரதி.

பாரதியின் பாலிக்கும் திறமையும், பாட்டுத் திறமையும எவ்வளவு அளவிற்கு வெற்றி அடைந்து உள்ளது என்பதை, அவன் மறைந்த பிறகு தமிழர்கள் பாராட்டும் முறைகளைக் கொண்டுதானே நாம் மதிப்பிட வேண்டும்?

'காணி நிலம் வேண்டும்' என்று கேட்ட கவிஞனுக்கு மணி மண்டபம் அமைத்து ஆண்டு தோறும் தமிழர்கள், தங்கள் நன்றிக் கடனை விழாக்கள் வழியிலே தீர்த்து வருகிறார்கள்.

அந்த முறையிலே இந்த ஆண்டு பாரதி விழா தமிழகத்தின் கலைஞர் பெருமக்களால் எடுக்கப்படுகின்றது. தமிழகத்தின் நேரும், நிகருமற்ற தனிப் பெரும் நடிகர் திரு. சிவாஜி கணேசன் இந்த ஆண்டு விழாவில

(விழாத்தலைவரும், நம் ஆசிரியரும்)

பெரும் பொறுப்பை ஏற்றுள்ளார். அவரோடு, கலைஞர்கள் ஏ. பி. நாகராஜன், டி. கே. சண்முகம், எம்.ஏ. வேணு, எஸ். வி. சகஸ்ரநாமம், டி. என். சிவதாணு, யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை ஆகியோர் ஒத்துழைத்து வருகிறார்கள். நெல்லை மாவட்டத்தின் பிறதுறைப் பிரமுகர்களும் இப்பணியிலே ஈடுபட்டுள்ளார்கள்.

இலக்கியச் சுவையும், கலைகளின் விருந்தும் பாரதி ரசிகர்களுக்கு செப்டம்பர் 11, 12 ஆம் நாட்களில் எட்டயபுரத்தில் வழங்கப்பெறும்.

பாரதி ரசிகர்கள் இப்பெரு வாய்ப்பைப் பயன்படுத்தி எட்டயபுரத்தில் திரளாகக் கூடுவார்களாக! வாழ்க பாரதி நாமம்! வளர்க தமிழ்! வெல்க தாயகம்!

விழாக் காரியதரிசி

திரு டி. என். சிவதாணு


பெரியார் மின் நிலையம்
பாரதி
கண்ட
பாரதம்
நங்கல் அணை
"உலகத் தொழிலனைத்து
முவந்து செய்வோம்!
காகித உற்பத்தி

விசாகக் கப்பல் தளம்

"ஞாலம் நடுங்கவரும்
கப்பல்கள் செய்வோம்"



பாரத முதல் காகித ஆலை





கால் நடைச் செல்வம் காணீர்

ஓயுதல் செய்யோம் தலை
சாயுதல் செய்யோம்

ஜப்பானிய முறை

கிண்டி தொழிற் பண்ணை



அமராவதி திட்டம்

குடிநீர் வசதி

மணிமுத்தாறு அ[illegible]

காலம் கொன்ற விருந்து

கி.வா. ஜகந்நாதன்

மகாத்மா என்று சொன்னவுடன் நமக்குக் காந்தியடிகளின் நினைவு தான் வருகிறது. நாம் கண்ணால் கண்ட மகாத்மா அவர். ஆனால் மகாத்மா என்ற சொல் நெடுநாட் களாகவே வழங்கி வருகிறது. அதற்கு நேரான சொற்பொருள் பேருயிர் என்பது. உயிரில் சின்னது, பெரிது உண்டா? உயிருக்கு வடிவம் இல்லை. ஆகையால் அதை அளக்க முடியாது. ஆனால் பேருயிர் என்று எந்த அளவைக் கொண்டு சொல்கிறார்கள்? பெரிய குணம், பெரிய உள்ளம், தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் உள்ளம் உடையவர்களை அப்படிச் சொல்கிறோம். திருவள்ளுவர்,

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்று பெரியவர்களாகிய மகாத்மாக்களின் இலக்கணத்தையும் சிறியவர்களாகிய அல்பாத்மாக்களின் இலக்கணத்தையும் ஒரு குறட் பாவிலே அடக்கிச் சொல்லிவிட்டார்.

உலக வழக்கில் சின்ன உயிர், பெரிய உயிர் என்று சில சமயங்களில் சிலர் பேசுவது நம் காதில் விழுகிறது. முதுமையுடைய கிழவன் இறந்து போனால், "பெரிய உயிர் போய் விட்டது" என்று சொல்கிறார்கள். குழந்தையை ஒரு பெண் கருவுயிர்த்து அக்குழந்தை இறந்து விட்டால், "பெரிய உயிர் தங்கியதே, அது போதும்; சின்ன உயிரைப் பற்றிக் கவலை இல்லை" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். பெரிது, சிறிது என்பவை உடம்பின் அளவைக் கொண்டு சொன்னவை அல்ல. காலத்தைக்கொண்டு சொன்னவை. நெடுங்காலம் வாழ்ந்தவன் பெரிய உயிர் ஆகிறான்.

மக்கள் காலம் ஆக ஆக அநுபவ அறிவைப் பெறுகிறார்கள். நூலறிவைவிட அநுபவ அறிவே சிறந்தது. அதனால் ஆண்டு முதிர்ந்தவர்களுக்கு நாம் மதிப்பளிக்கிறோம். பல காலமாகப் பயனுடையதாக நிற்கும் எந்தப் பொருளுக்கும் மதிப்பு மிகுதிதான். ஆங்கிலத்தில் 'தக்கதாயின் நெடுநாள் நிற்கும்' (Survival of the fittest) என்று ஒரு கொள்கை உண்டு. வாழ்க்கைப் போராட்டத்தில் தகுதி உடையவர்கள் வென்று நின்று புகழ் பெறுவார்கள்.

மனிதன் பருவுடம்போடு நில்லா விட்டாலும் புகழுடம்போடு நிற்பான். அதாவது அவன் எதைச் செய்து புகழ் பெற்றானோ அப்பொருள் நெடுநாள் நிற்கும்; கால வெள்ளத்தை எதிரிட்டு நீந்தி நிற்பவை புகழ் பெறும்.

காலம் புதியதைப் பழையதாக்கும். கிளர்ச்சியைத் தளர்ச்சியாக்கும். ஆக்கத்தை நீக்கமாக்கும். தளிரைச் சருகாக்கும். மரத்தை விறகாக்கும். ஆனால் காலத்தினால் வாடாது ஒளிபெறும் பொருள்களும் உண்டு. காலத்தைக் கொன்ற பரம்பொருளாகிய கடவுள் அந்த வரிசையில் முதலில் நிற்கிறார். சூரியன், சந்திரன், தென்றல், மலை, ஆறு-இவை பழமையுடையன என்பதனால் பயனில்லாதன ஆவதில்லை. அவை ஒரு வகையில் காலவெள்ளத்தை நீந்தி நிற்பன. இவை கண்ணாலே காண்பதற்குரியவை.

கருத்துக்கள் பல, காலத்தால் மங்காது நிற்பதுண்டு. அவை கருத்துலகில் கதிரவனாக, திங்களாக

இமயமாக விளங்கும். அந்தக் கருத்துக்களைத் தாங்கிய பனுவல்கள், கவி மலர்கள் வாடாமல் நிற்கும்.

எழுதுபவன் எழுதுகிறது எல்லாம் நிற்பதில்லை. அவன் கண் முன்னே இறந்து போவன பல. அவன் இறந்தாலும் தாம் இறவாமல் நிற்பன சில. நல்ல கவிதை, கவிஞன் இறந்தாலும் உயிர் வாழ்ந்து மனித சமுதாயத்துக்குத் தன்னைப் படைத்த கவிஞனை நினைப்பூட்டிக் கொண்டு நிற்கும்.

திருக்குறள் அத்தகையது. அது கற்பகத்தின் மலரைப் போன்றது. என்றும் வாடாதது. என்றும் புது மணமும் புதுத் தேனும் புது மலர்ச்சியும் பெற்று விளங்குவது.

''என்றும் புலராது
யாணர்நாட் செல்லுகினும்
நின்று, அலர்ந்து. தேன்பிலிற்றும்
நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின்
தெய்வத் திருமலர்போன்ம்,
மன்புலவன் வள்ளுவன்
வாய்ச்சொல்.''

பாரத நாடு பழம் பெரு நாடு; அதாவது மிகமிகப் பழங்காலத்திலேயே மனிதர்கள் தோன்றி வாழ்ந்த நாடு. நன்றாக வாழ்ந்த நாடு. அப்படி வாழ்ந்த சான்றோர்கள் தங்கள் சிந்தனைச் செல்வத்தை நூல் வடிவாக்கித் தந்திருக்கிறார்கள். வேதம் அத்தகைய செல்வங்களில் சிறந்தது. மனிதனுடைய சிந்தனையின் நுண்மையினும் நுண்ணிய எண்ண மலராக விளங்குவது உபநிடதம். அதைச் சாமானிய மனிதன் படைக்க இயலாது. மனிதரில் தெய்வம் போலத் திகழ்ந்தவன் தான் படைக்க முடியும். தெய்வமே படைத்தது அது என்று நாம் மதிப்புக் கொடுக்கிறோம். அதைப் போன்ற வேறு பல செல்வங்களும் நம்மிடம் உள்ளன. அவை காலத்தினால் மங்காமல், எதிர்காலம் நிகழ்காலமாகி நிகழ்காலம் இறந்த காலம் ஆகிக் கொண்டு போனாலும் தாம் மட்டும் மாட்சி கெடாமல், பயன் குறையாமல் திகழ்கின்றன.

அவை நித்தியமான உண்மைகளைச் சொல்கின்றன; நித்தியமான பொருளைப் பற்றிச் சொல்கின்றன. நித்தியமானவற்றைச் சொல்வதனாலே அவையும் நீண்ட ஆயுளைப் பெற்றுக் காலத்தைக் கொன்று புதுமைப் பொலிவோடு இலங்குகின்றன.

பாரத அன்னையின் பெருமைகளை நினைத்துப் பாடுகிறார் பாரதியார். பாரதத் தாய்தான் இத்தகைய சிந்தனைச் செல்வங்களை வழங்கியிருக்கிறாள். மனிதன் படைத்தானா, தெய்வம் படைத்ததா ?—இந்தச் சங்கடமான கேள்விக்குச் சாமர்த்தியமான விடையை அவர் கூறிவிட்டார். அவை பாரதத் தாயின் பனுவல்கள் என்று சொல்லி விட்டார்.

அவள் வேதம் முதலிய நூல்களிலே உண்மை ஞானத்தை உரைத்திருக்கிறாள். இன்று வந்த பத்திரிகை நாளைக்குப் பழையதாகி விடுகிறது. சென்ற ஆண்டு எழுதிய புத்தகம் இந்த ஆண்டு பயனற்றுப் போகிறது. சென்ற பத்து ஆண்டுகளுக்குமுன் ஒருவன் எழுதிய புத்தகம் அவன் கண் முன்னே மறைந்து போகிறது; மக்கள் அதை மறந்து போகிறார்கள். ஆனால், பாரத அன்னை அருளிய மறை முதலிய பனுவல்களோ இன்னும் வாழ்கின்றன. எத்தனையோ காலத்தை விழுங்கி விட்டு இன்னும் நம் சிந்தனைக்கு விருந்தாக நிலவுகின்றன. இந்த உண்மையைப் பாரதியார் சொல்கிறார்.

“ அன்னையே அந்நாளில்
அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி
மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள் உபநி
டதங்கள்
பரவுபுகழ்ப் புராணங்கள்
இதிகா சங்கள்

இன்னும்பன் னூல்களிலே
இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம்
அதனை இந்நாள் ?
மின்னுகின்ற பேரொளிகாண் !
காலம் கொன்ற
விருந்துகாண் கடவுளுக்கோர்
வெற்றி காணே !”

மனிதனுடைய மயக்கத்தைப் போக்கி உண்மையை உணர்த்தித் தெளிய வைக்கும் பேரொளி அவை. சிறிய விளக்குச் சில பொருள்களையே காட்டும். பெரிய விளக்கு அகலமான பரப்பில் ஒளி வீசிப் பல பொருள்களை விளக்கும். பாரதப் பண்பாட்டின் பெட்டகங்களாகிய இந்தப் பனுவல்கள் எத்தனையோ பொருள்களை, உண்மைகளை, நுட்பங்களை விளக்குகின்றன, அதனால் **“மின்னுகின்ற பேரொளி காண்!”** என்றார்.

தாம் அளிக்கும் பயனால் இன்றும் அவை புதியனவாக இருக்கின்றன; இனியும் இருக்கும். காலத்தினால் அவை கொல்லப்படவில்லை; ஒளி குறைக்கப்படவில்லை. அவைகளே காலத்தைக் கொன்றுவிட்டன. இன்றும் புதுமையாக, உயிர்களுக்கு இன்பம் நல்கும் விருந்தாக நிலவுகின்றன. ஆதலின்,

“காலங் கொன்ற விருந்துகாண்”

என்றார். எது சாவாததோ அது அமரத் தன்மை உடையது; கடவுட் பண்புடையது. மனிதன் தெய்வமாகலாம். அவன் சாவாத செயல்களைச் செய்தால் தெய்வமாகலாம். கடவுளைப் பற்றிப் பேசும் நூல்களாகிய அவை சாவாமல் இருக்கின்றன. கடவுளின் நித்தியத் தன்மையை உணர்த்தும் அவை காலத்தைக் கொன்று நிற்பது கடவுளுக்கே ஒரு பெருமை. காலத்தை வெல்லும் பொருள் உண்டு என்பதற்கு இந்தப் பனுவல்களே சான்று பகர்கின்றன. ஆதலின் காலத்தை வென்று, ஒளி வீசி நிற்கும் கடவுளுக்கு வெற்றி உண்டாகி விட்டது. ஆதலின்,

**“கடவுளுக்கோர் வெற்றி
காணே !”**

என்று பாடினார்.

சிறந்த கவிஞர்களின் பாடல்களும் காலத்தைக் கொன்ற விருந்தாக விளங்குகின்றன. அவற்றினுள்ளே ஆழும் நாமே காலம் போவது தெரியாமல் ஒன்றி விடுகிறோம். நாமே ஓரளவு காலத்தைக் கொன்று விடுகிறோம் என்று சொல்லலாம்.

பாரத நாட்டின் கருத்துக்களும் பண்பாடும் அவற்றைப் புலப்படுத்தும் கவிக் கருவூலமும் எத்தகையன என்பதைப் பாரதியார் நன்கு அறிந்தவர். அதனால் பெருமிதத்தோடு அவற்றைப் பற்றிப் பேசுகிறார். ‘காலம் கொன்ற விருந்தாகிய கவிதையைப் படைத்த பெருமக்களுள் அவரும் ஒருவர் அல்லவா?’ ★

National EKCO



O.T.N.V.D. & Bros,
RADIO DEALERS,
BHARATH BUILDINGS,
TIRUNELVELI Jn.

★

We Supply R.C.A. 16 m.m. Projector, Tape Recorders, and Kleer-tone Products etc.,


வல்லிக்கண்ணனின்

அக்டோபர்
இதழில்
காதலி
தொடர் ஆரம்பம்

இன்பக்கதைகளெல்லாம் உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ!

—சாலை இளந்திரையன்—

நாட்டுக் கரும்புக்கு
நல்லசுவை கற்பிக்கும்
வீட்டுக் கரும்பே,
விருப்பே! ஒருவார்த்தை:

முன்வீட்டு வெண்முல்லை
மும்மூன்றுப் பூத்தாலும்
உன்னீட்டுப் புன்னகையை
ஒவ்வுமோ? ஒவ்வாதே!

கொல்லை முருங்கைமரம்
கொத்துப்பூப் பூத்தாலும்
எல்லாமாம் உன்சிரிப்புக்(கு)
ஈடாமோ? ஆகாதே!

ஐயருவி தேனருவி
ஆடிவந்து திந்தென்றல்
பையவெனைத் தொட்டாலும்,
பைஞ்சுனையே, உன்மேனி

தொட்ட சுகமதிலே
தோன்றுமோ? தோன்றுதே!
மொட்டவிழ்த்துத் தீந்தேன்
முழுகிக் குடித்தாடிக்

கட்டவிழ்ந்த பண்கள்
கனிவண்டு பாடிடினும்
இட்டமிகும் என்அன்பில்
இன்பக் களியாகி

நீகொஞ்சும் தேன்மழலை
நேருமோ? நேராதே!
பாகுக்கோ பச்சைப்
பதனீர் நிகராகும்?

நான்வேறு நீவேறு
என்னும் நிலைமறந்த
தேன்கூடாய் நீஎன்முன்
செவ்வாய் இதழ்விரித்து

வாய்நிறைய அள்ளும்
வளர்சிரிப்பு,—(எங்கெங்கும்
வாய்மலர்ந்த பூக்காடே
மண்டுகின்ற),—சோலையினும்

பேரின்பப் பேரழகு
பேரார்வம் நல்குமடி!
ஆரிந்த வெள்ளைநகை
ஆட்சி விரும்பாதார்?

நானே 'குடிமக்கள்'—
நானே உனதுலகம்
தேனே நகையாள வா.

வாழ்க்கை வளர்ச்சி–1

சேமிப்பும், செல்வப் பெருக்கும்

(டாக்டர் பா. நடராஜன், இயக்குநர், தேசிய செயல் முறைப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகம், புதுடெல்லி)

பணக்காரர்கள், ஏழைகள் என்று தனி மனிதர்களிடையே வேற்றுமை இருப்பது போல், தேசங்களிடையிலும் வேற்றுமை இருக்கிறது. உலக மக்கள் தொகை 250 கோடியில் 200 கோடி மக்கள் ஏழை தேசங்களைச் சேர்ந்தவர்கள்; 50 கோடி மக்கள் பணக்கார தேசங்களைச் சேர்ந்தவர்கள். ஏழை தேசங்களெல்லாம் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும், தென் அமெரிக்காவின் சில பகுதிகளிலும் உள்ளன. பணக்கார தேசங்களெல்லாம் வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவின் மேற்குப் பகுதியிலும் உள்ளன. ஆசிய நாடுகளில் பணக்காரா வரிசையில் வைத்து எண்ணப்படுவது ஜப்பான் ஒன்றுதான். நியூசிலாந்து, ஆஸ்த்ரேலியா ஆகிய தேசங்கள் பணக்காரர் இனத்தில் உட்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் பணக்கார நாடுகள். பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகள் ஏழை நாடுகள். பொருளாதார முன்னேற்றத்தை அளவிடுவது எப்படி என்றால், அந்தந்த நாட்டின் மக்களின் ஆண்டொன்றின் சராசரி வருமானத்தைக் கொண்டு. இந்தியாவின் மொத்த தேசிய வருமானம் சென்ற ஆண்டில் 11,000 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்த ஜனத்தொகை ஏறக்குறைய 39 கோடி. ஆகவே ஆண்டைய சராசரி தலா வருமானம் 282 ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கு 40 மடங்கு பெரியது அமெரிக்காவின் சராசரி தலா வருமானம். இதிலிருந்து பொருளாதாரப் பிற்போக்கு நாடுகள் என்றால் பொருள் என்ன என்பது நன்கு விளங்கும்.

ஒரு சில நாடுகள் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளது ஏன்; மிகு பல நாடுகள் அடையாதது ஏன்? தனி மனிதர்களைப் பற்றி இந்த கேள்வியைக் கேட்டால், அவரவர்கள் செய்த புண்ணிய பாவ வினைகளின் விளைவு என்று சொல்லிக் கொள்ளலாம். தேசங்களைப் பற்றி சிந்திக்கையில் தலை விதி வாதம் எடுபடாது.

பொருளாதாரத் துறையில் இன்று முன்னேற்றம் பெற்ற நாடுகளின் வரலாறுகளை எல்லாம் ஒன்றொன்றாய் நுணுகிப் பார்த்தால், அவற்றின் முன்னேற்றத்துக்கு எத்தனையோ காரணங்களைக் கண்டுபிடிக்கலாம். இயற்கை வளத்தைச் சொல்லலாம்; மக்கள் எண்ணிக்கையைச் சொல்லலாம்; அவர்களது சில குண நலங்களைக் குறிப்பிடலாம்; அவர்கள் மேற்கொண்ட சில சமூகக் கொள்கைகளைச் சொல்லலாம்; அரசியல் சூழ்நிலைகளை எடுத்துக்காட்டலாம். ஆன்மீகமாய் அமைந்த சில வேக சக்திகளையும் குறிப்பிடலாம். பல தேசங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையாதிருந்ததற்கும் இவ்வாறே வரலாற்றின் வழி, காரணங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இவற்றையெல்லாம் பற்றிய ஆராய்ச்சியை நடத்துவதன்று இந்தக் கட்டுரையின் நோக்கம். இந்தியா பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு அரசாங்க உதவி வேண்டுமா? எந்த அளவுக்கு அந்த உதவி வேண்டும்? எந்த எந்தத் துறைகளில்— வேண்டும்? என்பதைச் சற்று ஊன்றிப் பார்ப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னேற்றம் பெறுவதற்குப் பற் பல சூழ்நிலைகள் சாதகமாக இருக்க வேண்டுமாயினும், இவற்றுள் இன் றைய நிலையில் இந்தியாவுக்கு இன்றியமையாது வேண்டப்படு வது முதல். முதலே முதல்.

முதல் சேமிப்பில் பூப்பது. வர விலிருந்து செலவு போக எஞ்சுவது சேமிப்பு. சேமிப்புத் திரண்டு முத லாகப் பயன்படுகிறது.

சேமிப்பு, ஒரு தேசத்தில், இரு வழிகளில் எழுகின்றது. வருந்திய சேமிப்பு, வருந்தா சேமிப்பு என்று இரண்டாகச் சொல்லலாம்; அல் லது, பாடுபட்ட சேமிப்பு, பாடு படாத சேமிப்பு எனலாம். வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி,

"ஆகாறு அளவு இட்டிதாயினும்
கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்ற வள்ளுவர் வாய்மதிப்படி, மிகக் குறைந்த வருமானத்தைச் சம் பாதிக்கும் ஏழை மக்களும், வாழ்க் கையின் உச்சியை நாளும் எட்டிப் பிடிக்க முயலும நடுத்தர மக்களும் சேமிப்பது வருந்திய சேமிப்பாகும். வேறு செலவு செய்ய வழியில்லாமல், தேவைகளைச் சிறிதும் குறைத்துக் கொள்ளாமல், நோகாமல் நொம் பலமில்லாமல் பெரும் பணக்காரர் கள் சேமிப்பது வருந்தா சேமிப்பா கும். இவை இரண்டுமே தனி மனி தர்கள் சேமிக்கும் வகையில படும்.

தனி மனிதர் சேமிப்பு அல்லாது, ஸ்தாபனங்கள் சேமிப்பு வகை மற் றொன்று. அதாவது, வியாபார நிலை யங்கள், தொழிற்சாலைகள், இன்ஷ் யூரன்ஸ் கம்பெனிகள், பாங்குகள் ஊர்வகைப் பொதுச் சொத்துக்கள் போன்ற ஸ்தாபனங்களில் செலவு, கழிவு, பங்கு இலாபம் போன்ற எல்லா இனங்களையும் கழித்து மீதி யாவது இந்த சேமிப்பாகும். முன்ன தைத் தனியார் சேமிப்பு என்றும், பின்னதை நிலையச் சேமிப்பு என் றும் சொல்லலாம்.

தனியார் சேமிப்பைவிட நிலையச் சேமிப்பே இன்று சிறப்பாகவும் முக் கியமாகவும் இருக்கிறது. தனியார் வருமானம் பெரிதாக இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட, மொத்தச் சேமிப்பில் 40 சதம் நிலை யச் சேமிப்பாயிருக்கிறது. தனியார் வருமானம், சேமிப்புக்கு இடந்தராத வகையில் அமைந்துள்ள ரஷ்யா விலோ கேட்க வேண்டியதில்லை. முழுக்க முழுக்க முதல் எல்லாம் ஸ்தாபனங்களின் சேமிப்பே.

இந்தியாவிலும் இந்த நிலை விரை வில் ஏற்படும் போலிருக்கிறது. ஏனென்றால் தனியார் சேமிப்புக் குத் தடையாக பல சூழ்நிலைகள் வந்து கொண்டிருக்கின்றன. முத லாவது, பெரும்பாலான மக்கள் மிகுந்த ஏழைகளாக இருக்கின்ற னர். இவர்களுக்கு அன்றாட வாழ்க் கையை நடத்துவதே பெரும்பாடாக இருக்கையில், சேமிப்பதற்கு மிஞ்சு வதெங்கே? அதோடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசை முன் எப் பொழுதுமில்லாத முறையில் தொழி லாள மக்களிடையே வேகமாய்ப் பரவி வருகிறது. இது இயல்பா னதே. மேலும் விலைவாசியும் குறை வதாக இல்லை; வேலையில்லாத நிலையிலும் அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. வரவுக்கும் செல வுக்கும் சரி என்ற நிலைமையிலேயே பெருவாரியான மக்களின் வாழ்க்கை நிலை அமைந்திருக்கிறது. கடன் கொடுக்க ஆள் இருந்தால், கடன் வாங்கியும் செலவு செய்யத் தயார் தான்.

பெருவாரியான ஏழை மக்கள் நிலைமை இவ்வாறிருக்க, சிறுபான் மையான பணக்காரர் நிலைமையும் பெரு மாறுதல் அடைந்து கொண்டு வருகிறது. பெரு நிலக் கிழவர்கள் எனப்பட்ட ஜமீன்தார்கள் மறைந்து விட்டார்கள். பெரு நிலம் படைத்த நிலச்சுவான்தார்களின் பீடும்

பெரு வாழ்வும் விரைவில் முடிவடையும் அறிகுறிகளும் தெளிவாய் வருகின்றன. சில வரம்புச் சட்டம் வந்தால், தனியார் சேமிப்பு கணிசமாகக் குறைந்து விடும்.

வருமான வரியை எடுத்துக் கொண்டாலோ, தனியார் வருமானத்தின் மீது போடும் வரி இந்தியாவிலேயே மிக அதிகம் என்று தெரிகிறது. அதிலும் வருமானம் உயர உயர, வரிவிகிதம் இந்தியாவில் செங்குத்தாய் ஏறிச் செல்கிறது. பதினையிரம் ரூபாய் ஆண்டொன்றுக்கு வருமானமானல் நூற்றுக்கு ஆறு ரூபாய் வருமான வரியில் போகிறது. ஐம்பதினையிரம் ரூபாய் வருமானமாய் விட்டாலோ, நூற்றுக்கு 48 ரூபாய் வரியாகி விடுகிறது. அமெரிக்காவிலும், பிரான்ஸிலும் இதற்குப் பாதி தான் வரி விகிதம். இந்தியாவுக்கு அடுத்தபடியான வருமான வரி உயர்வைச் சொல்லவேண்டுமானல், இங்கிலாந்தையும், ஜப்பானையுமே சொல்ல வேண்டும். இவையெல்லாம் தனியார் வருமானத்தைப் பற்றியவை. நிலையங்கள் வருமானத்தைப் பற்றிய வரிக் கணக்கு வேறு. அது இந்த இடத்தில் தேவையில்லை.

வருமான வரி தவிர, கால்டர் என்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த பொருளாதாரப் பேராசிரியரின் அறிக்கையைப் பின்பற்றி சமீபத்தில் சொத்து வரி, செலவு வரி, இஷ்டதான வரி என்றெல்லாம் புது வரிகள் வந்திருக்கின்றன. இதன்படி இன்று ஒருவருக்கு ஒரு கோடி ரூபாய் சொத்தும், ஐந்து லட்ச ரூபாய் ஆண்டு வருமானமும் இருந்தன என்றால் கிட்டத் தட்ட நான்கு லட்ச ரூபாய் வருமான வரியாகவும், ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் சொத்து வரியாகவும், மொத்தம் ஐந்தே கால் லட்ச ரூபாய்க்கு மேல் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும். வருமானம் ஐந்து லட்ச ரூபாய் தான். மீதி இருபத்தையாயிரம் ரூபாய்க்கு வருஷா வருஷம் சொத்தைக் கொஞ்சங் கொஞ்ச

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—குற்சை—

மழை பெய்கிறது. ஊர் முழுதும் ஈரமாகிவிட்டது. தமிழ் மக்கள், எருமைகளைப் போல எப்பொழுதும் ஈரத்திலேயே நிற்கிருர்கள்; ஈரத்திலேயே உட்காருகிருர்கள்; ஈரத்திலேயே நடக்கிருர்கள்; ஈரத்திலேயே படுக்கிருர்கள்; ஈரத்திலேயே சமையல்; ஈரத்திலேயே உணவு.

உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட அகப்படமாட்டான்.

ஓயாமல் குளிர்ந்த காற்று வீசுகிறது. தமிழ் மக்களிலே பலருக்கு ஜ்வரம் உண்டாகிறது. நாள் தோறும் சிலர் இறந்து போகிருர்கள். மிஞ்சியிருக்கும் மூடர் 'விதி வசம்' என்கிருர்கள். ஆமடா, விதி விசந்தான். 'அறிவில்லாதவர்களுக்கு இன்பமில்லை' என்பது ஈசனுடைய விதி.

சாஸ்திரமில்லாத தேசத்திலே நோய்கள் விளைவது விதி. தமிழ் நாட்டிலே சாஸ்திரங்களில்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல். இருப்பனவற்றையும் மறந்துவிட்டுத் தமிழ் நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகளை மூடரிடங் காட்டி வயிறு பிழைத்து வருகிருர்கள். குளிர்ந்த காற்றையா விஷமென்று நினைக்கிருய்! அது அமிழ்தம்; நீ ஈரமில்லாத வீடுகளில் நல்ல உடைகளுடன் குடியிருப்பாயானல், காற்று நன்று. அதனை வழிபடுகிருேம்.

—'வசன கவிதை'

மாக விற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

புது வரி முறையால் பணக்காரர்-ஏழை என்ற ஏற்றத்தாழ்வு விரைவில் குறைந்து, சோஷலிச சமூக அமைப்பு மெல்ல உருவடைந்து வருகிறது. ஆயினும் அந்த முறையால், தனியார் சேமிப்புக் குறைகின்ற நிலையும் ஏற்படுகிறது. அவ்வாறுனல், தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய மூலதனத்தின் பெரும் பகுதியையும் நிலயங்கள் சேமிப்பின் வழியாகத்தான், இனி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இது அரசாங்கம் செய்யவேண்டிய வேலை. ஸ்தாபனங்களின் சேமிப்பை மூலதன வளர்ச்சிக்காக இருவகையில் அரசாங்கம் பெருக்கலாம். ஒன்று, வரி விதிப்பு வழியாக; மற்றொன்று, அந்த ஸ்தாபனங்களில் முக்கியமான சிலவற்றை அரசாங்கமே கைக் கொள்ளும் வழியாக. அதாவது பெருலாபம் தரும் பழ தொழிற்சாலைகளையும், ஏனைய வியாபாரத் துறைகளையும் தேசியமாக்கிக் கொள்ளுதல். இந்த வகையில்தான் இன்று லைப் இன் ஷூரன்ஸ் தொழிலை இந்திய அரசாங்கம் தேசிய மாக்கியது ; பல ஏற்றுமதித் துறைகளில் வியாபாரத்தை நேராக நடத்துவது ; இம்பீரியல் பாங்கு போன்ற இலாபம் தரும் பாங்கை தேசப் (ஸ்டேட்) பாங்கு ஆக்கினது எல்லாம்.

ஒரு தேசத்தின் பொருளாதார முன்னேற்றம் முக்கியமாக முதலீட்டிலிருக்கிறது. முதல் சேமிப்பில் இருக்கிறது. சேமிப்பு மிகுந்தால் பொருளாதார வளர்ச்சி வேகமாக இருக்கும். இன்று இந்தியாவில் மொத்த வருமானத்தில் ஏழு சதம் சேமிப்பாக இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். இரண்டாவது திட்டம் வெற்றி பெற நிறைவேறினல் வருமானத்தில் 11 சதம் சேமிப்பாகும் என்றும் கணக்கிட்டிருக்கிருர்கள். இங்கிலாந்தில் மொத்த வருமானத்தில் 11 சதம் சேமிப்பு என்றும், அமெரிக்காவில் 13 முதல் 16 சதம் வரை சேமிப்பு என்றும், ஸ்வீடனில் 11 முதல் 13 சதம் என்றும், ஸ்விட்சர்லாந்தில் 10 முதல் 11 சதம் என்றும் கணக்கிட்டிருக்கிருர்கள். ரஷியா, சீனு போன்ற கம்யூனிஸ்ட் தேசங்களில் மக்கள் தேவைகளைக் கட்டாயமாக அரசாங்கம் குறைத்து தேசத்தின் சேமிப்பை மிகுதிப்படுத்தியிருக்கின்றுர்கள். அங்கு 16 முதல் 20 சதம் வரை சேமிப்பு இருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவின் ஏழை நிலைமைக்கு அதிக சேமிப்பு என்பது சற்று வருத்தத்தைக் கொடுப்பதானுலும், வளர்ச்சி வேகத்தை விரும்புவோமானல், வருங்கால சந்ததிகளின் நல்வாழ்வை உள்ளத்தில் கொள்வோமானல், தனியார் சேமிப்பையும், ஸ்தாபன சேமிப்பையும் பல வழிகளிலும் பெருக்குவது முக்கியமாகும். இதில் அரசாங்கமே முன் நிற்கவேண்டியதாக இருக்கிறது. பொதுத் துறை மேற்கொள்ள வேண்டிய சேமிப்புப்பணியை தனி துறைக்கு விட்டால், முன்னேற்றம் நத்தை வேகமாகவே இருக்கும்.

மாருதி விலாஸ்

காபி ஹோட்டல்

ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

உரிமையாளர் :

P. R. கோபாலகிருஷ்ணன்.

நெல்லைக்கு விஜயம் செய்யும்போதெல்லாம் எமது சிற்றுண்டி சாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

தந்தி: "சோஸைட்டி"

ஸ்தாபிதம்; 1938.

போன்: ஆபீஸ்: 33
டைவுஸ்: 204
காலனி: 437

கட்டிடக் கலைக்கு ஒரு தாஜ்மஹால்!
சிற்பக் கலைக்கு ஒரு மஹாபலிபுரம்!
சித்திரக் கலைக்கு ஒரு அஜந்தா!
அதுபோல் ஆடை அலங்காரத்திற்கு

அம்மாப்பேட்டை சொஸைட்டி ஜவுளிகள்

அழகு! சிக்கனம்! உழைப்பு!

அதுவே

"சேலம் அம்மாப்பேட்டையின் ஜவுளிகள்"

எங்களிடம் 20 நெ. முதல் 100 நெ. வரை உங்களுக்குத் தேவையான் சர்டிங், துண்டு, வேஷ்டி, சேலை, கர்சீப், மற்றும் ஜரிகை பேட்டு துப்டா, சேலை, வேஷ்டி ரகங்களும் எங்கள் சொந்த சாயத் தொழிற் சாலையில் கெட்டியான சாயம் தோய்க்கப்பட்டு சிறந்த முறையில் மெம்பர்களால் நெய்யப்பட்டு ஜவுளிகள் நாணயமான விலையில் கிடைக்கும்.

தேவைக்கு விஜயம் செய்யுங்கள்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

தலைவர்: ஏ. மாரியப்பன் எம்.எல்.ஏ.,
சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு & விற்பனை சொஸைட்டி லிமிடெட்,
எஸ். 532., அம்மாப்பேட்டை, சேலம்-3.

பிராஞ்சுகள்:

நெ. 69-பி. முதல் அக்ரஹாரம், சேலம்.
கடை வீதி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
நெ. 292, அக்ரஹார வீதி, ஈரோடு.
பழையபேட்டை (போஸ்டாபீசுக்கு எதிரில்)
கிருஷ்ணகிரி

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

RING SPINNING FRAMES

DRAWING FRAMES

REELING MACHINES

FLY FRAMES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED :

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409

Telegrams : "TEXTOOLCO"

கட்டுரை-1.

பொருளாதார முன்னேற்றத்தில் தனியார், அரசாங்கத் துறைகளின், பங்கு

ஸ்ரீ மனுபாய்ஷா

(மத்திய அரசாங்கத் தொழில் அமைச்சர்)

ஜனநாயக நாடுகளில் எல்லாம் இதுவரை தொழில் மயமாக்குவதற்காக அநேகமாக ஒரே மாதிரியான வழியையே கடைப்பிடித்திருக்கிறார்கள். உற்பத்திச் சரக்குகளுக்குத் தேவையை ஏற்படுத்துவதின் மூலமாக நுகர்ச்சிப் பொருள் தொழில்களை விஸ்தரிப்பதும், நுகர்ச்சிப் பொருள் தொழில்களுக்கான இயந்திரங்கள், சாதனங்கள் ஆகியவற்றின் அதிக தேவையை அநுசரித்து அதற்கேற்ப முக்கிய தொழில்களை விரிவுபடுத்துவதுவுமே அந்த வழியாகும். முன்னேற்ற முறை பெரும்பாலும் இந்தப் பணியிலேயே இருந்திருந்தாலும், ஒவ்வொரு நாட்டின் தொழில் பெருக்க வளர்ச்சியும், அளவும் அந்த நாட்டின் முக்கிய தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்து இருக்கின்றது. தொழில் துறையில் பலம் பொருந்தி விளங்கும் மேலை நாடுகள், பொதுவாக தங்கள் நாட்டு முக்கிய தொழில்களின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வதோடு, பின்தங்கியுள்ள நாடுகளுக்கு அவைகளை அனுப்பும் ஏற்றுமதியாளர்களாகவும் உள்ளன. கடந்த இருபது ஆண்டுகளாக உணரப்பட்டு வந்துள்ள உலக வாணிகப் பெருக்கத்தில் பெரும்பங்கு, கனரகத்தொழில் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வலிமை பெற்ற நாடுகளாலேயே வகிக்கப்பட்டுள்ளது. எனவே ஒரு நாட்டின் தொழில் முக்கியத்துவம், அந்நாட்டின் துரித தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களையும் சாதனங்களையும் உற்பத்தி செய்வதைப் பெரும்பாலும் பொறுத்தே

ஆகையால், புதிதாக வளர்ச்சி பெற்று வரும் நாடுகள், முதலில் கனரகத் தொழில் வளர்ச்சியை, நுகர்ச்சிப் பொருள் தொழில்களுக்கு முன்னதாக வழக்கத்திற்கு எதிராகக் கவனித்து, சரித்திரத்தின் போக்கை மாற்ற வேண்டுமென்றே திட்டமிட்டுள்ளார்கள். ரஷியா நாட்டில், இம் முறையில் தொழில் மயமாக்குவதில் மாபெரும் முன்னேற்ற சாதனையை மிகக் குறைந்த ஆண்டுகளிலேயே செய்ய முடிந்ததுடன், இந்தச் சிறிய கால அளவிற்குள்ளாக மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கும் 150 லிருந்து 200 ஆண்டுகள் வரை பிடித்த தொழில் முன்னேற்றத்தை இக் குறுகிய காலத்தில் சாத்தியமாக்கவும் முடிந்தது. சீனாவும்கூட, அண்மையில் அதே முறையில் தனது வழியைத் துவங்கியுள்ளது. ஜனநாயக நாடுகளுக்குள்ளாக, வழக்கமான தொழில்மய வழியை மாற்றும் இந்த முறையை, இந்தியாதான் முதல் முதலாகப் பரிசீலித்து வருகிறது.

இந்த முறையை ஏன் உடனடியாகக் கடந்த காலத்தில் ஜனநாயக நாடுகள் பின்பற்றவில்லை என்பதற்குப் பல நல்ல காரணங்கள் இருந்திருக்கின்றன. தனியார் முயற்சி ஒரு லாபத்தைக்கருதி செயல்பட வேண்டும்; மேலும், உண்மையாகவே, இந்த அடிப்படையில்தான் தனிப்பட்ட உற்பத்தியாளர்களால், கைவசமுள்ள மூலதன வசதிகளை ஒதுக்க முடியும். வளரும் ஓர் பொருளாதாரத்தில், நுகர்ச்சிப் பொருள்களுக்குத் திருப்தி செய்ய முடியாத

அதே நேரத்தில் மூலதன வசதிகள் குறைவாகவும் உள்ளன. எனவே, கிடைக்கக்கூடிய மூலதனம், லாபம் விரைவாகவும், அதிகமாகவும் கிடைக்கக்கூடிய துறைகளுக்கு இயற்கையில் திரும்பி விடுகிறது; அத்துடன் இயந்திரங்களுக்குத் தேவை குறைவாக இருக்கும் நிலையில், உள்நாட்டு கனரகத் தொழிலும் வளர்ச்சி அடையாமலே இருக்கிறது.

நாம் ஏற்கனவே சொன்னபடி, விரைவான, சுயபூர்த்தி அடைந்த தொழில் மயமாக்குதல், வளரும் பொருளாதாரத்தில் தேவைப்படும் இயந்திரங்களையும், சாதனங்களையும் வழங்கக்கூடிய இயந்திர உற்பத்தித் தொழிலைப் பொறுத்து அமைகிறது. எனவே, திட்டமிடப்பட்ட ஒரு பொருளாதார அமைப்பில், முக்கிய அடிப்படைத் தொழில்களில் தலைமை தாங்கி வளர்ப்பது அரசாங்கத்திற்கு அவசியமாகிவிடுகின்றது. இவற்றில் சில தொழில்கள், உடனடியாக லாபத்தை அளிப்பதில்லை என்றும், என்றாலும் பிற தொழில்களின் கூட்டு வளர்ச்சிக்குத் தேவையான ஊக்கத்தை அவை நல்குகின்றன.



1956 ஏப்ரலில் அறிவிக்கப்பட்ட இந்திய அரசாங்கத்தின் மாற்றி அமைக்கப்பட்ட தொழில் கொள்கை தீர்மானத்தில் இந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானப்படி, தொழில்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்: (1) புதிய பகுதிகளெல்லாம் அரசாங்கத்தின் தனிப் பொறுப்பாகவும், ஏற்கனவே உள்ள தனியார் முயற்சிப் பகுதிகள் வளர அனுமதிக்கப்படுவதுமான தொழில்கள்; (2) அரசாங்கமும், தனியார் துறையும் பங்கு கொள்ளக் கூடியதும், ஆனால் அரசாங்கம் அதிக முயற்சிகளைத் தொடங்கக் கூடியதுமான தொழில்கள்; (3) தனியார் துறைக்கு விடப்பட்டுள்ள மீதி தொழில்கள் எல்லாம் கடைசிப் பிரிவில் அரசாங்க மூலதன வாய்ப்புக்கள் தடுக்கப்படாவிட்டாலும், இந்தப் பரந்த துறை, பொதுவாகத் தனியார் மூலதனத்திற்காக உள்ளது என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

புதிய முயற்சிகள், பொதுவாக அரசாங்கத்தின் தனிப் பொறுப்பாக மாத்திரம் உள்ள பகுதியில் உள்ளவை வருமாறு: ஆயுதங்களும், வெடி மருந்துகளும்; அணுசக்தி; இரும்பு, எஃகு; இரும்பு, எஃகில் கனரக வார்ப்படங்கள், உற்பத்திகள்; இரும்பு, எஃகு உற்பத்திக்குத் தேவையான கனரக சாதன, இயந்திரங்கள்; கருவி இயந்திர உற்பத்தி கனரக மின் தொழில் சாதனங்கள்; நிலக்கரி, பழுப்பு நிலக்கரி; தாது எண்ணெய்கள்; இரும்புத் தாது வெட்டியெடுத்தல் மாங்கனீஸ், தங்கம் பிற; ஆகாய விமானங்கள்; ஆகாய, இரயில் போக்குவரவு; கப்பல் கட்டுதல்; தொலை பேசிகள், கேபிள்கள், தந்தி, கம்பியில்லாத் தந்தி சாதனங்கள் (ரேடியோப் பெட்

டிகள் நீங்கலாக); மின்சார உற்பத்தியும், விநியோகமும்.

தனியார் மூலதனம்-ஒரு பெரும் அளவிற்கு வேகமாக இத் துறைகளில் பெரும் அளவு மூலதனம் தேவைப்படுவதாலும், வட்டி விகிதம் நிச்சயமில்லாது இருப்பதாலும் போடப் படுவதில்லை என்பது தெளிவு; மேலும், இத்தொழில்கள், பொருளாதாரத்தின் மொத்த முன்னேற்றத்திற்கு மிக அடிப்படையான தேவை என்பதால் அவற்றை ஒத்திப் போடவோ, தனியார் மூலதனத்தின் நோக்கங்கள், கணக்கீடுகள் நிறைந்த நிச்சயம் அற்ற நிலைக்கு விட்டு விடுவதோ முடியாது.

பொதுத் துறைக்குச் சில தொழில்களின் புதிய முயற்சிகளை ஒதுக்கி வைத்திருப்பதான அரசாங்க அறிவிப்பு குறித்து சில தவருன கருத்துக்கள் இன்று இருக்கலாம். என்ருலும், நடை முறையில், உலகில் அநேகமாக எல்லா நாடுகளிலும், நிச்சயமாக, பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனியிலும், இன்று அரசாங்கத்தின் மூலதனத்திற்காக ஒதுக்கி விடப்பட்ட பெரும் துறைகளோ அன்றி அரசாங்கத்தால் ஏற்கனவே கவரப்பட்டவையோ பெரும் அளவில் உள்ளன என்பது உண்மை. பொது நன்மையைக் கருதி, பொதுத் தேவைகளும், அதே போல முக்கிய அடிப்படைத் தொழில்களும், லாபத்திற்காக அல்லாது, அவற்றின் ஒழுங்கான நடை முறையையும், வளர்ச்சியையும்

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—கருணை—

"காடு கழனிகள் காத்திடுவேன், நின்றன்
காலிகள் மேய்த்திடுவேன்;
பாடுபடச் சொல்லிப் பார்த்ததின் பின்னரென்
பக்குவஞ் சொல்லாண்டே!
ஆண்டே!—பக்குவஞ் சொல்லாண்டே!

★

தோட்டங்கள் மொத்திச் செடிவளர்க்கச் சொல்லச்
சோதனை போடாண்டே!
காட்டு மழைக்குறி தப்பிச்சொன்னு லெனைக்
கட்டியடி யாண்டே!
ஆண்டே!—கட்டியடி யாண்டே!

★

பெண்டு குழந்தைகள் கஞ்சி குடித்துப்
பிழைத்திட வேண்டுமையே!
அண்டை யயலுக்கென் னுலுப காரங்கள்
ஆகிட வேண்டுமையே?
உபகாரங்கள்—ஆகிட வேண்டுமையே!

—'கண்ணன்-என் ஆண்டான்'

கருதி அரசாங்கத்தின் கட்டு திட்டத்திலோ, அல்லது அரசாங் கத்திற்குச் சொந்தமாகவோ இருக் கின்றன என்பதே உண்மை. மேலும், அத்தகைய முதலீடு, தனியார் துறைத் தொழில்கள் இதர வழிகளில் பல்கத் தேவை யான சூழ் நிலைகளை உண்டாக்கு கின்றன. தேசியப் பொருளா தாரத்தைச் சம நிலை இழக்கவும், குன்றவும் செய்யும் சீர்கேடான குறைகளைத் தவிர்க்க பெரிய முக்கியமான, ஓட்டைகள் அரசாங் கத்தால் அடைக்கப்பட வேண்டி யதுதானே?

மற்றொரு காரணத்திற்காகவும், சில தொழில்களில் புதிய முயற்சி களைத் துவங்குவது, எதிர்காலத் தில் அரசாங்கத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளன. சோஷலிஷ சமுதாய அமைப்பை நோக்கி முன்னேற ஒரு சாதனமாகவும், லாபகரமான வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத் தவும், பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், வேலை முறைகளையும் உயர்த்தவும், மேலும், தனியார் ஏகபோகத்தைத் தடுக்கவும், பொருளாதார சக்தி சிலரின் கரங்களிலே குவிவதை ஒழிக்கவும், இத் திட்டம் அரசாங் கம், முக்கிய அடிப்படைத் தொழில் களை முன்னேறச் செய்வதன் மூலம் சில முக்கிய தொழில்களில் மூலதனத் தலைமையை ஏற்றுக் கொள்வதால், இப்பொழுதும் எதிர்காலத்திலும் தனியார் முத லீட்டுக்கு முன்னைவிடச் சிறந்த, அதிகமான வாய்ப்புக்கள், முக்கிய சாதனங்களின் பல வகைகள் எளி தாகக் கிடைப்பதன் மூலம் இருக் கின்றன.

அரசாங்கமும், தனியார் துறை யும் நமது நாட்டின் தொழில் மயமாக்கும் பணியில் கொண் டுள்ள இப் புதிய பங்காளிமுறை யின் வெற்றிக்கு 1955ல் தனி யார் துறையில் சாதிக்கப்பட்ட மகத்தான முன்னேற்றமே சான்று.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், பொதுத்துறை முதலீடுகளைப் பொறுத்தவரை, விவசாய, நீர்ப் பாசன வசதிகளின் அபிவிருத்திக்கு முதல் முக்கியத்துவமும் கொடுக் கப்பட்டது. அத்துடன் ஒப்பிட்டால் பொதுத்துறைத் தொழில்களுக்காக மிகக் குறைந்த தொகையே ஒதுக் கப்பட்டிருந்தது. இந்தக் கால அளவில், தனியார் தொழில் முதலீடும் சிறிய அளவிலேயே இருந்தது: அத்துடன், உண்மையில் செலவழிக்கத் திட்டமிடப்பட்ட சிறிய தொகையிலும் ஒரு சிறு பகுதி செலவு செய்யப்படவில்லை.

இரண்டாவது திட்டத்தில், தொழில்கள், போக்குவரத்து இனங் களில் பொதுத் துறை முதலீட்டுக்கு ஒரு பெரும் இடம் கொடுக்கப்பட் டுள்ளது. அதற்கு இணையாக தனியார்துறை முதலீடுகள் தொழில் களில் பெருமளவு செய்யப்படத் திட்டங்கள் இருப்பதோடு, குறிப் பிடத்தக்க பெரும் தொகை இவ் வகையில் ஈடுபடுத்தப்பட்டிருப்ப தால், இந்த நாட்டின் தனியார் தொழில்துறை வரலாற்றில் ஒரு ஒப்புயர்வற்ற விஸ்தரிப்பும் ஏற்பட்டு வருகிறது. இந்த முன்னேற்றத் தின் மறு பக்கத்தில், தனியார் தொழில்களின் இவ்வளர்ச்சியால் பொதுத் துறைத் திட்டங்களால் எஃகு, இயந்திரங்கள், அமைப்புச் சாதனங்கள் போன்றவற்றில் எவ் வளவு உற்பத்தி ஆகின்றதோ அவற்றை எல்லாம் முழு அளவு உபயோகப்படுத்துவதும் நிச்சயமா கின்றது. எனவே பொதுத்துறை யிலும், தனியார் துறையிலும் தொழில் வளர்ச்சி இணக்கமானது என்பதோடு, அவற்றின் நலன்கள் வெவ்வேறு ஆனவை அல்ல; பெரும் அளவு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதும் தெளிவாகிவிட்டது.

(அடுத்த இதழில் முடியும்).

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்
பென்ஸ் தயாரிப்பு



மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.
பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கு மாற்றி அமைக்க
தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5. ஸ்காட் ரோடு : : மதுரை.

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS

GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P.O. COIMBATORE

—✻—

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

—✻—

Managing Partner:—

G. N. VENKATAPATHY.

காமனை வென்றகண்

'சுகி'

அத்தியாயம் 23.

காதல் பெரிதா? காதலர் நலம் பெரிதா?

"யார் நீ? உன்னைத்தான், யார் நீ?"

லட்சுமிக்குட்டியைப் பார்த்துக் கேட்ட கேள்வி. அவளுக்கு அழுகை வந்தது; ஆத்திரம் வந்தது; எல்லா வற்றுக்கும் மேலாக அவமானம் வந்தது. அத்தனை உணர்ச்சியையும் உள்ளடக்கிப் பொறுமையின் வடிவாகச் சிரிக்க முயன்றாள்.

"நீ போய் விடு. செண்பகம் வந்தால் உன்னை என்ன செய்வாளோ? என் அறையை விட்டுப் போய் விடு"

"போகிறேன். உங்கள் செண்பகம் எங்கே? அவளைப் பார்க்கத்தான் வந்தேன்"

"அவளைப் பார்க்க முடியாது. அவள் உன்னைச் சும்மா விட மாட்டாள்"

"நானும் அவளைச் சும்மா விடப் போவதில்லை"

கோபித்துக் கொண்டு திரும்பும் புலி போன்று அவள் திரும்பினாள். என்னென்ன பேசவேண்டுமோ, திட்ட வேண்டுமோ, திருப்பங்கள் கொடுத்துத் தாக்க வேண்டுமோ அத்தனையும் பாண்டித்துரையிடம் அவள் பேசி விட்டாள். அவரும், "என்னை நீ பேசி வெற்றி கொள்ளலாம். முத்தையனிடம் பேசினால் வெற்றியல்ல, வெறி வளரும். அவனிடம் சாதுர்யமாகப் பேசு; சாமர்த்தியமாக நடந்து கொள்" என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எதிர்பார்த்த அறையில் செண்பகம் இல்லை; வீடு தேடிப் போக வேண்டும்; போய் சும்மா திரும்புவதாக விருப்பம் இல்லை; பழி, குத்துப் பழி, வெட்டுப்பழி நடத்தவேண்டும்— இந்நினைப்பில் வந்தவள் லட்சுமி.

முத்தையன், "இந்தாம்மா, உங்களைத்தான், உள்ளே வாருங்கள்" என்றான்.

அவளுக்குப் பூவுக்குள்ளே மணமாக, மேகத்துக்குள்ளே மழைத் துளியாக, இலைக்குள்ளே பசுமையாகப் புகுந்து கொண்டாற்போல இன்பம். அன்பிற்கும், ஆதரவிற்கும் அடிமையாகக் கிடந்த முத்தையன் கூப்பிட்டு விட்டான். உதட்டிலே மகிழ்ச்சி. உள்ளத்தில் சிலிர்ப்பு. அவள் பூவைக் கண்ட வண்டு. ஓடோடிப் போய் கையைப் பிடிக்க வந்தாள். அவள் தொட்டும், துழாவியும் புலி நகத்துப் புண் தந்த கோரைகளுக்கு மருந்து பூசிய உடம்பு; உணவு ஊட்டியும், உடம்பு தேய்ததும் வளர்த்த உடம்புதான். தொடாதே என்றால் கோபம் வரும். அவள் கோபத்தை அடக்கிக் கொண்டு குணவதியாக முன் நின்றாள்.

"அம்மா, நீங்கள் கொண்டாடும் சொந்தம் சென்ற வாரம் அறிந்து

கொண்டேன். எனக்குத் திக்காயம் ஆறி, சுடுகாட்டுப் புகை மயக்கம் தெளிந்தபோது, என் புத்தியிலும் உணர்வு பிறந்தது ''

"இல்லை. எதைச் சதம் என்றும், சஞ்சீவி என்றும், சாயுஜ்ஜியம் என்றும் எண்ணிக்கொண்டு வந்தேனே அத்தனையும் என் வாயில் மண்ணைப் போட்டது; கண்ணைக் கெடுத்தது; கருத்தை ஒடித்தது ''

"இருக்கலாம். ஏற்கனவே நான் முடிவு சொல்லிவிட்டேன். இன்று கேட்டாலும் இன்னும் பத்தாண்டு சென்று கேட்டாலும் எனக்கு அறிவு நினைவு இருக்கும்வரை நான் செண்பகத்தின் காதலன்!"

அப்பப்பா! எவ்வளவு பெருமிதம் அவன் குரலில்!

"மறுக்கவில்லை. நானும் ஒரு பெண்ணுக..."

"இந்த ஜன்மத்தில் என்னால் முடியாத காரியம். இதை அன்றைக்கே சொல்லி விட்டேன் ''

அடபாவி, எதற்காக உன்னை ஒவ்வொரு கணமும் நினைவு இழந்த காலத்தே கண்ணின் கருமணியாகக் காத்து வந்தாள்! உன்னை மீண்டும் மனிதனாக ஆக்கினாளே, அவளுக்கு இதுவா பதில்? இதுவா கைம்மாறு? இதுதானா பண்பாடு?

'இன்னும் யோசியுங்கள். நான் சொந்தம் என்று சொன்னால் போதும். எட்டி இருந்து நீங்களே தெய்வம் என்பதை எண்ணிக் கொண்டிருக்கும் உரிமையைக் கொடுத்தால், கொடுக்கவேண்டாம் பிச்சையாக யாசிக்கிறேன், எனக்கு உயிர் தாருங்கள்; வாழ்க்கை தாருங்கள்; நம்பிக்கை தாருங்கள்.காலணா, அரையணா பிச்சை கேட்கும் ஏழை எளியவர் போன்று கேட்கிறேன். எது உயிர் தருமோ? அதைக் கேட்கிறேன். உடலில் ஆதிக்கம் வேண்டாம்; உள்ளத்தை எனக்குக் கொடுங்கள் ''

"தவறு, தவறு! என்னைக் காமுகன் என்று எண்ணிக் கொண்டாய்! செண்பகம் உயிரோடு இருக்கும் வரை என் உயிர், உடல் அவள். நீ வீணாகத் தொல்லை செய்யாதே. ஏதோ நான் மனம் இழந்து, மதி யிழந்து, பித்தனாக இருந்தபோது எனக்கு உயிர் கொடுத்தாய், உதவி செய்தாய் என்று செண்பகம் சொல்லுகிறாளே, அவள் வார்த்தைக்காக உன்னை உயிரோடு வைத்திருக்கிறேன். இல்லாது போனால் என் கையால் ஒரு புலி செத்தது; இனி ஒரு பெண் சாவாள் ''

முத்தையன் முகத்திலே சாந்தம் தவழ்வதைக் கண்டு களித்த கண்கள் கோபத்தில் அக்கண்கள் பிரளய காலத்தை நினைவூட்டின. மீண்டும் பித்தனாகிவிடக்கூடாதே என்ற கவலை. தணிந்து போய் காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்ற எண்ணம்.

"என்னை மறக்கமாட்டீர்களே?"

"மறக்கமாட்டேன். எனக்கு உயிர் தந்த ஒரு பெண் என்பது என் மனசில் என்றைக்கும் உண்டு. ஒன்று சொல்கிறேன். சிரித்தாலும் சிரித்துக் கொள்ளுங்கள் ''

"என்ன?"

"எனக்குப் பிறக்கும் பெண்ணுக்கு,...உன் பெயர்.. ''

அவள் உடம்பிலே தீப்பற்றத் தொடங்கியது. கொழுந்தும், பந்துமாக, அவள் இதயத்துள் சுற்றிச் சுழன்று அணு அணுவாகத் தேடி பற்றவைத்துக் கொண்டிருந்தது. அவனுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அவள் பெயராம்; தெய்வத்திடம் தீப தரிசனம் எதிர்பார்த்தாள். தீப் பிழம்புக்குள் முக்கி எடுத்த உலைச் சலைச் சமாளிக்க முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளத்தின் பாரத்தைக் கையால் அமுக்கியவள் நழுவினாள். முத்தையன் வெற்றி கண்டான். இனி லட்சுமிக் குட்டியின் உருவம் தொல்லைக்கு அப்பாற்பட்டது; அவள் கேள்வி அத்தனையும் மங்கிய நிலவாகிவிடும். அவள் தொடுவானமாகப் போய் விடுவாள்.

லட்சுமிக்குட்டிக்குப் பொங்கும் கோபம் வெள்ளத்தை முத்தையனிடம் காட்ட முடியும்; கோபத்தால் மனமொடிந்து மதிகெட்டுப் போகக் கூடாதே யென்ற பச்சாத்தாப நோக்கத்தால் வாய் மூடிப் போய் விட்டாள். அத்தனை ஆத்திரமும், ஆவேசமும் அவள் செண்பகத்தின் விட்டுக்குள் நுழைந்ததும் படமெடுத்தன. பாய்ந்து சீறின. லட்சுமிக் குட்டி சொல்லிக் கொண்டிருந்தாள் :

"செண்பகம்! நான் பயந்து கொண்டு சும்மா இருப்பதாக எண்ணுதே. என் வாழ்க்கைக்கு நீ எமன். அவருக்கு நினைவு வரவேண்டும் என்பதற்காக உன்னை அனுக விட்டேன். அணுகினல் இந்நிலை வருமென்று நான் அறிவேன். பித்தனுக ஒருவரை வைத்துக்கொண்டு வாழ்வதைவிட அவருக்கு நலஞ் செய்து வாழவேண்டுமென்ற ஒரு நோக்கம் என்னைக் குற்றாலம் இழுத்து வந்தது. நெருப்பின் பக்கம் பஞ்சுப் பொதியைக் கொண்டு வந்தேன். பாண்டித்துரை அண்ணன் சொன்னதற்காக வந்தவள்"

"சொல்வதைக் கேள்"

"நானும் இரண்டு மூன்று முறை சொல்லியிருக்கிறேன். நீயும் சமாதானமாகப் பதில் தந்தவள். உன் பதில் எனக்கு ஆறுதல் தருகிறது; ஆனந்தம் தரவில்லை. உன் பதில் எனக்குப் புத்தி போதிக்கிறது; போதை தருவதற்கு வழியில்லை. நீ யாரை மணந்தாலும் சரி; என் உயிர் போக வேண்டும்; அல்லது அவரோடு வாழ எனக்கு வழி வகுத்துச் சொல். நான் மட்டும் தனித்து வாழ மாட்டேன். ஏமாந்து திரும்ப மாட்டேன். வெறுங் கையோடு போகமாட்டேன்"

"நானுக எந்தத் தவறும் செய்யவில்லை"

"உன் தோழி போல இருக்கிறேன்; உன் வேலைக்காரியாகவும் வாழ்கிறேன். இங்கிருந்து என் கிராமத்துக்கு நான் போகமாட்டேன். என் உயிர் இங்கேயே இருக்கும். உங்களோடு இன்று இல்லாது போனுலும் நான் என்ருவது

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—சிங்காரம்—

பால் போல வெண்மை கொண்ட வானத்தாற் செய்த இரண்டு சிறகுகள் அவளுக்கிருப்பதை நான் கண்டேன். முன்பு நோக்கியபோதே எனக்கு மூர்ச்சையுண்டாகத் தக்கதாக விருந்த அந்த யுவதியை சிறிது வருணித்துப் பார்க்கலாமா? ஏதோ முயற்சி செய்கின்றேன்.

சந்திரகலை வீசும் முகம். அதன் மீது சிறியதும் மூன்று விரல் உயரமுடையதுமாய், மலர்களாற் செய்யப்பட்ட ஓர் கிரீடம். உயிரென்ற வண்டு வீழ்ந்து, சிறகிழந்து தள்ளாடும் கள்ளூற்றுக்களாகிய இரண்டு கரிய விழிகள். தின்பதற் கல்லாது, தின்னப்படுவதற்கமைந்தன போன்ற பற்கள்.

தனது பாலிறகுகளால் விகாரஞ் செய்யப்படாத திவ்விய உருவம். தீண்டுவோன் உடற்குள்ளே இன்பமயமான மின்சாரம் ஏற்றுகின்ற கைகள். மண்ணுலகத்துப் பெண்களைப் பேசுமிடத்து கந்தர்வச் சாயல் என்கிருர்கள். இவளது இயலையும், சாயலையும் என்னென்பேன்? தெய்வ இயல், தெய்வச் சாயல்.

"மண்ணுலகத்தவனுக இருந்த போதிலும் நல்ல பார்வைகள் பார்க்கிருய்" என்று நாண முணர்த்தி, "யோசித்துக் கொண்டு நில்லாதே, பற" என்ருள்.

"உன் பெயரென்ன?" என்று கேட்டேன்.

"வெகு நேர்த்தி! நானென்று சொன்னுல் நீ யொன்று பேசுகிருய், என் பெயர் எதற்கு?"

"சொல்லு, பார்ப்போம்"

"என் பெயர்—பர்வதகுமாரி. என்னை, சாதாரணமாக, குமாரி என்று அழைப்பார்கள்."

"நல்லது, நான் உன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடலாமா?"

"ஓ"

—'ஞானரதம்'

வாழவே போகிறேன். பாண்டித் துரை அண்ணன் பங்களாவில் நான் இருக்கப்போகிறேன். நீங்கள் எங்கு குடிபோனாலும் அங்கே நான் வருவேன். உங்கள் வாழ்க்கையைக் குலைக்கமாட்டேன்; நாம் ஒன்றாக வாழ வழி வகுத்துக் கொடு. உன் வாக்குத்தான் மாறிய அவருக்குத் தேவை; முன்னால் என் சொல் அவருக்கு மருந்து. நான் காப்பாற்றாது போனால் அவரைக் காணமுடியுமா? நீ கல்யாணம் செயது கொள்ள முடியுமா? நீ வாழ்வதற்காக நான் கஷ்டப்பட்டேன்; நான் வாழ்வதற்கும் நீ பிரதிபயனாக, இல்லை, பெருந்தன்மையாக கொஞ்சம் தியாக நினைவோடு பாடுபடு. உன்னைப் போல நான் பெண்; எனக்குச் சொந்தமான பொருளை நீ திருடிக் கொண்டாய் என்று குற்றம் சொல்லவில்லை செண்பகம்; உன் சொத்திலே சுகத்திலே கொஞ்சம் பங்கு கொடு. பங்கு கொள்ள விடாது விரும்பாது உன் மனம் ''

"பெருந்தன்மை இல்லாதவள் நான் ''

"இல்லை செண்பகம்! அவருக்கு உயிர் கொடுத்தவள் நான்; உள்ளத்தைக் கொடுத்தவள் நீ. எனக்கு உன் உள்ளத்தைக் கொஞ்சம் கொடு. பயங்காட்டி பாகம் கேட்கவில்லை; பரிந்து கேட்கிறேன்; கேட்பது கேவலம் என்பதை அறிந்தும் உணர்ந்தும் கேட்கிறேன் ''

"உம்,'' என்று உருட்டி விழித்தாள் செண்பகம்.

"நீ என்னைவிட பலசாலி; கோபக்காரி; வைத்தியர் கோபால வாரியார் மீது களைக்கொட்டி வீசியதை அறிவேன். வீர மங்கையிடம் நான் பிச்சை கேட்கிறேன். கொடுக்காவிட்டால் நானும் வீர மங்கையாக மாறுவேன். இப்போதுள்ள தங்கமான குணம், நியாய புத்தி நாளா வட்டத்தில் விடைபெறும் ''

"பெற்றால்...?''

"தன் சொத்து, என் செல்வத்தைத் திருடியாக எண்ணும். மனம் பெரிய குரங்கு. நியாய, அநியாயம் பார்க்காது. அநியாயத்தின் வழி, அறிவுக்குப் புறம்பான வழியில் வஞ்சம் தீர்க்கச் சொல்லும் ''

"பழி வாங்கினால் நல்லது தான் ''

"நல்லது இல்லை. உன்னைப் பழித்தால் அவர் மனம் உடையும். நானும் வாழாமல் நீயும் வாழ முடியாமல் மண்ணுக்கு இரையாக வேண்டாம். என் பேச்சு போக்கு உனக்குப் பிடிக்காது ''

"என்னால் சகிக்க முடியாது!''

"நான் சகித்துக் கொள்ளுகிறேன். உலகம் உள்ளவரை ஒரு பெண்ணிடம் மற்றொரு பெண் கேட்காத தானம்; கேட்கக் கூடாத வரம் கேட்கிறேன். கேட்டாலும் கிடைக்காத வரம்.''

செண்பகம் காதைப் பொத்திக் கொண்டாள்.

"யார் நீ, நீ யார்?, என்று அவர் கேட்பதைவிடக் கொடுமையாக இருக்கிறது. என் சொல்லைக்கூடவா உன் செவிகள் கேட்க பயப்படுகின்றன; மறுக்கின்றன. யுகம் யுகமாக ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம் மனந்திறந்து கேட்காத ஒன்றை உன்னிடம் கேட்டேன். யோசித்துப் பார். என்னை நீ ஏற்றுக்கொண்டால் போதும். நீ மாற்றினால் அவர் மனம் மாறும்; நீ மனம் மாற வேண்டும்; மனத்தை மாற்றவும் வேண்டும். நான் பேசுவது பெண்மைக்கு இழுக்கு; பேதமைக் குப்பை; மிருகத்தனத்தின் படப்பிடிப்பு ''

செண்பகம் தான் கேட்பதெல்லாம் உண்மையா? நாணல் தட்டையாக வளைந்து சுழன்று வதங்கிய அல்லித் தண்டுபோல கெஞ்சி அழும் லட்சுமி, பெண்ணா? இவள் பெண்ணா? என்று எண்ணினாள்.

"எனக்கு அழுகை வருகிறது. என் இதயம் கனியவில்லை ''

"உன் இதயம் கல்லாக இருக்கலாம். அவராக மறுக்கட்டும். என்னை அறுத்துக் கூறு போடட்டும். பெண்ணுக்குப் பெண்ணாக இடங்

கொடு. உன்னிடம் சொன்னால் என் மன இருளுக்கு விடிவு உண்டு. ஊராரிடம் பாண்டித்துரையண்ணனிடம் சொல்ல இயலுமா? வாரியாரிடம் சொல்லுவேனா?"

"சொன்னாலும் சொல்லலாம்."

"எனக்குப் பரிகாசத்தைப் பரிசாகத் தந்தாலும் பண்போடு இடம் கொடு. இதயம் கொடு. இருக்க வீடு கொடு. என் உயிர் ஊசலாடும் போது கத்தியாகக் குறுக்கிடாதே. என்னை வாழ விடாமல் துரத்தினால் நான் உன்னைப்போல மாறுவேன். வீரம் உண்டு; வினையுண்டு; வேண்டும் துணிவும் உண்டு. நீயும் சாக நானும் சாக வழி காட்டாதே. பயத்திலே உளறுகிறேன்; உன்மத்தமாகப் பேசுகிறேன். சரித்திரங்களில் சமுதாய வாழ்வின் என் போன்ற அடிமைகள் இருந்திருக்கிறார்களோ என்னவோ? உன் முன் பிச்சை கேட்கும் பேதை நிற்கிறேன்"

"போகாத ஊருக்கு வழி கேட்டுப் பயன் இல்லை."

"பயன் இல்லையா? பயத்தோடு பேசுகிறேன். உனக்குப் பயம். அவருக்குப் பயம். இந்த சமூகத்திற்கோ மற்றும் எவருக்குமோ நான் பயப்படவில்லை. பயம் நீங்கும்போது பயங்கரம். நீ கொடுக்கும் அன்பினால், நான் முளைக்க வேண்டும்; தழைக்க வேண்டும். அன்பென்னும் கொழு கொம்பிலே சுற்றிச் சுழன்று படர வேண்டும். அதுவே என் வாழ்க்கை; கருகிக் காய்ந்து துவள்வதற்குப் பதில் துண்டு போடாதே; பூரித்து மகிழ்ந்து பூப்பூக்கவேண்டும். பூத்து மணம் கமழ வேண்டும்"

லட்சுமிக்குட்டி சாதுர்யமாகச் சொன்னாள். சமரசத்தையும் சண்டையையும் நினைவூட்டினாள். புழுக்கத்தோடு போர் முரசம் தட்டினாள். வெட்கத்தோடு வேட்கையை வெளியிட்டாள்.

அங்கு சில விநாடி மௌனம் சூழ்ந்தது.

"நான் பேசியதில் மனம் விட்டுப் பேசினேன். நீ சொல்லு. செண்பகம் சொல்லு" என்று அவள் முழங்காலில் தலை புதைத்து முட்டி மோதி அழுதாள். செண்பகத்தின் பனிக் கட்டி இதயம் உருக ஆரம்பித்தது. லட்சுமிக் குட்டியிடம் கொண்ட கோபம் தணிந்து, பாசமல்ல, பச்சாத்தாபம் பிறந்தது. அன்பல்ல, அனுதாபம் ஜனித்தது.அவள் உள் மனம் அவளோடு போராடித் தோல்வியடைந்ததோ, வெற்றியடைந்ததோ, உணர்ச்சியும், உள்ளமும் மோதி முடிவுக்கு வந்தன.

"பேசாமல் இருக்கிறாயே, செண்பகம்! உன் மனம் இன்னுமா இறங்கவில்லை?"

"கேள். என் மனத்தைக் கேள்"

தெய்வத்திள் அருளை வேண்டிய பக்தியின் பரவசம் கண்ணில் ஒளிவிட்டது. லட்சுமி நிமிர்ந்தாள்.

"லட்சுமியம்மா, நாம் இருவரும் அந்நியர்கள். ஒரு பறவையின் இரு சிறகுகளாக எண்ணுகிறாய். நான் ஒப்பாத கடமை; விரும்பாத வாழ்வு. முன் யோசனை இல்லாத பின் புத்திக்காரி; அவருடைய மதிக்கு மண்ணாக இருந்தேன்; அவர் தாயின் உயிருக்கு எமனாக மாறினேன்"

"இல்லை! மதியைக் கொடுத்தவள் நீ: மனசைக் கொடுத்தவள் நீ"

"புகழாதே. என்னை புகழ்வதால் நீ என்னோடு வாழமுடியாது. என்னைப் படைத்த பிரம்மாவே வந்து கெஞ்சினாலும் என்னோடு இன்னொரு பெண் வாழவிட மாட்டேன்"

லட்சுமிக்குட்டியின் நம்பிக்கையில் முடிச்சு விழுந்தது; இப்போது புரியே பிரிந்தது. அவள் கண்கள் கெஞ்சின.

"பிரதி பயனைக் கருதாமல் அவர் உடலைக் காத்தாய்; உள்ளத்தையும் காத்தாய். உன் கைக்குள் சிக்காமல் வேறு எவர் கையில் அகப்பட்டாலும் அவர் மதியைப் பெறமுடி

யாது. மனம் வாழும் வழிக்குள் வராது. மூர்க்கமும், முரட்டுத்தன முமாக அவரைப் பாழாக்கியிருப்பார் கள்''

லட்சுமிக்குட்டியின் உள்மனம், உடல் குருத்தெலும்பு எங்கும் சில் லிட்டது. பாராட்டுக்கள் தருவது செண்பகம்!

"அவரைஅடைய உனக்கு உரிமை உண்டு. எனக்குப் பெருமை உண்டு. உதவிக்குப் பயனை என்னிடம் பிச் சை கேட்பது போலக் கேட்கிறுய்? இதை என்னல் எண்ண முடியாது. செயலாக்கவும் முடியாது. நான் சுய நலம் உள்ளவள்; விட்டுக் கொடுக் காதவள்; கெஞ்சிக் கூத்தாடி உதவி பெறமாட்டேன். உனக்காக நான் விட்டுக் கொடுக்கவில்லை. உன் உத விக்காகவும் இல்லை. அவர் வாழ்வுக் காக நான் விலகிச் செல்கிறேன்."

"நாம் இருவரும் ஒரு கூரையின் கீழ் வாழமுடியாதா?"

"முடியாது! முடியாது! மூன்று கோடி வருடங்கள் சென்றாலும் முடி யாது. என்றைக்கு அவரது தாயார், தென்காசி ரெயிலடியில் 'என் பிள்ளை பித்தனு?' என்று மனம் உடைந்து இருதயம் துடித்து, துடிப் பிலே கல்லாகிப் போய் எரிந்து சாம்பராளுரோ அவர் பாக்கியவதி. நான் இறக்கவில்லை. இன்னும் இருக்கிறேனே".

"செண்பகம் நீ தெய்வப் பிறவி. நீ இல்லாவிட்டால் அவர் மனம் மாறுவது கடினம்"

"ஒரு முறை விஷப்பூண்டு அறை த்து உண்ணுவதற்குக்கூட முயன் றேன்".

கலங்கிய கண் 'பொல, பொல' வென்று கண்ணீர் அருவியாகக் கொட்டிற்று. செண்பகத்தின் சாவைக் கற்பனை செய்து லட்சுமிக் குட்டி அழுதாள்,

"முயன்றேன். யாருடைய மன சை, மறதியைக் குலைத்தேனே அதை நிலைநிறுத்திய பின்னர் சாக வேண்டும் என்னும் முடிவுக்கு வந் தேன். அவர் மதியை மாற்றி என் விதியைத் தூற்ற வேண்டும்''

"நீ சாகக்கூடாது. நீ இல்லாத வாழ்க்கை அவருக்குப் பாலை வனம்"

"என்னை மட்டும் வாழ விடுங் கள்''

"அந்தப் பேச்சு வேண்டாம்''

"நீ மட்டும் வாழ்ந்து இன்ப மடை. எனக்குத் துளிகூட சகிப்புத் தன்மை, பகிர்ந்து வாழும் பரந்த மனம் ஆண்டவன் கொடுக்க வில்லை; அதற்காக வருந்தவில்லை. பெருமைப்படுகிறேன். இன்று சம் மதம் கொடுத்து வருங்காலத்துச் சண்டை போடமாட்டேன்"

"வெட்டு ஒன்று, துண்டு இரண் டாகப் பேச வேண்டாம்''

"நான் சுட்ட மண்; ஒட்டாத ஓடு. என் வாழ்க்கையில் குறுக்கிடும் தீமை உண்டு. நாகப் பாம்பு ஒன்று மனித வடிவில் இருக்கிறது அதன் பெயர் ராமையா. அவருடைய பெரி யம்மா பிள்ளை''

"அவர் தானே ரெயிலடிக்குப் பார்வதியம்மாவை அழைத்துப் போய் சாக வழி வைத்தது''

"நீ இதையும் அறிந்துள் ளாயா?"

இருவர் கண்களும் சில விநாடி இமைக்க மறுத்தன.

செண்பகம் தொடர்ந்து பேசி ளுள்:

"ராமையாவை நான் மணக்க வேண்டும்; அல்லது பிணமாக வேண்டுமாம். என்னை மூன்றும் நாள் தோப்பில் வழி மறித்து அவ னது இடுப்பிலே இருக்கும் கத்தி என் நெஞ்சிலே இருக்கும் என்றுன். கத்திக்கும், கத்தலுக்கும், பயமுறுத் தலுக்கும், பாரத்துக்கும்கூட பயங் கொள்ளாதவள். நான் சலசலப் புக்கு அஞ்சாத நரி யென்பதை ராமையா அறிவான். போக்கிரிகள் தங்கள் எதிரியை அழிக்கப் பயப் படுவார்கள். எதிரிகளின் உயிர் நாடியை, அன்புச் செல்வங்களை அழிப்பார்கள். நான் திருமணம்

செய்தால் 'அவர்' உயிருக்கு ராமையாவால் ஆபத்து வரும்.''

"வரமுடியாது. என் ஊர் மலையாளத்து ஊருக்குப் போய்விடுவோம்''

"போகும் அவசியம் வராது. என் வாழ்க்கைக்குப் பிறவி முதல் ராமையா எதிரி. பருவகாலம் முதல் நீ எதிரி. இரண்டு எதிரிகளையும் வெல்ல முடியும். அவ்வாறு வென்று என்ன சுகத்தை, ஆனந்தத்தை அள்ளிப் பருகப் போகிறேன்?''

"ஆணும் பெண்ணுமாக மனம் ஒன்றி கண்ணுக்குக் கண் வாழ்வதில் ஆனந்தம் இல்லையென்றால் இந்த பூமியும் வானமும் இருந்து பயன் என்ன? நீ விரக்தியோடு பேசுகிறாய். வாழத் தெரிய வேண்டும்''

"இப்படித்தான் வாழ வேண்டும் என்ற திட்டம் உள்ளவள். எப்படியாவது வாழ வேண்டும் என்ற தினவு உள்ளவளா?''

செண்பகம் சொல்லிவிட்டு பல்லைக் கடித்துக் கொண்டாள். கூரிய கத்தி யொன்று நெஞ்சின் நடுமையம் புகுந்தது போல லட்சுமிக்குட்டி உணர்ந்தாள்

மறுகணம்.

காரியவாதியும், லட்சியவாதியும் கண் இமைக்காமல் பார்த்தார்கள்.

"லட்சுமி, மன்னித்து விடு. எவ்வளவுதான் உன்னிடம் பச்சாத்தாபம் கொண்டாலும் பாசமற்ற குரோதம் கிளைக்கிறது. உன்னை விட்டு, அவரைவிட்டு எட்டாத தொடுவானமாக வாழ்ந்தால் உங்கள் வாழ்வு வளம் பெறும். அவர் வாழ அவரோடு நீ வாழ நான் வாதாடுகிறேன்''

லட்சுமிக்குட்டி, தலையிலே குடங்குடமாக தேனபிஷேகம் செய்யும் இனிமையை உணர்ந்தாள். ஆனந்தம் தாங்காமல் ஆவி சேர்த்துக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"உன் மனம் கல்லா? எனக்காக வாதாடுவதுபோல, என்னோடு வாழவும் வரக்கூடாதா?''

"என்னைப் படைத்த பிரம்மாவாலும் முடியாத செயல்.''

"சத்தியமாகவா?''

அந்த வார்த்தை செண்பகத்தின் வாய்மையைக் கறை படுத்துவதாக இருந்தது. கொடியிலே கிடந்த கிளிப் பச்சைப் புடவையை எடுத்தாள்; குறுக்கே போட்டுத் தாண்டினாள்.

"சொல்லுக்கும் கருணைக்கும், வார்த்தைக்கும் வக்கணைக்கும், நெஞ்சுக்கும் நினைவுக்கும் பரிசுத்தம் வேண்டும். உனக்காக வாதாடுகிறேன்; வழக்காடுகிறேன். நான் சொல்லுகிறபடி 'நம்' அத்தான் கேட்காவிட்டால் அவர் காலடியில் உயிரை விடுவேன்''

"உயிரைவிட வேண்டாம்; உள்ளம் மட்டும் போராடினால் போதும்''

லட்சுமிக்குட்டியின் கையைப் பிடித்துப் பரபரவென இழுத்துக் கொண்டு புறப்பட, லட்சுமிக்குட்டி கிளி பார்டர் பச்சைப் புடவையைக் கண்ணில் ஒற்றி அதனை எடுத்துக் கொண்டாள்.

இருவரும் 'சரசர' வென சொல்லும், பொருளும் போல முத்தையன் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அத்தியாயம் 24

எத்தனை காதல்கள் இத்தரை மீதினில் நித்த மடிந்திடுமோ?

ஆனந்தத்தின் உருவாக வந்தாள் லட்சுமி; அன்பின் உருவாக வந்தாள் செண்பகம்; ஆனந்தம், அன்பு இரண்டையும் கடந்துவிட்ட லட்சியத்தின் உருவாக இருந்தான் முத்தையன்.

யாருக்காக, சித்தத்தையும் சிலத்தையும் சிறகொடியாத பறவையா

கக் காத்தானோ அவன் திடுக்கிட்டான். பேசுகிறவள் காதலி; வாதாடுகிறாள்; தனக்காக வாழாது தன் தோழிக்காக வாழ வேண்டுமென்கிறாள். ஆயிரமாயிரம் காரணங்களைச் சொன்னாலும் அன்பைவிட, அறிவைவிட லட்சியம்சிதையாது; மூழ்காது; எவ்வுணர்வையும் தன்னுள்ளே ஐக்கியப்படுத்தும் அகண்டாகாரமான உணர்ச்சி லட்சியம் என்பதை விளக்கி விட்டான்.



செண்பகத்தின் சொற்படி, தாய்க்குத் தந்த வாக்கை மீறி படாத கஷ்டம் பட்டான்; நினைவும் மறந்தான்; யாருக்காக ?

"எனக்காகத்தான் உங்கள் வாழ்க்கை முழுவதும் என்பதை அறிவேன். எனக்காகவே என் சொல்லுக்காகவே இனியும் வாழுங்கள். செவி சாயுங்கள். லட்சுமியின் அன்பைத் துறக்க வேண்டாம்; அவள் அபலை; நீங்கள் இல்லாத வாழ்க்கை அவளுக்கு உப்பில்லாக் கஞ்சி."

"போதும். உன்னை நான் யோசனை கேட்கும் காலம் வரும்; எனக்கு நீ குரு உபதேசம் செய்யும் காலம் வரவில்லை. செண்பகம் என்னோடு வாழத் திட்டமிடு; அல்லது விலகிப் போ. அடிவானம் போலப் போயே விடு. உன் பேச்சுக்கும், பிரியத்துக்கும், பயந்தும், பணிந்தும் பிறர்மீது அன்பு செலுத்தும் கயமைப் புத்தி, காரண காரியப் புத்தி என்னிடம் இல்லை."

எந்தப் பொருள் கிடைக்க வேண்டும் என்று அல்லும் பகலும் தவங்கிடக்கிறோமோ, அதே பொருள் அழிய வேண்டும் என்று எண்ணும் நிலை ஒரு சிலர் வாழ்க்கையில் குறுக்கிடும். முத்தையன் எண்ணியது பேதமையோ பெருமிதமோ, "ஆண்டவனே எனக்கு எதற்காக மனத் தெளிவைத் தந்தாய்? நான் நினைவற்றுப் போய்ச் சித்தக்கலக்கத்தோடு இருந்து தொலைத்திருக்கக் கூடாதா? செண்பகத்தை எண்ணாமல் மனித மனத்துச் செயல்கள், சித்துக்கள் இல்லாமல் இரண்டும் கெட்டானாக இருக்கக்கூடாதா?" என்று உள்ளம் நைந்து உருகித் தவித்தான்.

முன்பு ரௌடி ராமையா வந்து சொன்னானே, "தம்பி! நீ யோகசாலி. தீரன், வீரன். அம்மாவின் சொல்லைத் தட்டாமல் நடந்தவன். செண்பகத்தின் சொல்லுக்குப் பணிந்தோ, பயந்தோ வேட்டையாடினாய், வேதனையடைந்தாய். வேதனையின் பரிசாக அழகின் பிறப்பிடம், உருவகம் என்று சொல்லக்கூடிய மலையாளத்துப் பெண்ணைக் கொண்டு வந்தாயடா தம்பி! லட்சு

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—அச்சம்—

நன்றென்றுந் தீதென்றும் பாரான் — முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் — வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான்.

கன்னிப் பருவத்தில் அந்நாள் — என்தன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு — பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்!

தந்தை அருள்வலி யாலும் — முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் — என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் — இனி
ஏதுசெய் வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை — இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

—'தமிழ்த்தாய்'

மியை மணந்து கொண்டு சுகமாக இருப்பாய். எனக்குச் செண்பகத்தைக் கட்டிவைக்க ஏற்பாடு செய். செண்பகம் நீ சொன்னால் கேட்பாள்" என்று பலமுறை வாதாடினன், வழக்காடினன்.

ஐயோ! பெண் தன்மனத்துச் சொத்து; அது பொன்னு? இல்லை, பொருளா? தனக்கு வேண்டாம் என்று பிறருக்குக் கொடுக்க? தன் உயிரைக் கொடுக்கத் துணியும் மனம் தன்மனத்துக்கு உகந்த காதலைக் கொடுக்கும் பரித்தியாக உணர்ச்சியுள்ளவர்கள் உலகத்துள் கோடிக்கு ஒருவராக இருப்பார்கள். தெய்வத் திருவுள்ளங் கொண்ட அக்கூட்டத்துள்ளே முத்தையன் சேர்ந்தவனில்லை. அவன் வாழ்வது வாழ வேண்டுவது அனைத்தும் ஒரு ஜீவனுக்காக. அவள் நாமம் செண்பகம், செண்பகம். செண்பகம் தவிர அவன் உள்ளத்தை இந்த உலகத்து எந்தப் பெண்மணியும் பெறமுடியாது; இது உறுதி. சத்தியம். முக்காலும் நிகழப் போகும் நித்திய உண்மை.

"ராமையா அண்ணே! நீ எனக்கு நல்லது செய்துள்ளாய்; அம்மாவைக் காப்பாற்றியது நல்ல செயல். எனக்குத் தீமையும் செய்துள்ளாய். பொய் சொல்லி பல வழியில் தீமை வந்திருக்கிறது. இரண்டையும் நான் மறந்து விட்டேன். ஆனல் செண்பகம் பற்றி இன்னொரு முறை இந்த வார்த்தையைச் சொல்லாதே. அவளாக மனம் மாறி என்னை மறுத்து விட்டால், பச்சையாகச் சொல்லுகிறேன். நீ மணந்து கொள். என்னிடம் பிச்சை கேட்பது போல் கேட்காதே. நான் ஒருமுறை மனத்திகில் பிடித்தவன். மீண்டும் என் மனம் பேதலிக்கும். எனக்குப் பிசாசுத்தனமான பலம் வரும். அதன் பின்னர் நான் மனிதனக இருக்கமாட்டேன். மிருகத்துக்கும் எனக்கும் வித்தியாசம் பலத்திலும் அறிவிலும் இருக்காது. நீ தயை செய்து எழுந்து போய் விடு"

முத்தையன் வலுக்கட்டாயமாக அண்ணன் ராமையாவின் கைகளைப் பிடித்துத் தூக்கிவிட்டான். அப்போதுதான் அந்தக் கரங்களுக்குள் இரும்புத் தன்மை நிறைந்த பலம் இருப்பது ராமையாவுக்கு நன்கு புலனயிற்று.

ராமையா 'ரௌடி வழக்'காடி, செண்பகத்தைப் பெறமுடியாது என்று போய்விட்டான்.

இன்று, எதைப் பிறர் பேசக் கூடாது, கூரிய வாளாகப் பசிய இதயத்தைப் புண்படுத்துமென்று சொன்னனே அதை செண்பகமே பேசுகிருள். தான் விலகிக் கொள்வதை அவள் பேசலாம்; தன்னிடத்தில் மற்றொரு பெண்ணை அமர்த்துவதை முத்தையன் இதயம் ஒப்புக் கொள்ளுமா?

முத்தையன் பேச்சுக்குப் பேச்சு எதிர்ப்புச் சொல்லி செண்பகத்தின் பேச்சை மறுத்தான்; வாக்கைத் தடுத்தான்; அவள் வேண்டுகோள் வீணயிற்று; அவள் வெறும் உருவம்; மனிதக்கூடு; ஆசையும் அனலும் வீசும் அழகு உருவம் இல்லை; அன்பு ஊற்று இல்லை. காய்ந்து பசையற்ற பண்டம். அவன் மனசை ஆட்டிப் படைத்து அலங்கோலம் செய்த பேயும் அல்ல. ஆட்சி செய்த பெண்ணும் இல்லை.

"நான் விலகிப் போகிறேன். நீங்கள் லட்சுமிக்கு செய்ய வேண்டிய நன்றிக்கும், நட்புக்கும் மிகமிகக் கடன்பட்டவர்கள். மனித உருவமாக மட்டுமா? உள்ளமாகவும் மாறிவிட்டீர்கள்; மாற்றிய பெருமை படைத்தவளுக்கு உங்கள் அன்பைக் காணிக்கையாகக் கொடுங்கள்"

லட்சுமியின் செவியிலே தேனருவி பாய்வதாக உணர்ந்தாள்.

"ஒரு பெண்ணுக்காக மற்றொரு பெண் வாதாடலாம்; வழக்காடலாம்; வாழ்க்கைப்படச் சொல்லுவதை தியாகம் என்றும், பெண்ணின் பெருமை என்றும், அதிசயம் என்றும் எவரேனும் பாராட்டுவார்கள்.

என்னை இனி எந்தப் பெண்ணும் நினைக்க முடியாது; மறக்க முடியாது. நான் உன்னுடைய அடிமை; அரசன். எனக்கு எவருமே யுக்தி சொல்ல வேண்டாம்''.

மீண்டும் மீண்டும் வாதப் பிரதி வாதங்கள் மோதி அலுத்தன. ஒவ்வொரு சொல்லும் உதட்டிலிருந்து வரவில்லை; இருவர் உள்ளத்தின் அடித்தளத்தில் நிலவும் பாச ஒலி என்பதை லட்சுமி கண்டாள். ஒரு கணம் மனம் அதிரும்; நினைவு கலையும்; உணர்வு சிலிர்க்கும். இவ்வளவு அன்பும் அந்நியோந்நியமும் நிறைந்தவர்களைப் பிரித்தும் விலக்கியும் தான் வாழவேண்டுமா? ஆம், வேண்டுந்தான். அதற்காகவே பிறந்தவள் போன்று, வளர்ந்தவள் போன்று நிற்கிறுள் லட்சுமி!

"செண்பகம், நீ மனதார வாக்குக் கொடுத்தாய். உன் செயலுக்கும், சொல்லுக்கும் இளகாத இவர் நெஞ்சத்தை நான் பயன் செய்ய முடியாது. நாம் இருவரும்...''

"நிறுத்து லட்சுமி. சத்தியமாகச் சொல்லுகிறேன். தெய்வ சம்மதத்தோடு சொல்லுகிறேன். மனமாரச் சொல்லுகிறேன். ஒருவன்—ஒருத்தி வாழ்க்கையில் நம்பிக்கையுடையவள் நான், நீயும் அவரும் வாழ்வீர்கள். உங்கள் திருமணத்தைக் கண்ணுரக் காண நான் அருகில் இருக்க மாட்டேன். போய் வருகிறேன். அத்தான், அவள் அபலை. உங்களை நம்பிய உயிர். உயிரைத் தள்ளாதீர்கள். ஏற்றுக் கொள்ளுங்கள்''

செண்பகம், மழைக்காலத்து மின்னல் போல பளீரென்று வெளியே ஓட்டமும் நடையுமாகப் போனுள். அவளைத் தடுக்க நினைவு இருந்தது; தைர்யம் இல்லை; ஆடாது அசையாது முத்தையன் இருந்தான். தடுக்க முயன்று எட்டிப் பிடித்த லட்சுமியின் கரங்களை விசிறி எறிந்து விலக்கியபடியே போய் விட்டாள்.

போகும்போது விக்கலும், விம்மலும் ஏனே?

முத்தையனும், லட்சுமியும் அங்கே தனித்து விடப்பட்டார்கள். லட்சுமியின் பார்வையில் வெற்றி முகிழ்த்தது. தோல்வியுறப் போகும் ஆண் மனத்தை வீழ்த்தும் பெருமித நோக்கோடு கூர்ந்து கவனித்தாள். அவள் பார்வைக்குள் ஒரு விநாடி சிக்கிய முத்தையன் கண்கள் பாம்பின்முன் வந்தவனைப்போல பீதியடைந்தான். அவன் மூளை நரம்புகள், உணர்ச்சி முடிச்சுகள் நெளிந்து கொடுத்தன. தன்னையும், தன் பலத்தையும், அறிவையும் அடக்கிச் சமாளிக்க முயன்றும்...?

பொத்துக் கொண்டுவரும் மேல் வெள்ளமாக கோப அலைகள் 'தடார், தடார்' என்று மோதி 'பழிவாங்கு' எனச் சொல்லின; கெஞ்சின; கூத்தாட ஆரம்பித்தன. கோப வெள்ளம் குதிபோட்டு அலை மோதிற்று. இதயக் கரை அதிர்ந்தது.

"லட்சுமி! நான் நன்றி கெட்டவனுக நடந்து கொள்வேன். என்னைக் கொலைகாரன் ஆக்காதே. போய் விடு''

"உங்கள் கையால் இறக்க விரும்புகிறேன். கொல்லுங்கள். அந்தப் பாக்கியம்......''

அவளாக நாலெட்டு முன் நடந்தாள். வெற்றி நிச்சயம். செண்பகம் விலகிக் கொண்டாள். இனி தன்னை மணந்து தீர வேண்டுமென்றது தர்க்க அறிவு. தர்க்கத்திற்கும் சாஸ்திரத்திற்கும் அப்பாற்பட்ட மனசு காதலுக்கு உண்டென்பதை மறந்து விட்டாள் லட்சுமி.

"என்னுடைய செண்பகத்தை மறக்கமாட்டேன்''

"அவள் வாழத் தெரியாதவள்—பறவையின் இரு இறக்கைகளாக நம்மோடு வாழ விரும்பாதவள்''

"அவள் வாழ்க்கையைக் கொல்லும் எமனே நீ. போ! போய்த் தொலை''

"நான் உயிரோடு போகமாட்டேன்''

இன்னும் இடைவெளியில் நெருக்கம் ஏற் பட்டது. லட்சுமியின் வெற்றியும், வீரப் பிர தாபமும் கண்களில் ஜொலிக்கிறதும் புன் முறு வல் உள்ளத்தின் எக்களிப்புக்கு விளிம்பு கட்டுகிறதே.

"பெண்பாவம் வேண்டாம். போய்விடு"

லட்சுமி சிங்கக்குரல் கேட்டு பயந்து நடுங் குபவள்போல பின்வாங்கி அடுத்த கட்டுக் குள் போனுள். முத்தையனின் மனம், செண் பகத்தின் வீடுநோக்கித் தடம் பிடித்தது. கர்ஜனைக்குப் பயந்து நடுங்கிவிட்ட லட்சு மியை மறந்தான். மனம் மேலும் மேலும் செண்பகத்தைப் பின் தொடர்கிற வேளை.

ஐந்து நிமிஷத்தில் கிளி பார்டர் பச்சைப் புடவை கட்டிக் கொண்டு, "இப்போதாவது என்னைப் பிடிக்கிறதா?" என்று குறும்பு கண்களிலே கூத்தாட, குரலிலே மோகம் துளிர்க்க, உடல் அசை விலே உள்ளத்து வேட்கை கொப் புளிக்க நடந்தாள்.

குரல் தந்தவள் லட்சுமிக்குட்டி, உடையும் உருவமும் தருகிறவள் செண்பகம்.

"யார் நீ?"

முத்தையன் மயங்கிய நிலையில் கண் இமைக்காது பார்த்தான். அதே கிளிப் பச்சைப் பார்டர் புடவைதான் கட் டியிருந்தாள் செண்பகம். என் றைக்கோ ஒரு தினம் நெற்றிக் குத் திலகம் இடும்போது பார்த்தான். அந்தக் கிளிப்

பச்சைப் புடவையே அவனை வீரனாக மாற்றியது; புலியைப் புல்லுருவியாக எண்ண வைத்தது. இன்று? இன்றைக்கு அதே கிளிப் பச்சைப் புடவை அவனைப் புலியாக மாற வைத்தது.

"இது ஏது? செண்பகத்திடம் திருடினாயா? இந்த உடையில் வராதே..."

"திருடவில்லை! அவளாகச் சத்தியம் செய்தாள். இப்புடவை சத்தியமாக அவள் நம்மை விட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறாள். அவளாக என்று வந்தாலும் செண்பகத்துக்கு நம் வீட்டில் கட்டிலுண்டு, மெத்தையுண்டு. அன்பும் அரவணைப்பும் உண்டு."

"நிறுத்து!"

உணர்ச்சிக் கட்டத்தில் லட்சுமியின் பேச்சு நிற்குமா? அவள் மேலும் மேலும் உற்சாகமாகப் பேசினாள். பேச்சை செவிமடுக்க இயலாமையால் கொதிப்பேறிய கைகள் அவள் கன்னத்தில் புரண்டன. சிவந்த கன்னத்தில் அவனது விரல்களின் தழும்பு பளிச்சிட்டது. அந்நிலையில் அவள் அழவில்லை.

ஆனந்தம் கொண்டாள் லட்சுமி.

"இந்த ஸ்பரிசம் பெறத்தான் நான் வாழ்ந்தேன். ஒரு கன்னம் பெற்ற பாக்கியம் மறு கன்னம் பெறக்கூடாதா?"

முத்தையனின் மூர்க்கம் தணிந்தது. கோபத்தை அச்சொற்கள் அணைத்துத் தீய்த்தும் விட்டன. அவனுடைய பாச உள்ளம், "சிரிக்காதே, விட்டுக் கொடுக்காதே" என்று எச்சரிக்கை தந்தது. லட்சுமியின் உறுதியான மனம், பார்வை, மன அலைகள் அவன் மனத்தில் பதிய ஆரம்பிக்கவே, "லட்சுமி நான் கோபக்காரன். அறிவை ஒரு சமயம் இழந்தவன். மீண்டும் என்னை அந்நிலைக்குத் தள்ளாதே. நாளைக்கு நீ இவ்விடம் வா. வாரியார், பாண்டித்துரை இவர்களையும் அழைத்து வா. என் மனசை உனக்குச் சொல்லி விடுகிறேன்"

அவள் மெல்லிய கரங்களைப் பிடித்து மெதுவாக வெளியே அழைத்து வந்து தெருப்பக்கம் நிறுத்தியவன் வீட்டுக்குள் ஓடிக் கதவைத் தாழிட்டான். பெண் முகத்துக்குக் கோழையாகி பெண் பேச்சுக்கு பலியாகிவிடக்கூடாது என்று தனக்கு தெம்பு ஊட்டிக் கொண்டான். தனிமை தன்னை வீரனுக்கும் என்று நெருப்பைவிட்டு எட்ட வைத்தான் பஞ்சை; காந்தத்தை விரட்டியடித்தான் அந்த இரும்பு மனிதன்.

பாதி வெற்றியைக் கண்ட லட்சுமி மெதுமெதுவாக பாண்டித்துரையின் பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். மெல்லிய பூங்காற்று, பின் நேரத்து நிலா, வேர்ப்பலாவின் உச்சிக் கிளையைத் தொட்டுப் பிடிப்பதுபோல பந்தாடிக் கொண்டிருந்தது நிலவுக் கோளம்.

வீட்டுக்குள் அடைபட்ட புலியைப்போல இங்குமங்கும் உலாவினன். சன்னல் வழியாக தொலை தூரத்தில் பச்சைப் புடவை கட்டிய பாவை லட்சுமி போவதைப் பார்த்து மனம் எரிந்தான். அடுத்த கட்டுக்குள் ஓடி, அங்கே களைந்து கிடந்த லட்சுமியின் புடவையை ஒரு கம்பினல் எடுத்து ஜன்னலுக்கு வெளியே எறிந்தான்.

"ஒழி. ஒழிந்து போ. நானும் செண்பகமும் கண்காணுத இடத்துக்கு ஓடிப் போவோம்..."

முத்தையன் தனக்கு வேண்டிய துணிகளைச் சிறு பெட்டிக்குள் திணித்துக் கொண்டிருந்தான்; நேராக செண்பகம் வீட்டுக்குப் போய் அவளைக் கெஞ்சி, வணங்கி, சம்மதிக்க வைத்து கண்காணுத கடல் கடந்த சீமைக்கு ஓடி விடுவது என்று உறுதிப்படுத்தினன்.

முத்தையன் பூனைபோல ஒண்டிக் கொண்டு செண்பகத்தின் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் வேளையில்,

பலாத் தோப்பின், வேலிக்கருகாக நடந்த சம்பவத்தை உலகம் பார்க்கவில்லை!

மங்கிய நிலவொளி. பச்சைக் கிளி பார்டர். சிவந்த ரவிக்கை. அடிமேல் அடிவைத்து வரும் வனமோகினி. கண்டோரைக் கிறுக்கவைக்கும் கன்னியின் உருவம். பசுமை, பால்நிலவு, பச்சைப் புடவையின் பசுமை அழகு ஓரிடம். இயற்கைச் சூழ்நிலையும் ராமையாவின் உள்ளத்தே நெருப்பிட்டன. துருத்தி வைத்து ஊதியது போலிருந்தது அவள் தனிமை.

"செண்பகம்!"

குரல் வந்த பக்கம் பார்த்தாள். லட்சுமியின் நினைவு முழுக்க முழுக்க முத்தையன் மீது இருந்தது!

"வாருங்கள், வாருங்கள்! ஏமாறப் போகிறீர்கள்" என்று ஓடியே போய் மரத்தோடு ஒண்டினுள். முத்தையனை ஏமாற்றி திடுக்கிட வைக்கப் போகிறுளாம்! ஒளிந்து, கண்ணில்பட்டு, உள்ளத்தை உச்சநிலைக்குத் தூக்கி எறிந்து, பந்தாட எண்ணி மரத்தின் மறைவில் நின்றுள்.

"வெளியே வந்துவிடு, செண்பகம்"

"முடியாது" கொஞ்சலாகச் சொன்னுள். பால் நிலவின் ஒளி,

மேகத்தால் மறைந்து நிழலும் ஒளியும் விளையாடிய தோப்புக்குள் முகம் தெரிவிக்காத வெளிச்சம்.

"யார் ஏமாறப் போகிறார்கள்? என்னையும் வஞ்சித்து நீ வாழவா பார்க்கிறாய்"

முரடன், முர்க்கன் சொல்லிக் கொண்டே தன் இடுப்பிலுள்ள கத்தியைச் சொருகிவிட்டான். இன்பத்தின் இருப்பிடத்தைக் கற்பனை செய்து வாழ்வின் சொர்க்கவாசலைக் கற்பனை செய்து வந்த லட்சுமியின் உடல் துடித்தது.

"படுபாவி முத்தையா...இதற்காகவா வாழ்ந்தேன். வஞ்சித்தாய்... சண்டாளா முத்தையா... நன்றி கெட்டவரே!"

"யார்? யார்? முத்தையன் இல்லை நான். முத்தையன் இல்லை"

"நீ யார்?" அவள் குரல் கசங்கிற்று. தேய்ந்து ஸ்வரம் இறங்கிற்று.

நிலவின் கதிர்கள் அவள் முகத்தில் படர்ந்தன.

"ஆ! நீ செண்பகம் இல்லையா? இது அவள் புடவை அல்லவா?"

"நீ, நீ ... முத்தையன் இல்லையா?"

எதிர்பாராத இருமுகங்களும் கோரத்தால் நிலை கலங்கின.

* * * *

லட்சுமி ஊனோடு உயிரோடு ஒயில் நிறைந்த மயிலாக இருந்தாள்; இன்றில்லை என்ற செய்தி மறுநாள் பரவியபோது, வீட்டுக்குள்ளே புலம்பிக்கொண்டிருந்த முத்தையன் திடுக்கிட்டான். எங்கும் கொலையுண்ட லட்சுமியின் பேச்சு. வேர்ப்பலாவின் மரத்தை யடுத்த நாவல் மரத்திலே ராமையாவின் சடலம், அவன் துண்டிலே தொங்குகிறதாம்!

முத்தையன் சேதியைக் கேட்டுச் சிரித்தான். மனமாரச் சிரித்தான்.

அவன் அனுதாபம் தெரிவிக்கவோ, பெற்ற நன்றிக்குக் கடன் காட்டவோ இறந்த லட்சுமியின் பிரேதம் அருகாகப் போகவில்லை.

செண்பகத்திடம் போய் நின்றான். துக்கமோ துயரமோ படராத ரேகை தரும் முகத்தைக் கண்டாள் செண்பகம்.

"எங்கே வந்தீர்கள்?"

"பதில் சொல்ல வரவில்லை"

"கட்டளை இட வந்தீர்களோ?"

"இருக்கட்டுமே"

"நேற்று என்னோடு ஓடி வர மறுத்தாயே. இன்று?"

அவள் பதிலைக் காண, கண்ணைப் பார்த்தான்.

ஊரார் முழுக்க சாவின் பயங்கரத்தைப் பேசிக் கொண்டிருந்த வேளையில், வாழ்வின் ரகசியத்தை இருவர் கண்கள் பேசிக் கொண்டிருந்தன. பிறர் சாவிலிருந்தும் வாழ்க்கை வளம் பெறும் என்பதை அவர்கள் உள்ளங்கள் உவகையுடன் அனுபவித்தன.

ஊரார், பாண்டித்துரை, வாரியார் மற்றும் பலர் சவ அடக்கத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். வீழ்ந்தவர்கள் மண்ணுக்கு இரையாக வேண்டாமா? வாழ்பவர்கள் விண்ணுக்குப் பறக்க 'நாள் பார்க்க'ச் சில தினங்கள் செல்ல வேண்டும்.

காலவெள்ளம் மெள்ள மெள்ள ஒவ்வொருவரை ஒவ்வொரு எல்லையில் மறந்துவிடும்; காதல் உள்ளங்கள் யுகயுகாந்தரமாக ஒன்றோடு ஒன்றைக் கவ்வி, உண்டு உயிர்த்து நிலவும் என்பது காமனும் கண்ணும் உள்ளவரை நடக்கும் சித்து.

முத்தையனும் செண்பகமும்!

இவர்கள் வாழ்க்கைப் பட்டம் இனி காற்றோடு பறக்கும் பட்டம்; காற்றினை எதிர்த்துப் பறக்கும் பட்டந்தான் நம் கலைப் பசிக்கு உப்பும், உணர்வும் தரும்!

(முற்றும்)

வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் எடுக்க
ஒரு

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

அமைத்துவிடுங்கள்.

இந்த பம்பு செட்டுகளைத் தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலும் அல்லது குழாய்க் கிணற்றிலும் சுலபமாய் அமைக்கலாம். நீளமான குழாய் மாட்டுவது, உயரத்தில் டாங்கிகள் கட்டுவது முதலியவை தேவையில்லை. அவை முழுவதும் தானாகவே ஆட்டோமாட்டிக் வேலை செய்வதுடன் வருஷக் கணக்கில் திருப்திகரமாக சேவை புரியும்.



குழாயைத் திறந்தால் தண்ணீர் கிடைக்கும்

டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்

விசாரிக்குமிடம் :

ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி லிட்.,

5-7, ஸெகண்ட் லேன் பீச், மதராஸ்-1.

மாதரசே! செல்வப் பெண்ணே ராதே, ராதே!

"ஆரெஸ்ஸஸ்"

வாழ்க்கை இனிக்க வில்லை; எட்டியாகக் கசந்தது. இப்படித்தான் அவன் எண்ணினான். கைகள் கடற்கரை மணலை அளைந்து கொண்டு இருந்தன. அவன் மனமோ கடந்தகால நினைவுச் சேற்றில் புரண்டு கொண்டிருந்தது. ஒழுங்கு, நியதி எதுவுமின்றி எண்ணச் சித்திரங்கள் மாறிமாறி மனதிலே ஓடின.

அவன் வாலிபன்; இருபத்து ஐந்து வயது; மலையைக் கடுகாக எண்ணும் இளமை; உலகியல் இன்னும் அவனைக் கவ்வவில்லை. பரந்த கொள்கைகள் பேசி வந்தான். கடைப் பிடிக்கவும் செய்வான் என்று தான் எல்லாரும் நம்பினார்கள்.

பரந்த கொள்கைகளை ஏற்றிருந்த அவன் உடலும் விரிந்து பரந்துதான் இருந்தது. அவனது அரும்பு மீசை கூட அரும்பும் அனுபவத்தைக் காட்ட வில்லையா!

மொத்தத்தில், ஆள் நல்ல அழகன் தான். அழகுப் போட்டிகளிலே கலந்து கொள்ளும் அளவிற்கு அழகனல்ல என்றாலும், பொது இடங்களில் பார்க்கும் பருவப் பெண் எவளும் ஒரு கணமாவது அவனைப் பார்த்து உற்று நோக்காமல் இருக்க மாட்டாள்.

அவன் ஒரு பத்திரிக்கையில் சினிமாப் பகுதி ஆசிரியன்.

அந்தப்பதவி அவனுக்கு வாய்த்ததால் தான் அவனுக்கு இந்த மனக் குழப்பம்.

பத்திரிகை ஆசிரியன் என்ற முறையிலே அவனுக்குச் சில பணிகள் உண்டு. அந்தப் பணிகளை நிறைவேற்றச் சென்ற இடத்திலே தான் கோகிலாவை அவன் சந்திக்க நேர்ந்தது. கோகிலாவைச் சந்தித்ததால் தான் அவன் இப்பொழுது வேதனைப்பட்டுக் கொண்டும் இருக்கிறான்.

சந்திரன் - அது தான் அவனது பெற்றவர்கள் சூட்டிய பெயர்; 'தண்மதி'-இது அவனாகச் சூட்டிக்கொண்டிருந்த புனைப் பெயர்.

அவனது வாசக ரசிகர்கள் எல்லாம் தண்மதியைத் தான் அறிவார்கள்.

தண்மதியின் எழுத்தில் ஒரு புதிய மெருகு இருந்தது. வளவளப்பான சிமென்ட் பெரு வழியில் வழுக்கி ஓடும் 'ரோல்ஸ்ராய்ஸ்' காரைப் போல, தங்கு தடையின்றி ஓடியது அவனது பேனா. அவனது வாசகர்களும் அந்த விலை உயர்ந்த காரிலே சவாரி செய்வது போன்ற இன்பத்தை அவன் கதைகளைப் படிக்கும் போது அனுபவித்தார்கள்.

ஆனால் வாழ்க்கை என்ன எப்பொழுதும் சுகமாகவா செல்கிறது? அவனது எழுத்தும் வாழ்க்கைப் பாதையின் கரடு முரடான பகுதிகளைத் தழுவியும் சென்றிருக்கிறது. அப்பொழுது - விலையுயர்ந்த கார் குண்டும்,குழியுமாக உள்ள நாட்டுப்புற ரஸ்தாவில் செல்லும் பொழுது காரின் சொந்தக்காரனின் உடல் துடிப்போடு, உள்ளமும் கொதிக்குமே,-அது மாதிரி அவனது வாசகர்களும் துடிப்பார்கள். தண்மதியின் எழுத்தில் அவ்வளவு வேகமும், உண்மை நவிற்சியும் இழையோடின.

அவனது இந்த எழுத்து வன்மை தான் கோகிலாவை அவன்பால் இழுத்தது.

ஒரு நாள் வழக்கம் போலக் காலை பதினொரு மணிக்கு தனது அறையில் தபால்களைப் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

புஷ்கோட், புல் ஷர்ட், கரை வேஷ்டி, எட்டு முழம், சிறிய உருப்படி, பெரிய உருப்படி என்று சலவையாளர் பிரிப்பதைப் போலக் கடிதங்களைத் தரம் பிரித்துக்கொண்டிருந்தான்.

கேள்விகளை வீசுபவை, பாராட்டுக் கடிதங்கள், அழைப்பு மடல்கள், முணு முணுக்கும் முடங்கல்கள், பிரசுரிக்க வேண்டியவை, இப்படியாக.

இடையில் ஒரு கடிதம், பச்சைப்பட்டாணியை ஒரு வரிசையாக அடுக்கியது போன்ற குண்டு, குண்டு எழுத்துக்கள் கொண்ட முகவரியே கண்ணைக் குளிர்வித்தது.

பிரித்தான்; செண்பக மலரின் இதழ் விரிந்தது போன்ற நறு நாற்றம் 'ஜில்'வென்று நாசியைத் தாக்கியது. மயக்க உணர்வோடு படிக்க ஆரம்பித்தான்.

கடிதம் பேசப் பேச அவளும் பேசினாள். வார்த்தைகள் அவனது உள்ளத் திரையிலே ஒரு அஜந்தா ஓவியத்தை உருவாக்கின.

" தண்மதி அவர்களே !

நான் தங்கள் ரஸிகை. தங்கள் எழுத்து வண்ணத்தில் உள்ளத்தைப் பறி கொடுத்தவள்.

"தங்களைப் போன்றே நானும் கலைத் தொண்டில் ஈடு பட்டிருக்கிறேன். தாங்கள் எழுத்தாளர். நான் நடிகை. இருவரும் சமுதாயப் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்."

இப்படி வளர்ந்தது அக் கடிதம். இப்பொழுது கூட, பல மாதங்களுக்குப் பிறகு, இன்று கூட அவனால் அக்கடிதத்தின் வாசகங்களை மறக்க முடியவில்லையே ?

பாராட்டோடு நின்றிருந்தால் கோகிலாவின் கடிதம் மற்ற பல கடிதங்களைப் போல பைல்களை அடைந்திருக்கும். ஆனால் பாராட்டுக்குப் பிறகு வந்த அழைப்பு-அவனைச் சந்திக்க அவள் கொண்டிருந்த துடிப்பின் விளக்கமான அழைப்பு - அவளது பளிங்கு இதயத்தைப் படம் பிடித்ததாகவே அவன் எண்ணினான்.

எனவே அன்று மற்றக் கடிதங்களுக்குக் கிடைக்காத மதிப்பு, அவள் கடிதத்திற்குக் கிடைத்தது.

பர்ஸைத் திறந்தான், கோகிலாவின் கடிதத்தைப் பத்திரப் படுத்த; அங்கே... ?

ராதையின் புகைப்படம் ! ராதை அவனை விழித்துப் பார்ப்பது போல ஒரு பிரமை. ஒரு கணம் தான். புதிய வெள்ளம், பழையதை அடித்துச் சென்றது. ராதையின் தெளிவு முகத்தை மறைத்தபடி பர்ஸிலே ஏறியது கோகிலத்தின் கடிதம்.

ராதையின் புகைப்படம் மறைந்தது...அவள் நினைவு ? உள்ளேயே நீறு பூத்துக் கொண்டிருந்தது என்ற உண்மை சந்திரனுக்கு இன்றுவரை தெரிய வில்லையே ?

ராதை அவன் முறைப் பெண், அத்தை மகள்.

கதைகளிலே சொல்வது போல, ராதை-சந்திரன் சின்னஞ் சிறு வயதினிலே ஒத்த சிட்டுக் குருவி இணைகளாகத்தான் அந்த கிராமத்திலே வளர்ந்தார்கள்; ஒன்றாகவே திரிந்தார்கள்.

ஒரு முறை அல்ல, பல முறைகள், இருவரும் எதிர்காலத்திலே ஒன்றாக வாழ வேண்டியவர்கள் என்று பெரியவர்கள், கூறியதைக் கேட்டிருக்கிறான் சந்திரன்.

ஆனால், ராதையை அவன் வெறுக்கவில்லை என்றாலும் அவளைத் தனது துணைவியாகக் கற்பனை செய்து என்றுமே பார்த்ததில்லை. சந்திரன் அவள்மீது அளவற்ற பாசம் கொண்டிருந்தான் எனினும் அவள் தனது இல்வாழ்க்கைப் பொறுப்பை ஏற்கப் போகிறவள் என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது என்னவோ கிடையாது.

தனக்கு ஒரு மனம் இருப்பதைப் போல ராதைக்கும் நெஞ்சம் இருப்பதை சந்திரன் அந்த நாட்களில் எண்ணியதே கிடையாது. ஜாண் பிள்ளையானாலும், ஆண் பிள்ளை என்ற மனப்போக்கிலே வளையாத தேக்காக வளர்ந்து விட்டான்.

ராதையின் படிப்பு எட்டாவது வகுப்போடு நிறுத்தப் பட்டது. சந்திரன் தொடர்ந்தான். நகரத்தை அடைந்து பட்டதாரியாக மாறினன்.

நகரத்து வாழ்க்கை அவனை அடியோடு மாற்றி விட்டது. உயர்ந்த கட்டிடங்கள் அவனது ஆசைகளை உயர்த்தின. பளபளப்பான கார்களில் பவனி வருவோரைப் பார்த்து அவனது இலட்சிய அடிவானம் மேலும் விரிந்தது. பொது வாழ்க்கையில் ஏற்பட்ட தொடர்புகளால், புகழ்ப்போதை வேறு அவனுக்கு ஏறியது.

வாழ்ந்தால் பூரணமாக வாழ வேண்டும்; வசதியோடு வாழ வேண்டும் என்று திட்டமிட்டான்.

அதிர்ஷ்ட அடிப்படையிலே மாளிகை கட்டிய தகுதியில்லாதவர்களைப் பார்த்தபொழுதெல்லாம் நெடுமூச்செறிந்தான்.

அவனது ஆசைத் துடிப்புகள் அவனைப் பேசவும், எழுதவும் தூண்டின.

கல்லூரியிலே பேசினன்; கல்லூரி மலர்களைத் தனது எழுத்தால் நிரப்பினன்.

பிறகு கொஞ்சம், கொஞ்சமாக வெளியுலகிலும் விளம்பரம் வளர்ந்தது. இலக்கிய வானின் விடிவெள்ளி என்று பாராட்டுக்கள் குவிந்தன.

கல்லூரியை விட்டு வெளியேறியதுமே, சந்திரன் 'தண்மதி' ஆனன்.

வேலைதேடி எந்த விண்ணப்பமும் அவன் போடவில்லை. அவனைத்தேடி வந்தது பத்திரிகைப் பணி.

முதல் ஸ்பூட்னிக்கை விட்ட விஞ்ஞானியைப் போன்ற பெருமிதத்துடன் அவன் பணியை ஏற்றுக் கொண்டான்.

பிறகு - ஒரு நாள் - சிறு விடுமுறை ஒன்றில் சொந்த ஊர் சென்றவன்......

அப்பொழுதுதான், ராதையின் புகைப்படம் அவனது பர்ஸிலே ஏறும் சந்தர்ப்பம் நிகழ்ந்தது. ராதையின் மனத்தை அவன் புரிந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

'மாமா!' என்று அழைத்தபடி நுழைந்தான் சந்திரன், ராதை வீட்டில்.

முதல் இரண்டு அறைகளைத் தாண்டியவன் ஆள் அரவம் ஏதுமில்லாதது கண்டு திகைத்தபடி நிற்கையில்—

'வாருங்கள்... அத்தான்!' என்ற தீங்குரல் அவன் காதுகளை நிரப்பியது.

திரும்பினன். அங்கே ராதை! பூத்துக் குலுங்கும் பொற் கொடியாக நின்றிருந்தாள், அத்தை மகள் ராதை!

ராதை...! எப்படி வளர்ந்து விட்டாள். கன்றுக் குட்டியாகத் துள்ளி ஓடிய அந்தச் சிறுமி ராதையா இவள்?

அவனது நீடித்த, நிலைத்த நோக்கு, அவளது கன்னங்களில் செம்மையைப் படர விட்டது. மறுகணம் மறைந்து விட்டாள் ராதை.

சந்திரன் வெளியேறினன், ஆனல் ஒரு சலனம் அவன் நெஞ்சிலே 'ராதை இவ்வளவு அழகியா!' என்று. ஊருக்குப் புறப்படுமுன் அவனது அபிப்பிராயம் கேட்டார்கள். 'போய் எழுதுகிறேன்' என்று நகர்ந்து விட்டான்.

நகரத்தை அடைந்ததும் கடிதம் கிடைத்தது. புகைப் படத்தோடு ராதை அனுப்பி இருந்தாள்.

ராதை தான் எழுதியிருந்தாள், கோணல் மாணலாக ... அவளது ஆசைகளைக் கொட்டியிருந்தாள். பாவம், நாட்டுப் புறத்திலே வளர்ந்தவள்!

ஆனல் நகரம் மீண்டும் அவனது நினைவுகளை மாற்றியது. அவளது

புகைப் படத்தைப் பத்திரப்படுத்தியவன் அவளது கடிதத்தைக் கசக்கி குப்பையிலே எறிந்தான்.

காரணம் — ராதையை அவன் விரும்பினாலும் அவளது ஏழ்மையை அவனால் மன்னிக்க முடியவில்லை.

அவனது 'முன்னேற்றம்' என்ற நெஞ்சுத் தீ, கரன்ஸி நோட்டுக்களை நிலக்கரியாகக் கேட்டது.

பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் அவனுக்கு நேரிட்ட அனுபவங்கள், அவனது ஆசைத் தீயிலே பெட்ரோலை ஊற்றின. பேட்டி கண்ட பிரமுகர்கள் வாழ்க்கை அவனது உள்ளத்தை மேலும் உறுதிப் படுத்தியது.

என்றாலும் — பத்திரிகை உலகம் அவனது பொருளாதாரத்தை உயர்த்த வில்லையே? புகழ் கிடைத்தது. ஆனால் பங்களா வாங்க முடிய வில்லை; பஸ்ஸிலே தான் செல்ல வேண்டி இருந்தது.

'எழுத்துலக மன்னர்களில் ஒருவனுக்கு நடுத்தரமான வாழ்க்கையா!' என்று கொதித்தது அவனது இளமை உள்ளம்.

எப்படியாவது சென்னையில் ஒரு பெரிய புள்ளியாகி விட வேண்டுமென்ற துடிப்பு நாளுக்கு நாள் அவனை அரித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது தான், கோகிலாவின் கடிதம் வந்தது.

கோகிலாவைச் சந்திக்கச் சென்றான் சந்திரன். முதற் சந்திப்பே இனிமை வாய்ந்ததாக இருந்தது.

விளைவு; கலையும், எழுத்தும் கரம் கோர்த்தன. அவனது பேனாவிற்கு 'பாஸ்போர்ட்' இருந்த பத்திரிக்கைகளில் எல்லாம் கோகிலாவைப் பற்றிய செய்திகளை நிரப்பினான்.

சந்திரன் நாட்கள் செல்லச்செல்ல, தான் கோகிலாவிற்கு இதயத்தை வழங்கி விட்டதாக எண்ணவும் ஆரம்பித்தும் விட்டான்.

ஏழை ராதை மறைந்தாள்; கோகிலா, அவன் இதயச் சோலையின் குயிலானாள்.

அவன் நினைத்தான். கோகிலா நாளைய நட்சத்திரம் ... எதிர்காலத் தாரகை ... கரன்ஸியிலே புரளப் போகும் கதாநாயகி ... அவளைக் குன்றின் மேலிட்ட விளக்காக உயர்த்திய சந்திரன் அவளது காதலன், கணவன் ... எல்லாம்.

இப்படி அடிமனம் சொல்லிய திட்டப்படி சந்திரன் ஆடினான். தனது முழு சக்தியையும் பயன்படுத்தி கோகிலாவிற்கு விளம்பர வெளிச்சம் போட்டான்.

பலன்...... ?

* * *

கடற்கரையிலே அமர்ந்து இருந்த சந்திரனின் மனக் கதவுகள் 'படீ'ரென ஏனோ மூடிக் கொண்டன. உணர்வு பிறந்து சுற்றிலும் பார்த்தால்...? கூட்டத்தையே காணவில்லை. கடற்கரை சூன்யமாகக் காட்சி அளித்தது.

ரேடியம் டயல் கைக் கெடிகாரம் மணி ஒன்பது எனக் காட்டியது ... எழுந்தான் ... மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

கடற்கரை சூன்யமாகக் காட்சி அளித்தது. மீண்டும் பழைய காட்சிகள் நினைவுக்கு வந்தன.

கோகிலா, கோகிலா, என்று கோகிலாப் பைத்தியமாக ஒரு வருடமாகச் சுற்றியதன் பலன்? ஒரு நாள்—

ஒரு மஞ்சள் பத்திரிக்கை அவனையும், அவளையும் இணைத்துத் தாறுமாறாக எழுதி இருந்தது.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சம் நோகும்படியான நாற்றம் பிடித்த பாணி. அது மட்டுமா!

'மிஸ்டர் சந்திரன்! கோகிலா விளம்பரம் செய்யத் தாங்கள் வேறு பத்திரிக்கை நடத்தலாம்! தயவு செய்து வெளியேறுங்கள்!' இப்படி, வேலை காலியாயிற்று.

சந்திரன் கலங்கவில்லை. கோகிலா உள்ளவரை தனக்கு எதுவும் நேராது என்று எண்ணினான்.

அவனது விளம்பரத்தின் விளைவோ, அன்றி வேறு என்னவோ கோகிலாவிற்கு 'மார்க்கெட்' பிடிக்க ஆரம்பித்தது. தோழிப் பெண்ணாக வளைய வந்தவள், திரையிலே ஜாம்பவான்களான கதாநாயகர்களின் தோள்களிலே துவளும் கதாநாயகி ஆகி விட்டாள்.

'தண்மதி' ஒரு சுற்றுப் பெருத்தான் உற்சாகத்தில். ஆனால், கோகிலாவோ, வேலை இழந்து வந்து நின்றது முதல் சந்திரனை ஒரு மாதிரியாகக் கவனிக்க ஆரம்பித்தாள்! புதிய படங்கள் ஒப்பந்தம் ஆக ஆக அவள் அலட்சியம் கூடியது.

சந்திரன் சிந்திக்க ஆரம்பித்தான். தன்னைக் கோகிலா பயன்படுத்திய பிறகு உதறியதைக் குறித்து வருந்தினான்.

அந்த வெறுப்பிலே தான் தனது பேனாவிற்கும் ஓய்வு கொடுத்து விட்டதை எண்ணித் திகைத்தான்.

'இனி என்ன செய்வது!' என்ற சிந்தனை தான் அவனது கால்களை அன்று கடற்கறையை நோக்கி அழைத்து வந்துவிட்டன.

அங்கு வந்தும் புதிருக்கு விடை கிடைக்கவில்லை. புழுங்கியது தான் மிச்சம்.

* * *

சிந்தித்தபடியே அரை மைல் கடந்து கோகிலாவின் வீட்டை அடைந்து விட்டதை உணர்ந்தான் சந்திரன்.

முன் ஹாலைக் கடந்ததும் 'மொஸெயிக்', தரையில் புதிய நாணயங்களைக் கொட்டுவது போல எழுந்த நகை ஒலி அவனைத் தடை செய்தது

"என்ன! கோகிலா...உன் 'தண்மதி' எங்கே இன்னும் காணோம்?"

கேலியும், கிண்டலுமாக வந்தது கேள்வி. கேட்டவன் கோகிலத்தோடு நடித்து வரும் கதாநாயகன் ஸ்ரீதர் என்பது சந்திரனுக்குத் தெரிந்தது தான்.

'அட சட்! நல்ல வேளையில் அந்த தரித்திரத்தை ஏன் நினைக்கிறீர்கள்? எங்கே யாவது...'

கோகிலமா சொல்கிருள்? சந்திரன் உள்ளம் கொதித்தது. 'அடி பசப்புக்காரி! உன் கழுத்தை நெறித்தால் என்ன?' என்று அவன் உள்ளம் பொங்கியது.

மிக்க துன்பத்தோடு அடக்கிக் கொண்டு வெளி நடந்தான் சந்திரன்; அந்த வீட்டு வாயிற்படிகளையும் கடைசி முறையாகத் தாண்டினன்.

* * *

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வானிலே தெள்ளிய கதிர்களை உலாவ விட்டுத் தனது வருகையைக்கட்டியம் கூறிக் கொண்டிருந்தான் ஆதவன்.

கோகிலா வீட்டிலிருந்து வந்த சந்திரன் நேரே புகை வண்டி நிலையத்தை அடைந்து இரயில் வண்டியைப் பிடித்து விட்டான். சொந்த ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

பர்ஸை விரித்துப் பார்த்த சந்திரனை, ராதையின் மலர் முகம் காட்டிய புகைப்படம் புத்துணர்வு கொள்ளச் செய்தது.

மூடு பனி விலகிக் கொண்டிருந்தது. கதிரவன் தன் முழு உருவையும் உலகிற்குக் காட்டியபடி பிரகாசிக்க ஆரம்பித்தான்.

★

அனுமார்

முசு, முசுக்கை தைலம்.

ANUMAR ANJANAM DEPOT T M

குளுமை, கூந்தல் வளர்ச்சி, அழகு தருவது

நித்திரைக் குறைவு, கண் எரிவு, பித்த மயக்கம் போன்ற நித்திய உபத்திரவங்களை நிவாரணப்படுத்துவதில், சிறந்த ஒளஷதத் தைலம். குணத்திற்கு உத்திரவாதம், எங்கும் கிடைக்கும். கேட்லாக் இலவசம்.

தாதுவிருத்திக்கு

அனுமார் சாலாமிஸ்ரி லேகியம்

தாது பலவீனம், நரம்பு தளர்ச்சி, இடுப்பு வலி, திரேக பலவீனம் நீங்கும். அபார வீரிய விருத்தியுண்டாகும். இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தரும். பத்தியமில்லை. முழு விபரம் மருந்துடன் 1 சேர் விலை ரூ. 10-00; ½ சேர் ரூ. 5-50; ¼ சேர் ரூ. 3-00.

M. A. செபஸ்தியன் R.I.M.P.
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
ஆறுமுகநேரி,
திருநெல்வேலி ஜில்லா-S. I.

பார்சலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும், பாதுகாப்பிற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்ச்சியில் பண்பட்ட 2750 (எமது) சிப்பந்திகள் உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச் செல்கிறார்கள். லாரி செல்லும் இடங்களில், இடவசதிக்கு ஏற்றுப்போல், நமது பண்டக சாலைகள் உங்கள் சாமான்களை பாதுகாக்கின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

TVS-SR 677b

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுன்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதரூஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!

- திருச்சி வாசுதேவன் -

" தாயே...பசி காதெ அடக்கி தும்மா... பழசு, பட்டு ஏதாச்சும் போடுங்கம்மா, தாயி !" என்று தெருவிலிருந்து ஓலமிட்ட பிச்சைக்காரனின் குரல், செல்வந்தர் தர்மலிங்கம் பிள்ளையின் வாசற் கதவை ஊடுருவியது.

வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார், தர்மலிங்கம் பிள்ளை. அவர் பார்த்த பார்வையிலேயே அவருடைய உள்ளத்தை ஓரளவு உணர்ந்து கொண்ட அந்தப் பிச்சைக்காரன், அவரிடம் வாய் விட்டுக் கேட்காமல் கண்களாலேயே கெஞ்சினுன்.

" போங்கடா... பொளப்பத்த பசங்களா ! பொளுது விடிஞ்சு பொளுது போனு ஓங்க தொல்லையைப் பொறுக்க முடியலே !" என்று வெறுப்பும் ஏளனமும் தொனிக்க இரைந்தது, அவருடைய குரல்.

" தருமப் பிரபு நீங்கல்லாம் இப்படிச் சொன்னு...எங்களைக் காப்பாத்தறது யாரு சாமீ ?"

" இந்தக் கேள்வியைப் போய் உன்னைப் படைச்சவனைக் கேளு ! பிச்சை எடுக்கிறதிலே குறைச்சல் இல்லாட்டியும் பேச்சைப் பாரு..." இப்படிக் கூறிக்கொண்டே உள்ளே செல்லத் திரும்பினுர் அவர். பிச்சைக்காரன் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டே போய்விட்டான்.

அப்பொழுது தர்மலிங்கம் பிள்ளையின் வீட்டு வாசலில் வாடகைக் கார் ஒன்று வந்து நின்றது. இதைக் கண்டதும் அவருடைய கால்கள் அடிபெயராமல் அப்படியே நின்றன. உள்ளத்தில் ஆச்சரியம் ஊஞ்சலாடியது. காரிலிருந்து இறங்கிய மூன்று பேரையும் மலர்ந்த முகத்துடன் கைகூப்பி வரவேற்ருர்.

உள்ளே அழைத்துச் சென்று அனைவரையும் இருக்கைகளில் அமரச் சொல்லி நலநிலைமைகளை விசாரித்துக் கொண்டிருந்தார்.

அந்த ஊரிலிருக்கும் அநாதைச் சவ அடக்க சங்கத்தின் தலைமைப் பொறுப்பை யேற்றுக் கொண்டிருப்பவர் தர்மலிங்கம் பிள்ளையின் நண்பர் கருணுநிதி. சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கடந்த சில நாட்களாகச் செய்து வருகிருர் அவர். அது சம்பந்தமாகவே இப்பொழுது தர்மலிங்கம் பிள்ளையைச் சந்திக்கத் தம் சகாக்கள் சகிதம் வந்திருக்கிருர். எனவே காரியாம்சமாகப் பேச்சைத் தொடங்க எண்ணி, " அநாதைச் சவ அடக்க சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவை அடுத்த வாரத்தில் நடத்தத் தீர்மானித்திருக்கிருேம் !" என்ருர்.

இதைக் கேட்டதும் தமது அரை குறையான வெறுப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல், " நல்லது; செய்ய வேண்டியதுதானே !" என்ருர் தர்மலிங்கம் பிள்ளை.

அவருடைய குரலில் தொனித்த ஆர்வ பேதத்தைச் சாதுரியமாகத் தெரிந்து கொண்ட கருணுநிதி, " என்ன, இப்படி அசிரத்தையாகச் சொல்கிறீர்களே. விழாவை உங்கள் தலைமையில்தான் நடத்துவதாக முடிவு செய்திருக்கிருேம் !" என்ருர்.

தர்மலிங்கம் பிள்ளைக்குத் தம் தலையில் பனிக்கட்டியை வைத்தது போல் இருந்தது; கருணுநிதியின் பேச்சு. அத்தகைய குளிர்ந்த உணர்ச்சியை அநுபவித்தபடியே சில விநாடிகள் மௌனத்தில் ஆழ்ந்தார்.

"என்ன யோசிக்கிறீர்களே! ஏன் தலைமை வகிக்கும் தகுதி உங்களுக்கு இல்லையா, என்ன?" என்று சங்கத் தலைவர் கேட்டதும், தர்மலிங்கம் பிள்ளையின் முகத்தில் சிறு மகிழ்ச்சிக் குறி தோன்றி மறைந்தது. "இ...ல்...லை... இவ்வளவு பெரிய காரியத்தில் பங்கு கொள்ள நான் என்ன அவ்வளவு பெரிய..." என்று வாக்கியத்தை முடிக்காமல் சிரித்தார் அவர்.



“இப்படிச் சொல்கிறீர்களே, நான் எதிரே புகழ்வதாக எண்ணக் கூடாது. உங்களுடைய கருணையுள்ளத்தைப் பற்றித் தெரியாதவர்கள் இந்த ஊரில் யார் இருக்கிறார்கள்? இதையெல்லாம், வரும்பொழுது நம் கண்ணனிடம்கூடச் சொல்லிக் கொண்டு வந்தேன்!” என்ற கருணாநிதி, தம் பேச்சை நிரூபிக்கும் வகையில் அருகிலிருந்தவரைச் சுட்டிக் காட்டினார்.

அந்த ஆண்டில் அநாதைச் சவ அடக்க சங்கத்தின் புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்ணன், தலைவரின் பேச்சை ஆமோதித்துத் தலையை ஆட்டினார்.

ஒரு நிமிடம் ஒருவரும் பேசவில்லை.

தர்மலிங்கம் பிள்ளை சிந்தித்துப் பார்த்தார். அவரை யறியாமலேயே அவருள்ளத்தில் தோன்றிய ஓர் உணர்ச்சி அவருடைய மறுப்பு எண்ணத்தை மாற்றிவிட்டது.

அவர் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டது பற்றி, வந்திருந்தவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். கருமமே கண்ணான கண்ணன், ஆண்டுவிழாவின் நன்கொடைக்கான விண்ணப்பத்தாள் ஒன்றைத் தர்மலிங்கம் பிள்ளையிடம் மரியாதையோடு கொடுத்தார். அதைப் படிப்பது போல் பாவனை செய்து விட்டுப் புன்முறுவலோடு கருணாநிதியை ஏறிட்டு நோக்கினார் தர்மலிங்கம் பிள்ளை.

சிறிது நேரத்தில், அநாதைச் சவ அடக்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவுக்காக நன்கொடையாய் ரூபாய் இருநூற்று ஒன்றுக்குத் தர்மலிங்கம் பிள்ளை எழுதித் தந்த ‘செக்’கைப் பெற்றுக்கொண்டு கருணாநிதியும் அவருடைய சகாக்களும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர்.

அவர்களோடு வாசல்வரை வந்து வழியனுப்பிவிட்டு மகிழ்ச்சி நிரம்பிய மனத்துடன் உள்ளே சென்று அமர்ந்தார் தர்மலிங்கம் பிள்ளை. ஆண்டு விழாவை விளம்பரப்படுத்தும் சுவரொட்டிகளிலே தமது பெயர் பிரதானமாக விளங்கப் போவதைக் குறித்து ஒருவிதப் பெருமித உணர்ச்சி அவர் இதயத்தில் உருவாகிக் கொண்டிருந்தது. மேலே மெதுவாகச் சுழன்று கொண்டிருந்த மின்விசிறியின் மென்காற்று அவர் மேனியில் பட்டதும் படாததுமாய் விளையாடிய வண்ணமிருந்தது. அவருடைய கண்கள் மென்மையான இறுக்கத்துடன் மூடிக் கொண்டன.

அந்த ஊரின் அநாதைச் சவ அடக்க சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் பங்குகொள்ள வெளியூர்களிலிருந்து பல பிரமுகர்கள் வந்திருந்தனர். அவர்களில் சிலர் சிறந்த பேச்சாளர்கள்; பல ஆண்டுகளாக மேடையேறிப் பேசி மக்களின் மனத்தை வெகுவாகக் கவர்ந்தவர்கள். அத்தகையோர் விழாவில் பேச வந்திருக்கிறார்கள் என்றால் கூட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்?

நன்கு அலங்கரிக்கப்பட்ட மேடையின் இரு மருங்கிலும் பேச்சாளர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருக்கின்றனர். நடுவில் விழாத் தலைவர் தர்மலிங்கம் பிள்ளை கம்பீரமாய் அமர்ந்திருக்கிறார். அவர் நெஞ்சில் வியப்பும், மகிழ்ச்சியும் நீந்துகின்றன. எதிரே கூடியுள்ள பொது மக்களின் மீது தமது பார்வையை ஓட்டுகிறார். விழாவில் படிக்கப் போகும் தலைமையுரையை நண்பர் ஒருவரிடம் சில நாட்களுக்கு முன்னதாகவே எழுதச் சொல்லியிருந்து நேற்றுதான் வாங்கி வந்திருந்தார். விழாவுக்குக் கிளம்பிய அவசரத்தில் அந்தத் தாள்களை ‘வீட்டிலேயே வைத்து விட்டோமோ என்னவோ’ என்ற சந்தேகம் அவருக்கு ஏற்படவே, தம் ஜிப்பாவின் வலப் பையை நெருடிப் பார்க்கிறார். முகத்தில் மகிழ்ச்சி ரேகை இலேசாகப் படர்கிறது. இதோ இன்னும் சிறிது நேரத்தில் தொடங்கப் போகிறது விழா. தமது தலைமையுரையின் வாசிப்பைக் கேட்டுப் பாராட்டிக் கையொலி செய்யக் காத்திருக்கிறது

மக்கள் கூட்டம். அடுத்துத் தமக்குக் கிடைக்கவிருக்கும் மாலை, மரியாதை இன்ன பிற...! இப்படியாக அற்றுப் போகாத அவருடைய நினைவுச் சங்கிலி, ஏழையின் வறுமையைப்போல நீண்டுகொண்டேயிருக்கிறது.

அயர்ந்து உறங்குபவரை அதட்டி எழுப்பியதும் திடுக்கிடுவது போல் தர்மலிங்கம் பிள்ளை 'தம் மனக் கனவைக் கலைப்பது யார்?' என்று எண்ணியபடியே தெருவை நோக்கினார்.

- "சாமீ! சாப்புட்டு நாலு நாளாவுது...கா வயித்துக்கு ஏதாச்சும் கஞ்சி ஊத்துங்க மவராசரே! கண்ணெல்லாம் இருட்டி வருது...!" என்று, போய்க் கொண்டிருக்கும் உயிருடன் போராடியபடியே தர்மலிங்கம் பிள்ளையின் வீட்டு வாசலில் நின்று கெஞ்சிக் கொண்டிருந்தான் ஒரு பிச்சைக்காரன்.

தோல் போர்த்திய எலும்புக் கூடாய்த் தோற்ற மளித்த அந்தப் பிச்சைக்காரனை நோக்கி வெளியே வந்த தர்மலிங்கம் பிள்ளை "ஏன்டா, ஏதாவது வேலை செஞ்சு பொழைச்சா, என்ன? இப்படி முதலில்லாத யாவாரத்தை ஆரம்பிச்சுக்கிட்டு, இருக்குறவங்க உயிரை ஏன் வாங்குறீங்க?" என்று இரைந்தார்.

"வேலை கிடைச்சால் தானே? மாசக் கணக்கா வேலையைத் தேடி அலைஞ்சு ஆவிபோயிடுச்சு சாமி! ஏதோ உங்க தருமமா..." என்று அவன் தனது வேண்டுகோளை நயமாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் போதே, தர்மலிங்கம் பிள்ளையின் குரல் இடைமறித்து, "தருமஞ் செய்யறதுக்கு இது சத்திர முன்னு நினைக்சுக்கிட்டே?" என்று அதட்டியவுடன், "அடுத்த வீட்டைப் போய்ப் பார்!" என்னும் ஆலோசனையையும் ஒலிபரப்பியது.

பிச்சைக்காரன் மெலிந்த குரலில், "ஐயா, இந்த ஏழைமேலே மனமிரக்கம் வையுங்க, ஐயா! உங்களுக்குக் கோடிப் புண்ணிய

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

—பெருநகை—

நாரதர் கைலாசத்திற்கு வந்தார். நந்திகேசுரர் அவரை நோக்கி, "நாரதரே, இப்போது ஸ்வாமி தரிசனத்துக்கு சமயமில்லை. அந்தப்புரத்தில் ஸ்வாமியும், தேவியும் ஏதோ பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் ஒரு ஜாமம் போன பிறகுதான் பார்க்க முடியும். அதுவரை இங்கு உட்கார்ந்திரும். ஏதேனும் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கலாம்" என்றார். அப்படியே நாரதர் வலப்பக்கம் உட்கார்ந்தார். அங்கே பிள்ளையாரும் வந்து சேர்ந்தார். பக்கத்தில் நின்ற பூதமொன்றை நோக்கி நந்திகேசுரர், "முப்பது வண்டி கொழுக்கட்டையும், முந்நூறு குடத்தில் பாயசமும், ஒரு வண்டி நிறைய வெற்றிலை பாக்கும் கொண்டுவா" என்று கட்டளையிட்டார்.

இமைத்த கண் மூடு முன்பாக மேற்படி பூதம் பக்ஷணாதிகளைக் கொண்டு வைத்தது. பிள்ளையார் கொஞ்சம் சிரமபரிகாரம் பண்ணிக் கொண்டார். நாரதரோ ஒரு கொழுக்கட்டை எடுத்துத் தின்று அரைக்கிண்ணம் ஜலத்தைக் குடித்தார். நந்திகேசுரர் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த இரண்டு மூட்டை பருத்திக் கொட்டையையும், இரண்டு கொள்ளு மூட்டைகளையும், அப்படியே இரண்டு மூட்டை உளுந்தையும், இரண்டு மூன்று கட்டுப் புல்களையும் ஒரு திரணம் போலே விழுங்கிவிட்டுக் கொஞ்சம் தீர்த்தம் சாப்பிட்டார்.

—'தேவ விகடம்'

முண்டு...'' என்று கூறிக் கொண்டிருக்கும் போதே தர்மலிங்கம் பிள்ளை உள்ளே சென்று வாசற் கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

ஒரு வாரம் சென்றது. மாலை நான்கு மணி இருக்கும். தர்மலிங்கம் பிள்ளை, அநாதைச் சவ அடக்க சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் தலைமை தாங்குவதற்காகத் தம் வீட்டினின்று புறப்பட்டார்.

தெரு மூலையில் பத்துப் பன்னிரண்டு பேர் நிரம்பிய ஒரு சிறு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அதைப் பூர்த்தறியும் ஆவலுடன் தம் நடையைச் சற்று விரைவு படுத்திக்கொண்டார் தர்மலிங்கம்பிள்ளை. கூட்டத்தோடு கலந்துகொண்டு எட்டிப் பார்த்தார். அங்கே கிடந்த அநாதைப் பிரேதத்தைக் கண்டதும் அவர் உள்ளம் திடுக்கிட்டது. சில விநாடிகள் உணர்ச்சியற்றுப் போய் அந்த இடத்தை விட்டு மெதுவாக நகர்ந்தார். வேலையில்லாக் கொடுமையின் பிடியில் சிக்கிவிட்டவர்களிடம் எவ்வளவோ பிரச்னைகள் எதிர்ப்படுமே, அதே மாதிரி, குழம்பியிருந்த அவர் நெஞ்சில் விவரம் தெரியாத வேதனை நினைவுகள் குமிழியிட்டன. விழா நிகழுமிடத்தை நோக்கி மெதுவாய் நடக்கலானார்.

அநாதைச் சவ அடக்க சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா ஆரம்பமாயிற்று. சங்க நிர்வாகிகள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே பொது மக்கள் கூடியிருந்தார்கள். மேடையில் வீற்றிருந்தவர்களில் நடு நாயகமாய்த் தர்மலிங்கம் பிள்ளை அமர்ந்திருந்தார். ஆயினும், அவர் முகத்தில் கவலையிருள் படர்ந்திருந்தது. எவ்வளவோ முயன்று பார்த்தும் தம் மனக் கண்ணின் பார்வையிலிருந்து அந்த அநாதைப் பிரேதத்தின் கோர உருவை அவரால் பிடுங்கியெறிய முடியவில்லை. நீண்ட நேரம் சிந்தனை வெள்ளத்தில் நீந்திக் கொண்டே இருந்ததால் அவருடைய உள்ளமும் உடலும் ஒருங்கே சோர்ந்து போயின.

இறை வணக்கத்துக்குப் பின் வரவேற்புரை நிகழ்த்த ஒலி வாங்கி (மைக்) முன்பு வந்த சங்கத்தலைவர் கருணநிதி, தர்மலிங்கம் பிள்ளையின் மீது மகிழ்ச்சி நிரம்பிய பார்வையை வீசி விட்டுப் பேசத் தொடங்கினர்.

"பேரன்பு வாய்ந்த பெரியோர்களே, தாய்மார்களே, பேச்சாளர்களே! உங்கள் அனைவருக்கும் எனது மனமுவந்த வணக்கமும் நன்றியும் உரியன. நம் நாட்டில் நாதியற்ற ஏழை மக்களை ஆதரித்து அவர்களுக்கு நல்வாழ்வு வழங்கப் போதுமான பொது நிறுவனங்கள் இல்லாமையால் அவர்கள் வேலையின்மையாலும், பசியாலும், பிணிகளாலும் பரிதவிக்கிறார்கள். கடைசியில் உயிர் வாழ வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் பிச்சையெடுக்கவும் துணிந்து விடுகிறார்கள் பின்னர் அவர்கள் இறந்ததும் அநாதைப் பிரேதங்களாகக் கருதப்படுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

"கடந்த பத்து ஆண்டுகளாக அத்தகைய அநாதைப் பிரேதங்களை நல்லடக்கம் செய்யும் தொண்டினை இந்தச் சங்கம் நிறைவேற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

"சாதாரணமாய்ப் பகுத்தறிவற்ற விலங்கு, பறவை முதலியவைகளும் தத்தம் இனபிமானத்துடன் நடந்து கொள்ளும் பொழுது, சில வகையான மனிதர்கள் மட்டும் ஏழைகள் விஷயத்தில் இரக்கமின்றி நடந்து கொள்வதை நினைத்தால் வருந்தாமலிருக்கமுடியவில்லை. அத்தகைய செல்வர்களுக்குள் விதிவிலக்காக நமது தர்மலிங்கம் பிள்ளை அவர்கள், சங்கத்துக்கு அவ்வப்பொழுது தம்மாலான நல்லுதவிகளைச் செய்து வருகிறார்கள்; அவர்களுடைய சிந்தை எப்பொழுதும் ஏழைகள் விஷயத்தில் இரங்கும்

இயல்புடையது என்று சொல்வது மிகையாகாது. அன்னார் இந்த விழாவுக்குத் தலைமை தாங்குவது மிக மிகப் பொருத்த முடையதாகும். பொது மக்களாகிய உங்கள் சார்பிலும், சங்கத்தின் சார்பிலும் தர்மலிங்கம் பிள்ளையவர்களையும், மற்றும் விழாவில் பங்கு கொள்ள வந்துள்ள அன்பர்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்பதோடு, இந்த விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பிக்குமாறு தர்மலிங்கம் பிள்ளையவர்களை வேண்டுகிறேன்!" என்று கருணாநிதி பேசி முடித்தார். பிறகு சங்கச் செயலாளர் அதை ஆமோதித்தார்.

தலைமை வகிப்பவர்களுக்கே உரிய ஒரு விதக் கம்பீரத்தோடு தர்மலிங்கம் பிள்ளை தம் இருக்கையை விட்டு எழுந்து ஒலி வாங்கியின் முன்பு வந்து ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனால் வார்த்தைகள் எதுவும் தொண்டையிலிருந்து ஏனோ வெளிவர மறுத்து விட்டன! அவரது கால்களைப் போலவே உள்ளமும் மரத்துப் போயிருந்தது.

இலேசாகக் கனைத்துக்கொண்டு, "நண்பர் கருணாநிதி அவர்கள் என் மீது கொண்டிருக்கும் அன்பால் அளவுக்கு மீறி என்னைப் புகழ்ந்து விட்டார்கள். அதற்கு நான் அருகதையுடையவனா என்பது ..." என்று சொல்லிக் கொண்டே வந்த அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. சில விநாடிகள் தாமதித்து, "மன்னிக்கவும்!" என்று கூறி விட்டுப் பின் வாங்கியபடியே இருக்கைக்குச் சென்று அமர்ந்தார். இதைக் கண்டதும் கூட்டத்தில் சிலர் ஏளனமாய்க் கை தட்டினார்கள்.

சங்கத் தலைவருக்கு ஒரே வியப்பாயிருந்தது. தருமலிங்கம் பிள்ளையின் அருகில் வந்து காதோடு காதாக ஏதோ சொன்னார். பதிலுக்குத் தர்மலிங்கம் பிள்ளை, "எனக்கென்னவோ போலிருக்கிறது. நான் உடனே வீட்டுக்குப் போயாக வேண்டும். தயவு செய்து மன்னியுங்கள்" என்று கூறியபடியே எழுந்து விட்டார்.

ஒரு வித அச்சமும், படபடப்பும் உள்ளத்தில் மேலோங்க வேகமாய் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார், தர்மலிங்கம் பிள்ளை. தெரு முனைக்கு வந்ததும் அநாதைப் பிரேதம் கிடக்கும் இடத்தை யணுகினார். அங்கே அநாதைச் சவ அடக்க சங்கத்தின் மயான ரதம் நின்று கொண்டிருந்தது. சங்கத்தின் பணியாட்கள் இருவர் பிரேதத்தை எடுத்து வைக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர்.

அவர்களிடம் சென்ற தர்மலிங்கம் பிள்ளை தம் சட்டைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து, "இந்தப் பிரேதத்தை ரொம்பவும் மரியாதையாய் அடக்கம் செய்ய வேண்டும்!" என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

அவ்விடத்தில் குழுமியிருந்தவர்களில் பலர் தர்மலிங்கம் பிள்ளையின் செயலைப் புகழந்தபடி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்.

அனாதை சவ அடக்க சங்கத்தாரின் விழாவிலிருந்து ஒலி பெருக்கியில் ஒருவன் இறைந்து பாடிக் கொண்டிருந்தான்,

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் - வெறும் சோற்றுக்கு வந்ததோ இப்பஞ்சம்!" என்று.

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந.பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

TEL : PHONE : 85496

CENTRAL AUTOMOBILES

7A, BANK STREET,
MOUNT ROAD,
MADRAS-2.

PERKINS SPARE PARTS STOCKISTS

Ford

DEALERS IN
All Automobile Spares and Accessories for
All Kinds of Cars & Trucks.
Specialists in Perkins Parts.

BRANCH AT

39, High Road, Tirunelvely Jn.

DEALING IN ALL AUTO SPARES AND
ACCESSORIES SPECIALISTS IN JEEP PARTS.

Phone: 15
Gram : PANICO

Post Box : 20
Tirunelveli Jn.

PANI COMPANY

Dealers : MOLASSES, SUGAR & RICE

Sugar Stockists: For M/s. E. I. D. & S. E. Ltd., Nellikuppam
,, D. S. & A. Ltd., Pugalur Sugar Factory
,, T. S. & Co. Ltd., Tiruvalla
AT TIRUNELVELI, TUTICORIN,
TIRUCHIRAPPALLI & TRIVANDRUM

Stockists: For Hyderabad Asbestos Cement Products Ltd for TIRUNELVELI DISTRICT

Branches: Tirunelveli Town, Madras, Tiruchirappalli, Pugalur, Nellikkuppam, Ammayanaickanur, Tuticorin & Trivandrum

Rice Mills: 9, Madura Road, Udayarpatti (Tirunelveli)

சு
வா
மி

ஜூ
வ
சுவாமி ஜூவல்லரி மார்ட்
ல
ரி

மா
ர்
ட்

22/73, மேல ரத வீதி **திருநெல்வேலி டவுன்**

பவுன் நகைகள், கல் நகைகள்,

வெள்ளிப் பாத்திரங்கள் &

கொலுசு தினுசுகள்

உத்திரவாதத்துடன்

எமது S. T. R. முத்திரையுடன்

எப்பொழுதும் கிடைக்கும்.

புரொப்: S. S. பிரமநாயகம் பிள்ளை

கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 24.

சிறிது வெளிச்சம்

சோமு, நாகு, வள்ளி சென்னைக்கு வந்து இரண்டு தினங்களாகி விட்டன. மூன்றாவது நாள் மாலை.

"மிஸ்டர், சோம சுந்தரம்!" என்று குதூகலத்துடன் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே வந்தாள் ஞான அருள்மணி.

"வாருங்கள். வாருங்கள்!" என்று எதிர்கொண்டு அழைத்தான் சோமு.

"ஆமாம். நீங்கள் என்ன, எங்கள் வீட்டுப் பக்கம் வரப்போவதில்லை என்று வைத்துக்கொண்டிருக்கிறீர்களா?" என்று வெள்ளி மணி போன்ற குரலில் கேட்டாள் அருள்மணி.

சோமு சேரை எடுத்துப்போட்டு "உட்காருங்கள் அம்மா. உங்கள் மகன் மீது இவ்வளவு பெரிய அபாண்டத்தைச் சுமத்துவதுநீதியா, தர்மமா, இது நியாயம் தானா?"

"ஓ!" என்று கூறி கல கல வென்று சிரித்தாள் அவள்.

"என்னம்மா, சிரிப்பு பதில் ஆகுமா?" என்றான் சோமு உற்சாகமாக.

அருள்மணி மிக சிரத்தையுடன் "அது கிடக்கட்டும். நீங்கள் ஜோஸப்பிடம் ஏதோ சொல்லியனுப்பினீர்களே, அந்த சமாசாரம் என்னவென்று விசாரித்துக் கொண்டு போகலாம் என்று வந்தேன்" என்றாள் அருள்மணி.

"இதுதான் தாயின் கருணை என்பது! நான் வரவேண்டிய நடைக்குப் பதிலாக நீங்கள் வந்து விட்டீர்கள் பார்த்தீர்களா?"

"இந்த மாதிரி இனிக்க இனிக்கப் பேசும் கலையை எங்கு கற்றீர்கள் மிஸ்டர் சோம சுந்தரம்?"

"சந்தேகமில்லாமல் அங்கிருந்து தான்!" என்று இரு கைகளை அருள்மணிக்காகத் தூக்கிக் கொண்டு சொன்னான் சோமு.

"இருக்கட்டும், அந்தப் பெண் எங்கே?"

"அந்தப்பக்கம் போனாள். இதோ வந்து விடுவாள். அவள் வருமுன் உங்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லி விடுகிறேன்" என்று கூறி சுருக்கமாக வள்ளியின் வரலாற்றைக் கூறினான் சோமு.

அருள்மணியின் பெயருக்கொப்ப அவளுடைய உள்ளமும் அருள் நிரம்பியது. வள்ளியின் பரிதாபகரமான சரித்திரத்தைக் கேட்டதும் கருணை மிகுதியால் அப்பொழுது தான் உள்ளே வந்து கொண்டிருந்த வள்ளியைப் பார்த்து, "வா மகளே வா! நீ எனது மகள், என்னை உனது தாயாக பாவித்துக் கொள் அம்மா" என்றாள் அருள்மணி.

வள்ளி நின்ற இடத்திலேயே கல்லாகச் சமைந்து நின்றாள். பெண்மையின் வாயால் இவ்வளவு அன்பான வார்த்தைகளை என்றும் அறிந்

திராத அருமையைக்கேட்டு, அவள் உள்ளம் பரவசமாகியது!

அவளுடைய தின நிலையைக் கண்டு அருள் மணி எழுந்து சென்று அவளைக் கை பிடித்து அழைத்து வந்து தன் அருகில் அமர்த்திக் கொண்டு, "மிஸ்டர் சோம சுந்தரம், இந்த நிமிஷம் முதல் இந்தப் பெண்ணைப் பற்றி கவலை என்னுடையது. அவளுடைய கற்பு பந்தோபஸ்தாக இருக்க நீங்கள் முயற்சி எடுத்தீர்கள். நான் இந்த வள்ளிக்குக் கல்வியறிவும் கொடுத்து, வேலையும் கொடுத்து, வாழ்க்கையின் உன்னத நிலைக்குக் கொண்டு வரலாம் என்பது என் அவா. அதை ஆண்டவன் நிறைவேற்றி வைப்பார் என்றும் நம்புகிறேன். இப்போது இ தப்பெண் இங்கு தானே இருக்கவேண்டும்?"

"ஆமாம். வேறெங்கே,..."

"நான் அழைத்துச் செல்வதில் ஆட்சேப முண்டா ஏதாவது?"

சட்டென்று அதற்கு விடை தர இயலாமல் தயங்கினன் சோமு.

"நல்லது. இவளை நான் கான்வென்டில் சேர்ப்பதற்கு இரண்டு நாள் அவகாசம் வேண்டும். அது வரையில் ஜோஸப் இங்கு தங்கட்டும். என் பெண்ணை நான் வீட்டுக்கு அழைத்துப்போய் இரண்டு நாள் வைத்திருந்து ஸ்கூலில் ஏற்பாடு செய்து அங்கு கொண்டு போய் வீட்டுவிட்டு உங்களுக்குச் செய்தி அனுப்புகிறேன்" என்றுள் அருள்மணி.

அவள் உள்ளம் போல அவளது பேச்சில் நல்ல தெளிவு இருந்தது. நாகு முன்வந்து, "எங்கிருக்கம்மா உங்கள் வீடு?" என்று கேட்டான்.

"அடுத்த தெரு தான்! ஒரு பர்லாங். எங்கள் வீட்டில் நானும், என் மகனும் தான் என்பது இவருக்குத் தெரியும்" என்று சோமுவைச் சுட்டிக் காட்டினுள் அருள் மணி.

"சரி அம்மா, பூரண நம்பிக்கையோடு உங்களுடன் அனுப்பி வைக்கிறேன்" என்ருன் சோமு.

வள்ளிக்கும் அருள்மணியின் தோற்றமும், பேச்சும் மிகவும் பிடித்துப் போய் அவளுடன் செல்ல ஆவலாக இருப்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது!

நாகுவைக் கொண்டு சிற்றுண்டியும் காபியும் தருவித்து உபசரித்து விட்டு, "என்னம்மா வள்ளி, அம்மாவோட இப்பவேபோகிருயா? இரண்டு நாள்..."

"இப்பவே போறேனுங்க. இங்கே இருந்தால் பொழுதே போவாது' என்று பதில் சொன்னுள் வள்ளி.

மௌனமாக தலையை ஆட்டி சிரித்தாள் அருள்மணி.

"அப்போ நான் வரட்டுமா?" என்று எழுந்ததும், "இருங்கள், வண்டி வரட்டும்" என்ருன் சோமு.

"அடுத்த தெருவுக்குப் போக வண்டி எதற்கு? அகாவசியமான செலவு!" என்றுள் அருள் மணி.

"இருக்கட்டும். அதோ வந்து விட்டது வண்டி" என்ருன் சோமு.

அருள்மணியும், வள்ளியும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். வாசல் வரையில் சென்று வழியனுப்பி விட்டு வந்தார்கள் சோமுவும், நாகுவும். இருவரும் சேர்ந்தார்ப்போல தங்கள் நெஞ்சிலிருந்த கவலை நீங்கி விட்ட உணர்ச்சியில் பெரு மூச்சு விட்டார்கள்!

"மனசு நிறைந்த விசனத்தோடு வந்தவள், மனப்பூர்வமான திருப்தியோடு போயிருக்கிருள். ஈசுவரகிருபையால் இனிமேல் அவளுக்கு ஒரு தொல்லையும் நேராது என்றுதான் நினைக்கிறேன்".

"அந்தம்மாளுக்கென்ன அம்பது வயசிருக்குமா சோமு?"

"மேலேயே இருக்கும். ஒரே பிள்ளை. எங்கள் ஆபீசில் தான் வேலை. நூத்தெண்பது ரூபாய் சம்பளம். இந்தம்மாளுக்குக் கான்வென்டில் இருநூறோ என்னவோ சம்பளம். தானம், தர்மம், பரோபகாரம் இதெல்லாம் ரொம்ப உண்டு தாயாருக்கும், பிள்ளைக்கும்"

"பிள்ளையை என்னமோ, இங்கே அனுப்பிடறேன்னுங்களே"

"நான் கொஞ்சம் தயங்கினதும் சட்டுனு கண்டு கொண்டு, இரண்டு நாளும் உன் ரூமுலே பிள்ளையிருக்கட்டும் என்று பளிச்சுனு பதில் சொல்லி விட்டாள் பார்த்தியா?"

"பாவம் உனக்கு பயம்!"

"பின்னென்ன? பயப்படும் படியா நேர்ந்ததாலேபயப்பட்டேன். அந்த பயத்தை நிவர்த்தி பண்ணி விட்டாள் அந்தம்மாள்! இனிமேல் அவள் கவலை நமக்கில்லை"

"என் கவலை இருக்கு மீதியா!"

"உன்னைப் பற்றி கவலை யென்ன? சாப்பாடு கொண்டு வந்து, ரூம் சுத்தம் பண்ணி, ஜலம் கொண்டு வந்து வைக்க,ஏவின வேலை செய்ய, ஐந்து ரூபாய் சம்பளத்தில் ஆள் வைச்சிருந்தேன். இன்னும் ஐந்து ரூபாய் கூடப் போட்டு உன் தாயாருக்கு அனுப்பி விடு. தீர்ந்தது கவலை"

"சாப்பிட்டுட்டு பொழுதுக்கும் கையைக் கட்டிக் கிட்டு உக்காரச் சொல்றையா, தூங்கச் சொல்றையா?"

"எது வேணுப் பண்ணு!"

"என்னாலே முடியாதப்பா.எதுனு வேலை பாத்துவை"

"என் வேலை யார் செய்யறதாம்?"

"நான் தான்"

"சரி, பாக்கலாம். நீ போயி, லாண்டிரியிலே துணி வாங்கிட்டு வா"

"வாங்கிட்டுவந்து வச்சாச்சு. அது கிடக்குது. ஐயரு கடிதாசுலே வள்ளியைப் பற்றி ஒண்ணுமில்லியோ?"

"இந்தக் கடிதாசுலே காணோம். அடுத்து வர கடிதாசுலே வரும்!" என்றான் சோமு.

மறுதினம் போக மூன்றும் நாள் காலையில் சோமு, அருள்மணியின் வீட்டுக்குச் சென்ற சமயம் வள்ளியை முதல் நாள் மாலையில் கான்வென்டில் வேலைக்குச் சேர்த்து விட்டதாகவும், சாப்பாடு போட்டு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளமென்றும், இனி காலையிலும், மாலையிலும் அவளுக்கு தான் கல்வி கற்பிக்கப் போவதாயும் கூறினாள் அருள் மணி சந்தோஷத்தோடு.

சோமுவுக்கு 'அப்பாடா' என்று இருந்தது! பன்முறை அருள் மணிக்கு நன்றி கூறினான். எப்போதாவது பார்க்க வேண்டும் என்று தோன்றினால் முன்னதாகத் தெரிவித்து விட்டு, அனுமதி பெற்று பார்க்கலாம் என்றும் சொன்னாள்.

மீண்டும் அந்தம்மாளுக்கு வந்தனம் கூறி விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினான் சோமு.

அத்தியாயம் 25.

கடிதம் வந்தது

"ஸார், சோம சுந்தரம், தந்தி" என்று கூப்பிட்டான் தந்திப்பியூன்.

தந்தியை வாங்கிப் பார்த்தான்.

அவனுடைய தகப்பனார் தான் கொடுத்திருந்தார். கடைக்குப் போயிருந்த நாகு திரும்பி வந்ததும், "அப்பா ராத்திரி வண்டிக்கு வருகிறாராம் நாகு" என்று சொன்னான் சோமு.

"கடிதாசி வந்திருக்குதா?"

"தந்தி வந்தது இப்போ! துரைக்கித் தோழன்னு ஏதாவது..."

"சே. அந்த மாதிரி சந்தேகமே உங்கிட்டக் கிடையாது அவருக்கு.

என்ன சங்கதின்னு நேரிலே வந்து தெரிஞ்சுக்கலாம்னு இருக்கும்" என்ருன் நாகு.

"அவராக்கூடப் புறப்பட்டிருக்க மாட்டார். நம்ப ரெண்டு பேரோட அம்மாவும் சேர்ந்து யோசனை பண்ணி கிளப்பி விட்டிருக்கணும்!" என்று ஆருடம் சொன்னுன் சோமு.

"நல்லா வரட்டும். என்னதான் நம்ப விவரமா கடிதாசு எழுதிஞலும்,நேரிலே பேசறமாதிரி ஆகுமா? சரியான யோசனைதான் இது"

"சரி. நான் போய் அருள் மணி அம்மாளைப் பாத்துட்டுவறேன் அரை மணிக்குள்ளே. வந்து ஸ்டேஷனுக்குப் போகலாம்" என்று கூறி எழுந்து புறப்பட்டான் சோமு.

அன்றிரவு ரயிலடிக்குச் சென்று தகப்பனுரை அழைத்துக் கொண்டு வந்தான் சோமு. வழியிலேயே பாதி சங்கதியும், வீட்டுக்கு வந்து பாதி சங்கதியுமாகச் சொல்லி முடித்தான்.

விஷயம் பூராவும் அறிந்து கொண்டதும், தமது குமாரனுடைய பண்பட்ட உள்ளமும், சமயோசித புத்தியும் கண்டு அவர் அகமகிழ்ந்து போனுர். வள்ளியை நினைத்து அவள் மீது பரிவும், பச்சாதாபமும் கொண்டார். கடைசியாக, "எந்த சமயத்திலே எதைச் செய்யணுமோ அதைச் செய்து படு முரடனை இந்த நாகுவைக் கூட படியவச்சுட்டே சோமு! எனக்கு ரொம்ப சந்தோஷம். இந்த ஒரு விஷயத்துக்காக மட்டும் நான் புறப்பட்டு வரல்லே. மைலாப்பூர் பெண் ஜாதகம் நல்ல பொருத்தம். நல்ல அதிருஷ்ட ஜாதகமாகவும் இருக்கு.

பாரதி இலக்கியத்தில் சுவைகள்

-வீரம்-

"பார்த்தனெழுந்துரை செய்வான்:— 'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.

தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு — எங்கள்
சிரிய நண்பன் கண்ணன் கழலாணை;

கார்த்தடங் கண்ணி எந்தேவி — அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லிலும் ஆணை;

போர்த் தொழில் விந்தைகள் காண்பாய், — ஹே!
பூதலமே! அந்தப் போதினில்' என்ருன்.

தேவி திரௌபதி சொல்வாள்: — 'ஓம்,
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;

பாவி துச்சாதனன் செந்நீர், — அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்,

மேவி இரண்டுங் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே

சீவிக் குழல்முடிப் பேன் யான்; — இது
செய்யு முன்னே முடியே' னென் றுரைத்தாள்"

—"பாஞ்சாலி சபதம்"

மேற் கொண்டு ஆக வேண்டியதை யோசிச்சு, பெண்ணையும் பார்த்துட்டுப் போகணும்னு நான் வந்திருக்கிறேன்'' என்று கூறி நிறுத்தினார் ஐயர்.

சோமு ஒன்றும் பதில் சொல்லாமலிருக்கவே, "என்ன, ஒண்ணுமே பேசாமல் இருந்தால்...''

"இப்போ என்ன அவசரம் அப்பா இதுக்கு?''

"என்ன அவசரமா? இருபத்து மூணு வயசு உனக்கு இப்போ. கல்யாணமும் இப்ப உடனடியாப் பண்ணப் போறதில்லே. சித்திரை வைகாசியிலேதான்; இன்னும் ஆறு, ஏழுமாச மிருக்கு பங்குனிக்கு. உனக்கு இருபத்தி மூணு நிறைஞ்சுடறது. இதுவே ரொம்ப தாமசம்னு சொல்றா உங்கம்மா?''

"அவளுக்கென்ன சொல்லாமல்? மாட்டுப் பெண் கொண்டு வரும் சீரை ஊராருக்கெல்லாம் காண்பித்துக் காண்பித்துப் பெருமைப் படலாமே என்று பார்க்கிறுளாக்கும்!''

"இருக்கும். நீ என்ன சொல்றே இப்போ?''

"உங்களுக்குள்ளே எல்லா தீர்மானமும் பண்ணிண்டு வந்திருக்கிற போது, நான் என்ன சொல்ல இருக்கு?''

"அப்போ சம்மதம் என்கிறது தெரியறது. பெண் பார்க்க எப்போ போகலாம்?''

"நீங்கள் பார்த்துண்டு வாங்க! உங்களுக்குத் திருப்தி இருந்தால் சரிதான்!''

"பெண எஸ். எஸ். எல். சி. பாஸ் பண்ணியிருக்காம். ஹிந்தி விசாரத் பாஸ் பண்ணி யிருக்காம். மியூஸிக் நன்னு வருமாம். இதோ போட்டோ கூட அனுப்பிச்சிருக்கா, பாரு'' என்று சொல்லி கைப் பையிலிருந்து அந்தப் புகைப்படத்தை எடுத்தார். இது வரையில் பேசாமலிருந்த நாகு முன் வந்து வெகு ஆவலுடன், "இங்கே கொடுங்க சாமி! நான பாக்கணும். சோமு பொண்டாட்டியை'' என்று வாங்கினான், புகைப் படத்தை.

ஐயர் 'பகபக' வென்று சிரித்து. "பாருடா அப்பா, நீ தான் வாஸ்தவமா சந்தோஷப்படறவன். நீதான் முன்னுடி பார்க்கணும்'' என்றார் ஐயர். நாகுவின் ஆந்தரீகமான விசுவாசத்தைக் கண்டு அவர் கண்கள் கலங்கின.

படத்தைப் பார்த்த நாகு, "வீணையும், கையுமா உங்காந்திருக்காங்க அம்மா! பலே, நம்ம சோமுவுக்கு ஏத்த பொண்ணு!'' என்று சந்தோஷப் பட்டுக் கொண்டு சோமுவின் கையில் கொடுத்தான்.

வாங்கிப் பார்த்தான் சோமு. மின்னலைப்போல ஒரு விநாடி அவனுடைய முகம் பிரகாசித்து அடங்கியது.

"வக்கில் ஸதா சிவன் பெண்ணு'' என்றான் சோமு.

"ஆமாம். உனக்கு முன்னேயே தெரியுமா அவளை?''

"பார்த்திருக்கேன். ஆனால் பரிச்சயம் கிடையாது'' என்றான்.

"வந்த காரியம் இரண்டும் சந்தோஷகரமா முடிஞ்சிருக்கு! பிழைச்சுக் கிடந்தால், நம்ப நாகு கல்யாணத்தையும் அதோட அதா முடிச்சுடணும்டா'' என்றார் ஐயர்.

"கல்யாணம் ஆகிறது சரி. துரை எப்படி இருக்கான்?''

ஐயர் லேசாகச் சிரித்து, "எப்படி இருப்பான்? பத்தரை மாத்துத் தங்கமா இருக்கான் இப்போ! அவர் இருந்த வரையில் அவர் பாவத்தைக் கொட்டிக் கொண்டுவிட்டு, அவர் மண்டை மடிஞ்சதும், ஒழுங்கா இருக்கான்; பேசுறன். மனுஷன் அடியோட மாறிப்போயிட்டான்-போயேன்! தகப்பன் போயாச்சு, சொத்தும் கடன்லே இருக்கு. கவலை வந்து முண்டிப் போச்சு அவனுக்கு! எதை எப்படிப் பண்ணனும்ங்கறது நீங்கள் பார்த்துத் தான் செய்யணும் என்கிறுன்!''

"இரண்டு கிழப்பிராணன் துடிதுடித்து உசிரைக் கொடுத்தப்பறமா

அவரு நல்ல வழியிலே திரும்பணும்னு இருந்த: தாக்கும்'' என்று நாகு கூறியதும்,

"ஆமாம் நாகு! இரண்டு பேரும் சாதி வேத்துமையே தவிர, எசமானுக்காக உயிரையே கொடுத்துடுவான் கந்தப்பன். கந்தப்பன் முகம் வாடினுல் எசமானன் பொறுக்க மாட்டாரு! இருக்கற மட்டும் உசிரா இருந்துட்டு சாவும் இரண்டு பேருக்கும் ஒரு நாளிலே வந்துட்டுது பாரேன்!'' என்று அதிசயித்தார் ஐயர்.

மறு நாள் பிற்பகலில், ஐயர் மைலாப்பூர் போய் பெண்ணைப் பார்த்த பொழுது, வரனும் பெண் வீட்டாருக்கு நன்கு தெரிந்திருந்தது. இருதரப்பினருக்கும் திருப்திகரமான வகையில் பேசி முடித்து விரைவில் முகூர்த்தம் வைப்பதாக நிச்சயம் செய்து கொண்டார்கள்.

அதற்கு மறு நாள் வள்ளியைப் பார்க்க அனுமதி கிடைத்ததும் எல்லாருமாகப் போய் பார்த்தார்கள். பாதுகாப்பான இடத்தில் கொண்டு வந்து வைத்து ஒரு பெண்ணின் கற்பைக் காத்த தம் புத்திரனுடைய செயலும், யோசனையும் கண்டு உள்ளம் பூரிக்க "சோமு, நல்ல காரியம் செய்திருக்கே. எனக்கு ரொம்ப ரொம்ப திருப்தி. இப்பவேனல், இவா ரெண்டு பேரையும் கூட்டிண்டு போய்...''

"கல்யாணத்தையும் பண்ணி நம் மகத்தோடு வச்சுண்டுடலாம்னு பார்த்தேளோ!'' என்று குறுக்கிட்டான் சோமு.

"ஆமாம்''

செய்துடலாம். ஆனல் வள்ளியைக் குறைஞ்சது இரண்டு வருஷம் கழிச்சு தான் வெளியிலே அனுப்புவா அவா!

"அட ராமா, அப்படியா அது? சரி;இரண்டு வருஷம் நிமிஷமா ஓடிப் போயிடும் பாரு'' என்று சமாதான கட்டத்திற்கு வந்தார் ஐயர்.

நாகு மாறிமாறி சோமுவின் முகத்தையும் ஐயருடைய முகத்தையும் பார்த்துக்கொண்டே நடந்து வந்தான். சம்பவங்கள் எதுவுமே, நாம் எதிர்பார்த்து வருவதில்லை போலும் என்று பிரமித்தது அவன் நினைவு.

ஐயர் சந்தோஷமாக மகனுடன் நாலைந்து நாட்கள் இருந்து விட்டு, சென்னையிலிருந்து வேண்டிய சாமான்கள் அனைத்தையும்வாங்கிக் கொண்டு ஊருக்குப் பறப்பட்டார். புறப்படும் சமயம், "அப்பா, ஒண்ணு நீங்கள் ஞாபகத்திலே வச்சுக்கணும்'' என்ருன்.

"என்னது?'' என்று திகைத்தார் ஐயர்.

"வள்ளியை ஸ்கூல்லே சேர்த்திருக்கிறதும், நாகு வேலையில் இருக்கிறதாக மட்டும் பூங்காவனத்திடம் சொல்லுங்கோ''

"வள்ளியை நாகுவுக்குக் கலியாணம் பண்றதைச சொல்லப் படாது. அவ்வளவு தானே?''

"சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வரும் வரையில் சொல்லாமலிருப்பது எவ்வளவுக்கோ நல்லது அப்பா'' என்ருன் சோமு.

"ஆமாடா அப்பா. வாயைத் திறக்கவில்லை! பூங்காவனத்துக்கு வள்ளியை மருமகளாக்கிக் கொள்ள இஷ்ட மில்லையோ?'' என்று கேட்டார்.

"இருந்தால் ஏன் வீட்டை விட்டு கிளப்புகிருள்?'' என்று வருத்தத்துடன் சொன்னுன் சோமு.

"இருக்கட்டும்! வள்ளியை அவள் மகனுக்கே கட்டிவச்சு,பூங்காவனத்தை அவள் கிளப்பி விடருப் பலே பண்ணிட்டால்?''

"நாம் சொல்லிக் கொடுத்தாக் கூட அது ஒரு நாளும் அப்படிச் செய்யாது!'' என்று நாகு மனதுக்குள் கூறிக் கொண்டான்.

"நம்முடைய எண்ணத்திலே ஒண்ணுமே யில்லையே அப்பா?'' என்ருன் சோமு.

"ஏதேது? தகப்பன் சாமியா ஆயிட்டையே சோமு நீ?'' என்று

கூறி மகனைப் புகழ்ந்து கொண்டு புறப்பட்டார் ஐயர்.

நாட்கள் ஓடின. தை பிறந்து, வைகாசியும் வந்தது. சகல வைபவத்துடன் சோமுவுக்குச் சென்னையில் விவாகம் நடந்தது! மாப்பிள்ளைத் தோழனாக வந்தான் துரை! ஓடி ஆடி அனைவருக்கும் சந்தன தாம்பூலம் கொடுத்தான். பழைய துரையா இவன் என்று பிரமித்துப் போனான் நாகு.

அருள்மணியுடன் வள்ளியும் வந்திருந்தாள் விவாகத்துக்கு! துரையைக் கண்டதும், அப்படியே வெலவெலத்து நின்று விழித்தாள். துரையின் அடக்கத்தையும், நடத்தையையும் கண்டு வியப்பினால் அவள் உள்ளமே சிதறி விடும் போல இருந்தது!

தனிமையில் நாகுவைச் சந்தித்து மிகவும் தணிந்த குரலில், "வள்ளியை நிமிர்ந்து பார்த்து பேசக் கூட எனக்கு முகமில்லை. அவளை இந்த மட்டில் பாதுகாத்த சோமுவை..."

"ஏதோ காலத்தின் கோளாறு நடந்தது நடந்துபோச்சு. அதையெல்லாம் நினைச்சுப் பாக்காதிங்க சாமி! அவளுக்கும் போதாத காலம். உங்களுக்கும் போதாத காலம்..."

என்றோ செய்த தீவினையை நினைத்துக் கண்ணீர்மல்கின அவன் கண்களில்.

"பாவம், அவளை அனாதையாக்கி விட்ட பாவம் என்னை..."

"அவ ஒண்ணும் அநாதியில்லே.

நாம் எல்லாம் இருக்கறோம். நீங்க இந்த மட்டில் பொழைச்சி மனிதனை நட மாடறீங்களே அது போதும்'' என்றான் நாகு.

துரைக்கு அந்தச் சொல் இந்தப் பக்கம் குத்தி, அந்தப் பக்கம் வாங்கினது போல இருந்தது!

விவாகம் முடிந்ததும் சோமுவும் இருக்கும் தருணம் பார்த்து நாகுவை அழைத்து, "நீ இப்ப எங்களோட புறப்படணும் நாகு. உன் தங்கை பெரியவளானப்பறம் அவளை வெளியே அனுப்பறத்துக்கு இல்லே, உங்கம்மாவாலேயும் உழைக்க முடியல்லே. கஷ்டப்படறா. நான் தான் ஏன்னு கேட்டுண்டு இருக்கேன். பண்ணையோ, தாயில்லாக் குழந்தை மாதிரி கவனிப்பாரில்லாதே கிடக்கு. சோமுவைக் கலந்து யோசிச்சுண்டு எது தேவலையோ செய்'' என்றாள் பாலம்மாள்.

"எதை செய்யச் சொன்னாலும் அதைச் செய்யறேன் சோமு'' என்றான் நாகு.

"செய்யறியா?''

"செய்யறேன்னு ஒரு தடவை சொன்னது போதாதா?''

"ஏர் பிடிச்சு வயல்லே பாடுபட்ட உனக்கு உட்கார்ந்து கிடக்கவும் முடியல்லே, நீ பாக்கக் கூடியதா இங்கே ஒரு வேலையும் அகப்படலே உனக்கு. உன் தாயாரும் வயசான காலத்லே மனசு கஷ்டப்பட்டா அது நமக்கு நல்லதில்லே. அதனாலே நீ வந்து சேரு. அடுத்த வருஷம் நானே வள்ளியைக் கூட்டிண்டி வந்து ஜமாய்ச்சுடுவோம், உன் கலியாணத்தை'' என்று சொல்லி முடித்தான் சோமு.

மறுநாள் எல்லோருமாக மருதூருக்குக் கிளம்பவிருந்தார்கள். மாட்டுப் பெண் ராஜலக்ஷ்மியைப் பார்த்து அடங்காத பெருமை. 'எங்கள் சோமுவுக்கு ஏத்த பெண்' என்று சந்தோஷமாக எல்லாரிடமும் சொல்லிக் கொண்டாள் பாலம்மாள்.

நெல்லையில்

மருந்து வாங்குவதற்குச்
சிறந்த இடம்:

ராஜாமணி
மெடிகல் ஹால்
மேல மாட வீதி,
நெல்லை டவுன்.

அச்சு வேலைகளுக்குச்
சிறந்த இடம்

குமரன் பிரஸ்
ஹைரோடு,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கல்யாணக் கும்பல் அப்படியே மருதூர் கிரஹப் பிரவேசத்துக்குப் புறப்பட்டது.

மருதூரில் கிரஹப்பிரவேசம் கோலகலமாக நடந்தது. பத்து நாட்கள் அங்கிருந்து விட்டு சோமு வேலையை ஒப்புக் கொள்ள புறப்பட்டான். ராஜலக்ஷ்மி 'மறுவீடாக' சென்னைக்குவந்தாள்,சோமுவுடன்.

மேலும் நாட்கள் ஓடின. சோமுவும், ராஜலக்ஷ்மியும் கருத்தொருமித்த தம்பதிகளாக இல்லறம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் மாலையில் சினிமாவுக்கு போவதற்காக இருவரும் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது கையில் 'இன்ஷ்யூர் கவர்' ஒன்றை எடுத்துக் கொண்டு வள்ளி அவசரமாக உள்ளே நுழைந்தாள்.



எதிர்பாரா சம்பவமாக வள்ளி வந்ததைக் கண்டு திடுக்கிட்டான் சோமு.

அவளை 'வா' என்று கூட கூப்பிடத் தோன்றவில்லை அவனுக்கு.

"வா, வள்ளி உக்காரு" என்ருள் ராஜலக்ஷ்மி.

கையிலிருந்த கவரை சோமுவிடம் கொடுக்கச் சொல்லி ராஜலக்ஷ்மியிடம் கொடுத்தாள் வள்ளி.

கவரைத் திருப்பிப் பார்த்தான். தபால் முத்திரை சிங்கப்பூர் ! விலாசம் பார்த்ததும் அவன் முகம் மாறியது. ஆறுமுகம் அல்லவா கடிதம் எழுதி இருக்கிருன் ? பர பர வென்று உள்ளிருந்த தாள்களை இழுத்தான் !

ஆறுமுகம் கைப்பட ஒரு கடிதமும் ஒன்றரை லட்ச ரூபாய்க்கு ஒரு 'டிராப்டு'ம் இருக்கக் கண்டான். ஆச்சரியத்தால் அவன் உடல் ஆடியது ! கடிதத்தைப் பார்த்தான். ஆறுமுகம் விவரமாக எழுதி இருந்தான்.

இரவோடிரவாக ஓடிவந்து கப்பலேறி சிங்கப்பூர் வந்த விவரம் முழுவதும் இருந்தது. "என் செல்வ மகளே! நல்லவனுக்கும், யோக்கியனுக்கும் சமூகத்திலே மதிப்புக்கிடையாது. உன் மானத்தைக் கெடுக்க நினைத்த பாவியை மண்டை உடைத்து என் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டு இரவோடிரவாக ஓடி நாகப்பட்டணம் வந்தேன். அங்கே தான் நம்ப வூரு அமானுல்லா சாகிபு துறைமுகத்திலே வேலையாக இருக்காரு. அவரு மூலமா ஒரு முகமதியரோட சிங்கப்பூரு வந்தேன். வந்ததும் அவருட பெண்சாதி காலமா விட்டாள். அவருக்கு வாழ்வு வெறுப்பு வந்துடுச்சு. அவரோ சொத்து மொத்தமா பதினே ழு லட்ச ரூபா. அதைக் கொண்டு சிங்கப்பூர்லே இ திய ஜவுளி, சாமான்கள் கடை வைக்கணும்னு வந்தார். பெண்சாதி இறந்ததும் மனசு உடைஞ்சிட்டாரு. பதினைஞ்சு லட்சத்தை நாகூர்மீரான் கோயிலுக்கு எழுதிக் கொடுத்துட்டு என்கிட்ட இரண்டு லட்ச ரூபாய் கொடுத்தாரு கடை எதுவாவது வச்சு, பொளைச்சுக்கன்னு !

"வள்ளியம்மா! நான் ஒரு கொலைகாரன். எனக்கு ஒண்ணுமே புடிக்கலை. என் பாவத்துக்குப் பரிகாரமா இங்கே அம்பதாயிர ரூபாயை தான தருமம் பண்ணேன். நீ என்ன கதியிலே இருக்கியோ. அண்ணுச்சி என்ன ஆனுரோ எனக்குத் தெரியாது.உன்னைத் தூக்கி வளத்தேன். என் அருமைக் கண்ணுன நீ இந்த சொத்தை வச்சுக் கிட்டு நாகலிங்கத்தைக் கல்யாணம் பண்ணிக் கிட்டு நல்லா இருக்கணும்னு கடவுளை வேண்டிக்கிட்டு இதை அனுப்பறேன். வாங்கிக்கோ

வள்ளியம்மா. நாகு கிட்ட எல்லாம் சொல்லி இருக்கேன். உனக்கு ஏத்தபுருஷன் அவன். நான் அப்பவே அவன் கிட்டத் தான் உன்னை ஒப்பிச்சு வாக்குறுதியும் வாங்கினேன்.

"கண்ணு, பாவியான இந்த சித்தப்பனை எண்ணி அழுவாதே. மறக்காம நினைவுலே வச்சுக்க. இது கடவுளாப் பாத்து உனக்குக் கொடுத்த திரவியம்! எனக்கு நீ கடிதாசு எழுதவோ, தேடவோ செய்யாதே. இதைத் தபாலுலே சேத்துட்டா என் வேலை தீந்துது. கால்போன போக்கிலே போவேன். எங்கே போவேனோ தெரியாது. பரதேசி எங்கே இருந்தாலும் அது அவன் எடம்தானே? நாகு, வள்ளியம்மா, கடவுளு காப்பாத்தட்டும் உங்களை.

இப்படிக்கு
உன் சித்தப்பன்
ஆறுமுகம்.

கடிதத்தைப் படித்து முடித்த சோமுவின் பிரமை தெளிய ஐந்து நிமிஷம் ஆயிற்று. கையிலிருந்த தாள்களை ராஜலக்ஷ்மியிடம் கொடுத்தான். பேசக் கூட வராமல் தடுமாறிய வண்ணம், "வள்ளி, கடிதாசைப் படிச்சையா?" என்று கேட்டான் சோமு.

"ஆமாங்க"

"பெரிய பணக்காரியாயிட்டே!"

"எனக்கென்னத்துக்குங்க பணம்?" என்று கண் கலங்கினாள் வள்ளி.

"என்ன பண்றது வள்ளி. யோசனையில்லாம வேலை செய்துட்டான் ஆறுமுகம். முன்னாடி ஒரு கடிதாசு எழுதி சங்கதி விசாரிச்சிருந்தா எவ்வளவு நன்னா இருக்கும்? இப்ப எல்லாரோடவும் சேர்ந்து சௌக்யமா இருக்கலாமே!"

"ஒரு நடை வந்து என்னைப் பாத்துட்டுப் போகப்படாதா?"

"அவன் மனசுலே வேறே நினைவு இருந்திருக்கே! துரை செத்துப் போயிட்டான். கொலைகாரனைப் பிடிக்க போலீசு தேடிக் கொண்டிருக்கு. இங்கே வந்தா ஆப்பிட்டுக்கணும், ஆப்பிட்டாத் தூக்கு மரம்! இப்படி நினைச்சு வேலை செய்துட்டான் படுபாவி! சேச்சே, என்னவெல்லாம் ஆயிட்டுது பார் இந்த துரையின் போக்கிரித்தனத்தாலே! உம், சரி. இனிமேல் ஆக வேண்டியதைப் பார்க்கணுமே. இது இங்கியே இருக்கட்டும். நீ போ ஸ்கூலுக்கு. நான் காலம்பர வந்து ஏற்பாடு பண்ணி உன்னை ஊருக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன்."

"ஊருக்கா?"

"ஊருக்குத்தான்"

"ஊரிலே என்ன வேலை எனக்கு?"

"நிறைய இருக்கு! நாகு ஊருக்குப் போகும்போது வந்து உன்னைப் பார்க்க நேரமே இருக்கல்லே"

"அதனாலே என்ன இப்போ?"

"அதுதான் அவன்மேலே உனக்குக் கோவமாக்கும்னு எங்களுக்கு" என்றாள் ராஜலக்ஷ்மி, சோமுவுக்கு பதிலாக.

"வள்ளியை இப்போ பரிகாசம் பண்ணாதே. அதுக்கு சமயம் வரட்டும்" என்று கூறிவிட்டு, "ஏன் வள்ளி, உன் மனசுலே என்ன இருக்கோ அதைத் தாராளமாச் சொல்லு. நாகுவைக் கலியாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டமில்லையா?" என்று ஆதரவோடு கேட்டான் சோமு.

வள்ளியின் தலை கவிழ்ந்தது. பல பலவென்று நீரைப் பெருக்கிக் கொண்டு நின்றாள் வள்ளி.

"ஏன் அழறே, நாகுவைப் பண்ணிக் கொள்ள இஷ்டமில்லேன்னா அதைச் சொல்லேன் வாய் திறந்து. கல்யாண விஷயத்திலே உன் இஷ்டம்தானே முக்கியம்?"

"அவரு என்னை... பண்ணிக்கு வாரா? ஊர் கூடி...?"

அதற்குமேல் பேச முடியாமல் திணறினாள் வள்ளி.

" அட பைத்தியமே, இதுக்கா இப்படி அழுகிறே? அவன் உன்னைக் கண்டு மிரளுகிருன், நீ அவனைக் கண்டு மிரளு. அழகுதான்!''

" அவரு இஷ்டப்பட்டாலும் அவங்கம்மா இஷ்டப்படமாட்டாங்க!'' என்ருள் வள்ளி தலை நிமிராமல்.

" அப்போ நீ ஏழை. இஷ்டப் படலே. இப்போ நீ லட்சாதிகாரியானப்பறம் ஜாம் ஜாம்னு சம்மதிக்கிறதோட இல்லே, உன்னை தலையிலே வச்சுண்டு தாங்குவாள் பார்'' என்ருன் சோமு.

வள்ளிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்தபடி, " எதை? என்னையா, பணத்தையா?'' என்று கேட்டாள். இப்பொழுது அவள் உயிரில் புதிய தென்பும், மகிழ்ச்சியும் ஊடுருவி கவலையை மறந்து விளையாட்டுப் பேச்சில் ஈடுபட்டதைக் கண்ட ராஜலக்ஷ்மி, " என்னமா கேள்வி கேட்டாள் பார்த்தேளா? பழைய மருதூரு வள்ளியில்லே இப்ப அவள்''

"அம்மா, அம்மா, அப்படிச்சொல்லாதீங்க. என்னிக்கும் மருதூர் வள்ளிதான் நான்!'' என்ருள் அவள்.

" சரி. இன்னபோது விடிந்த நேரம் பொன் நேரம். நல்ல செய்தி காதில் விழுந்தது. வள்ளி கோடைப் பணக்காரியாகி விட்டாள்! கேலி பண்றதா எண்ணுதே. உண்மையாகவே எனக்கு ரொம்ப சந்தோஷம். ஒரு மாச லீவுக்கு எழுதிப் போடுகிறேன். எல்லாரும் ஊருக்குப்போய் ஆகவேண்டியதைப் பார்க்கணும். அருள்மணி அம்மாளுக்குத் தெரியுமோ இந்த விஷயம்?''

" தெரியாது! அவங்க ஆலந்தழைக்குப் போயிருக்காங்க, வர இரண்டு நாளாகும்'' என்ருள் வள்ளி.

அன்றிரவு முழுவதும் இங்கே தம்பதிகளுக்கும் தூக்கமில்லே. அங்கே வள்ளிக்கும் தூக்கம் வரவில்லை! எதிர்பாராமல் கிட்டிய இச்செய்தி மூவரையும் அதிசயத்திலாழ்த்திவிட்டது.

பொழுது விடிந்ததும் காபி சாப்பிட்டுவிட்டு கான்வென்டுக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்த சமயம், " சோமசுந்தரம், தபால்'' என்ற குரல். ஒரு தடித்த கவர் வந்து ஜன்னல் வழியாக உள்ளே விழுந்தது.

அத்தியாயம் 26.

அன்பு கனிந்தது!

நாகுவிடமிருந்து வந்திருந்தது கடிதம்.

அவனுடைய தங்கைக்கு வரன் நிச்சயமாகி இருப்பதாகவும் பணம் இருக்கிற இடம்தான் தெரியவில்லை என்றும், வள்ளி பேருக்கு மருதூருக்கு வந்த கடிதாசு ஒன்று அவள் விலாசத்துக்கு திருப்பிவிட்டு விட்டதாகவும் எழுதியிருந்தான்.

" யார் எழுதியிருக்கா?'' என்று கேட்டுக்கொண்டு அங்கே வந்தாள் ராஜலக்ஷ்மி.

" நாகுதான்! வள்ளிக்கு ஒரு கடிதாசு வந்துது அதை அவள் அட்ரசுக்குத் திருப்பிவிட்டேன் என்று எழுதியிருக்கான். தங்கைக்குக்கல்யாணம் நிச்சயமாகி இருக்காம். பணம் இருக்கிற இடம் தெரியலையாம்!''

" அப்பாவைக் கேட்டதாக...''

" கேட்கமாட்டான் அவன்! கடன் வாங்கறது, பொய் சொல்றது, இந்தத் திரிசமனெல்லாம் அவனுக்குப் பிடிக்காது. வித்து, துட்டு செய்ய அதிகப்படியான நெலமா, நீச்சா ஒண்ணும் கிடையாது. எப்படி பணம் இருக்கிற இடம் தெரியும்?''

" நாம போய்த்தான் இருக்கிற இடம் காட்டிக் கொடுக்கணும்!

'நாலு நாளில் நான் புறப்பட்டு வரேன். கவலைப்படவேண்டாம்'னு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள் அவனுக்கு" என்று ஆக்ஞாபித்தாள் ராஜலக்ஷ்மி.

"வள்ளிக்கு வந்திருக்கற கடிதாசு விவரம் ஒண்ணும் எழுதாமல்"

"ஆமாம்! கடிதாசு வந்ததாம்..."

"அவனென்ன கண்டான் பாவம்..."

"நாம் போய்ச் சேர்ந்து சங்கதியைச் சொன்னதும் 'ஆ'ன்னு வாயைப் பிளக்கப்போறான்!"

"அவனா அசையறவன்? ப்பூ! பணத்தைக் காட்டி அவனை ஏய்க்கவே முடியாது!" என்று கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறி தெரு திரும்பியதும் எதிரே அருள்மணி வந்து கொண்டிருந்தாள்.

கை குவித்து நின்றான் சோமு.

"ஆச்சரியமாக இருக்கிறதே சோமு! ராத்திரிதான் வந்தேன். அதிகாலையிலேயே எனக்குச் செய்தி கிடைச்சுட்டுது! போய் வள்ளியைப் பார்த்துட்டு உங்கள் வீட்டுக்குத்தான் வர்றேன்" என்றாள் அருள்மணி.

"நீங்கள் ஊரிலில்லை என்று சொன்னாள் வள்ளி. கான்வெண்டுக்குப்போய் அவளை ஊருக்கு அழைத்துக் கொண்டு போக ஏற்பாடு செய்யணுமே" என்றான் சோமு.

அருள்மணி திரும்பி, "வாருங்கள் போவோம். வள்ளியின் மனசு கண்ணாடி மாதிரி பரிசுத்தமானது மிஸ்டர் சோமசுந்தரம்! அவள் மாதிரி தூய்மையான எண்ணம் படைத்த பெண் இந்தக் காலத்தில் லட்சத்தில் ஒன்றுகூட இருக்காது! ஆண்டவன் அருள், மாதாவின் அருள் நன்றாக இருக்க வேண்டும் அவளுக்கு. ஆமாம், ஊருக்குவர சம்மதித்து விட்டாளா வள்ளி?"

"நியாயத்தை ஒத்துக் கொள்ளணுமே யாராக இருந்தாலும்! ஊருக்குப் போனதும் நிச்சயமாகும். பத்திரிகை அனுப்புகிறேன் மதர், நீங்கள் கட்டாயம் வரணும்"

"ஓ! வராமலிருப்பேனா நான்? அந்தப் புனித வேளையிலே நான் ஆசி கூற வேண்டாமா? வருவேன்! ஆச்சரியர். இரண்டு வருஷப் பழக்கத்தில் எப்படி ஒட்டிக் கொண்டு விட்டாள் என்னிடம்! ஸ்கூலில் எல்லாருக்கும் அவள் மேலே அவ்வளவு பிரியம். பிரிந்து போகத்தான் அப்படி நேசித்தாள் எங்களை எல்லாம்!" என்று கண்ணீர் மல்கச் சொன்னாள் அருள்மணி.

அவளுடைய அரும் முயற்சியால் வள்ளி ஸ்கூலிலிருந்து, வேலையிலிருந்து விடுதலையடைந்து எல்லோருடைய விசுவாசத்தையும் ஆசியையும் பெற்றுக்கொண்டு, மதர் சுபீரியர் வாசல்வரை வந்து வழியனுப்ப, சோமுவும் ராஜலக்ஷ்மியும் அவளை அழைத்து வந்தார்கள். மூன்றாவது நாள் லீவு அனுமதிக்கப்பட்டதும், வள்ளியின் 'டிராப்'டை மாற்றி, அவள் பேரில் பணத்தை பாங்கில் போட்டுவிட்டு சிறு தொகையுடன் மனைவியையும், வள்ளியையும் அழைத்துக் கொண்டு மருதூர் வந்தான்.

திடும் பிரவேசமாக பிள்ளை நாட்டுப் பெண்ணுடன் வள்ளியும் வந்து இறங்கியதும் ஐயரும் பாலம்மாளும் ஒரு வினாடி திகைத்துவிட்டுத்தான் வந்தவர்களை வரவேற்றார்கள்.

சோமுவின் மூலமாக எல்லா விஷயமும் கேட்டதும் அவன் பெற்றோர்களுக்கு நம்பவே முடியவில்லை அதை! பாங்க் புஸ்தகம், ஆறுமுகத்தின் கடிதம் இரண்டும் பார்த்துவிட்டுத்தான் 'நிஜந்தான்' என்று ஒப்புக்கொண்டார்கள். சோமு வந்திருக்கும் விஷயம் நாகுவுக்குத் தெரிவித்து அழைத்து வந்தான் வேலைக்காரன்.

சோமு நாகுவைப் பார்த்து "வா அப்பா! நாகலிங்கம், வா" என்றான்.

"என்ன சங்கதி, கடிதாசு போடாம திடும்னு வந்திட்டே!" என்று கேட்டான்.

"வள்ளிக்கு நீ ஒரு கடிதாசு திருப்பிவிட்டியோ"

"ஆமாம், அதாரு கடிதாசி, அத்தினி பெரிசா சோமு?"

"ஆறுமுகம் எழுதியிருக்கான்"

"ஆறுமுகமா? எங்கே இருக்குது அது?"

"சிங்கப்பூரிலே இருக்கான். மகளை ஆசீர்வாதம் பண்ணி லட்சத்து அம்பதாயிர ரூபாய் அனுப்பியிருக்கான்"

"கொஞ்சம் விளக்கமா சொல்லு, ஒண்ணும் புரியலே எனக்கு"

நாகுவுக்கு ஆறுமுகத்தின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான் சோமு. அதை இரண்டு மூன்று தடவை படித்து விட்டு நிமிர்ந்தான். அவன் கண்களிலிருந்து பிரவாகமாகப் பெருகியது கண்ணீர்! அவனுடைய நீர் நிரம்பிய கண்களுக்கு முன்பு கொல்லைப் புறத்திலிருந்து வள்ளி வருவது தெரிந்தது!

ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்த நாகுவைக் கண்டதும் அந்த இடத்திலேயே நின்று போனாள் வள்ளி.

"நாகு, வளர்த்த பாசத்துக்கு அடையாளமா பொருளைத் தேடிக் கொடுத்து உன் கையிலும் ஒப்பிச்சுட்டான் ஆறுமுகம் கடிதாசு மூலமா. அதை நடை முதல்லே நடத்தி வைக்க சோமு பெண்சாதி சகிதமா மணப்பெண்ணோடை வந்திருக்கான். பாக்கியை நான் நடத்திவிடுறேன்!" என்றார் ஐயர்.

"அவ்வளவு சடுதியிலே பதில் சொல்ற சங்கதியா இது எஜமான்?" என்றான் நாகு அமைதியான குரலில்.

"மனசிலே முக்கல ஆசையிருக்கிறப்போ, வெளியிலே அவன் காண்பிக்கிற மிடுக்கைப் பார்த்தியாடா சோமு?" என்று கேலியில் இறங்கினாள் பாலம்மாள்.

"அதுக்குப் பேரு மிடுக்கு இல்லே, அவன் மனசிலே இருக்கிறதை நான் சொல்றேன். வள்ளியைக் கல்யாணம் பண்ணிற மாதிரி அந்தஸ்து அவனுக்கு இல்லே; 'அவனுக்கு சமமான ஆஸ்தியிருக்கிற இடமாகத் தேடிப்பிடித்து கலியாணம் பண்ணி வை' என்று சொன்னால் அதைச் செய்ய அவன் ரெடி!"

"வாழ்ந்தாப்பலே இருக்கு யோசனை!" என்று நொடித்தாள் பாலம்மாள்.

"தெரியாம பேசறீங்க அம்மா. நீங்க. பொண்ணைக் குடுக்கிற இடம் பணக்கார இடமாக இருக்கலாம். பொண்ணை எடுக்கிற இடம் நமக்குச் சரி சமமா, இல்லே. கொஞ்சம் தாழ்ந்த கையா இருந்தாலும் மோசமில்லே. இப்ப, வள்ளிக்கும் எனக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருக்குதே! அப்புறமா வருத்தப்படறதைவிட இப்போ நல்லா யோசனை பண்ணிச் செய்யறதுதான் லட்சணம். இப்ப நான்..."

"ஆறுமுகம் தன் கடிதாசுலே உன்னைக் கலியாணம் பண்ணிக்கச் சொல்லி எழுதி இருக்கானே, படிச்சயோ அதை?" என்று கேட்டார் ஐயர்.

"அவருக்கு ஒண்ணு கோவப்படத் தெரியும், இல்லியா, இடுப்பு வேட்டியைக்கூட எடுத்து தருமம் வழங்கத்தெரியும். சமுசாரம் என்ன, ஏதுன்னு அவரென்னத்தைக் கண்டாரு? சொல்லுங்க பாப்பம்!"

இதுவரையிலும் சிலை போல நின்னு கொண்டிருந்த வள்ளி இரண்டடி முன் வந்தாள். ஆத்திரம் நிறைந்த குரலில், சோமுவைப் பார்த்து, "சாமி, இந்தப் பணத்தாலேதானே என் நல்லதனமெல்லாம் நாசமாப் போச்சு? அதனாலே இதையெல்லாம் நான் இருந்த பள்ளிக்கூடத்துக்கு நன்கொடையாக குடுத்துடறேன். எனக்குக் கலியாணமும் வேண்டாம், காட்சியும் வேண்டாம். யாருடைய தயவும்

நீடித்து உழைக்கும்
பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனாமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவிதமான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்
1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.



S. SANTHOSA NADAR & SON
1/4. EVENING BAZAR ..... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

வேண்டாம்—இந்த மனிசக் கூட்டத்திலே நடமாடக்கூட எனக்குப் பிடிக்கல்லே. டிக்கட்டு வாங்கி என்னை மின்னே வண்டியேத்தி அனுப்பிடுங்க" என்று ஆவேசத்துடன் கூறிவிட்டு விடுவிடென்று கொல்லைப்பக்கம் போனாள் வள்ளி.

எல்லோரும் பிரமை தட்டிப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

பாலம்மாள் மனது கேட்கவில்லை.

"ஏண்டா நாகு போறுமா உனக்கு?" என்று கேட்டாள்.

"உன்மேலே எவ்வளவு அன்பு இருக்கு அவளுக்கு என்கிறது நன்னாத் தெரிஞ்சு போச்சு உனக்கு. இப்ப என்ன சொல்றே?" என்று கேட்டார் ஐயர்.

"இல்லையப்பா! ஐஞ்சு நிமிஷநேரம் 'நான் பூங்காவனத்தின் பிள்ளை தா'ன்னு காண்பிச்சான். இப்ப நம்ப பழைய நாகு வாயிட்டான். அம்மா, வள்ளியைக் கவலைப்படாம இருக்கச் சொல்லு. அப்பா நீங்கள் வாத்தியாரை வரவழைச்சு முகூர்த்தம் பாருங்கள்" என்று கூறி ராஜலக்ஷ்மியிடம் வந்து "ராஜம், மனுஷாளை தாஜாப் பண்ணுகிறதிலே நீதான் 'ஸ்பெஷலிஸ்ட்' ஆச்சே, வள்ளியை மெள்ள வழிக்குக் கொண்டு வந்துடு. நான் போய் துரையைப் பார்த்துட்டு வரேன். என்ன?" என்றான் சோமு.

"சரி" என்றாள் அவள்.

கூடத்துப் பக்கம் வந்து "நாகு, போயி உங்கம்மாகிட்ட எதை எப்

படிச் சொல்லணுமோ சொல்லு, சாயந்திரம் வா பேசுவோம்" என்ருன் சோமு.

"அம்மாவுக்கு சேதி மத்தியானத்துக்கு மேலே சொல்லலாம். இப்போ களத்திலே உளுந்து கிடக்கு, அங்கே போகணும் நான்" என்று புறப்பட்டான் நாகு.

சரியாக அன்றைக்கு எட்டாம் நாள் முகூர்த்தம் வைக்கப்பட்டது. ஆடம்பரமே நாகுவுக்குப் பிடிக்காதாகையால் சங்கிரஹமாக-ஆனல் விமரிசையாக நடந்தது விவாகம். கல்யாணச் செலவு முழுவதும் ஐயரே செய்து விட்டார். சோமுவின் உதாரத்தால் துரை வள்ளிக்கும், நாகுவுக்கும் ஜோடியாக வெள்ளி டம்ளர் வாங்கி பரிசு அளித்தான். அருள்மணி அம்மாள் வந்து ஆசி தந்து, என்றும் எந்த இடருமின்றி வாழ்ந்திருக்க சிலுவைச் சின்னம் பொறித்த மோதிரத்தை அவள் கையில் அணிவித்தாள். மணப்பந்தலிலிருந்த அனைவரும் வள்ளியின் அதிர்ஷ்டத்தைப் புகழ்ந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்கள். வள்ளியோ, இவ்வளவு பெருமைக்கும் ஆளாக்கிய அருமை சிற்றப்பனையும், அன்புத் தந்தையையும் எண்ணி கண்ணீர் வடித்தாள். மாங்கலியமும், புத்தாடையுமணிந்து மனம் வெதும்பிக் கண்ணீர் விடும் வள்ளியை பூங்காவனம் ஓடி வந்து அணைத்து ஆறுதல் சொல்லித் தேற்றிஞள்.

அருள்மணியை அணுகிய வள்ளி நன்றி உணர்ச்சியுடன், "அம்மா, இன்று நாளைக்கு ஊருக்குப் போய் விடலாம் என்று எண்ணுதிங்க..."

"பின்னே ?"

"ஒருமாசம் உங்களை நான் விடப் போறதில்லே" என்ருள் கண்ணீர்ப் பெருக்குடன்.

வாயைப் பொத்திக் கொண்டவளாக, "ஏ அப்பாடியோ, ஆசையைப் பாத்தியா ?" என்று சிரித்தாள் அருள்மணி.

"நீங்க மட்டும் எவ்வளவு ஆசையோட என்னை அழைச்சிப் போயி, வேலே வாங்கி வச்சு, படிப்பு சொல்லி வச்சு, பாடுபட்டீங்க... அதுக்கு..."

"ஐயைய, இதென்ன புதுமையாயிருக்குதே உன் குணம். உலகத்திலே என்னவழக்கம்னு கலியாணம் ஆனதும், புருஷன் பெண்சாதி 'ஹனிமூன்' போவாங்க. நீ என்னடான்னு கிழவி ஒருத்தியை நடுவிலே..." அருள்மணி பேச்சை முடிக்க முடியாமல் வள்ளி குறுக்கிட்டாள்.

"போங்கம்மா, அப்புறம் நான் உங்ககூடவே புறப்பட்டுடுவேன். இந்த மாதிரி எதுவும் பேசினல்!" என்ருள்.

"அம்மம்மா, உன் சொரூபத்தைக் காட்டிடாதே! பத்து நாள் இருக்கேன். அதுக்குமேலே நீ ஆசைப் படக்கூடாது. சரி, கேட்கலாம்னு கேட்கிறேன் வள்ளியம்மா, இந்த சொத்து சுதந்திரமெல்லாம்-எப்படி என்ன செய்யப்போறதா உத்தேசம் ?" என்று கேட்டாள் அருள்மணி.

"அவங்க உத்தேசம் ஒண்ணும் தெரியல்லே. என்வரைக்கும் நான் ஒரு தீர்மானம் பண்ணிட்டேன் அன்னிக்கே. இந்த ஊரிலே நல்ல பள்ளிக்கூடம் இல்லே. அதை வச்சு ஏழைப் பிள்ளைகள் படிக்க வழி செய்யணும். அநாதியா நின்ன எனக்கு இடம் கொடுத்து வாழ வச்ச உங்க பேரை வைக்கணும் அந்த பள்ளிக்கூடத்துக்கு. இது என் ஆசையம்மா" என்று நெக்குருகச் சொன்ஞள் வள்ளி.

அருள் மணி, வள்ளியின் உத்தமமான தர்ம சிந்தனையைக் கண்டு பேரானந்தமடைந்தாள். கண்களை மூடி தனக்குள்ளாக "சேசுவே, மாதா, எல்லாம் உன் கருணை, உன் செயல்!" என்று எண்ணி உருகிஞள். பிறகு மெதுவாகக் கண் விழித்து, "குழந்தே பள்ளிக்கூடம் வச்சு, மக்களுக்குக் கல்வி போதிப்பது

பெரிய தொண்டு! அது உண்மையில் ஆண்டவனுக்கு நாம் செய்யும் புனிதத் தொண்டு. ஆனால் என் பெயர் வேண்டாம். உங்கள் மதாசாரப்படி ஏதாவதொரு புண்ணிய புருஷர்கள், ஸ்த்ரீகள் பெயரை வை!'' என்று சொன்னாள் அருள் மணி.

“எம்மதமும் சம்மதமாகிவிட்ட எனக்கு நீங்கதான் புண்ணிய ஸ்த்ரீயாகத் தெரியுது. உங்கள் பேரைத் தான் வைப்பேன்!''

“ஒண்ணு பண்ணு! என் மாதிரி ஒரு சிலை செதுக்கி வை, பள்ளிக் கூட முகப்பில்! பைத்தியக்காரப் பொண்ணே, வெளியே சொல்லாதே, சிரிப்பாங்க”

“யாரு சிரிக்கிறது? தெரியாததைச் சொல்லிக் கொடுத்ததுக்கு ரொம்ப வந்தனம் அம்மா, சிலை வைக்கணும்னு தோணவேயில்லியே எனக்கு!'' என்றாள் வள்ளி.

“பைத்தியம்னு உனக்கு பேரு வைக்கறுங்களா, இல்லியா பாரு. பேரு கிடைக்குமே தவிர காரியம் நடக்காது! சொன்னால் கேளு”

“நினைச்சதைச் செய்து முடிக்கிறவள் நான்னு உங்களுக்குத் தெரியும். மச்சானே, சோமுவோ இதைக் கேட்டா சந்தோஷமா அதுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வாங்களே யொழிய மறுக்கப் போறதில்லை. அடுத்த வருஷம் '**அருள் மணி இல்லம்**' என்கிற பேருலே 'ஜம்' முனு பள்ளிக்கூடம் நடக்கப் போவுது பாருங்களேன்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் வள்ளி.

இதைக் கேட்ட அருள் மணியின் உடல் சிலிர்த்து அடங்கியது. வள்ளியின் பரந்த நோக்கத்தையும் அன்பு உள்ளத்தையும் கண்டு உணர்வைப் பறிகொடுத்து நின்றாள் அருள்மணி.

அத்தியாயம் 27.

அருள் மணி இல்லம்

அன்றைக்கு எட்டாம் நாள் காலை. காலை உணவு அருந்திவிட்டு எழுந்தான் நாகு. காபியை ஆற்றி யெடுத்துக் கொண்டு வந்தாள் வள்ளி.

டடம், டம்டம், டம், டம்டம்...

தண்டோரா ஓசை கேட்டதும் பதைத்துப் போய் தெருவுக்கு ஓடி வந்து விசாரித்தான் நாகு. அவன் நெஞ்சு படபடத்தது. உள்ளே சென்று, “வள்ளி துரையின் வீடு வாசல் நிலம் எல்லாம் இன்னிக்கு



ஏலத்திலே வருது” என்றான் நாக்குளற.

“ஐயையோ!”

“இந்த சங்கதி சோமுவுக்குத் தெரியாம இருக்காது. நம்மகிட்ட சொல்லிச்சா பாத்தியா அது?'' சற்று நேரம் பேசாமலிருந்து விட்டு “எத்தனி மணிக்கி ஏலம்?''

“பன்னெண்டு மணிக்கி. சோமுவைப் போய்ப் பாத்துட்டு வரலாம் வர்றியா?''

“ஒண்ணும் வேணும். ஏலச் சாவடிக்கு வருவாங்களே; அப்போ பார்த்து

கிட்டாப் போச்சு" என்றாள் வள்ளி நிதானமாக.

"எங்கே அம்மாவைக் காணோம்" என்று அருள்மணியைக் கேட்டான் நாகு.

"வயல்வெளிக்குப் போனாங்க" என்றாள்.

"பகையாளியாக இருந்தாக்கூட அவன் சோத்துக்கு கஷ்டப்படக் கூடாது வள்ளி! கையகல நெலம் கூட இல்லியே அவங்களுக்கு என்ன செய்வாங்க பாவம்"

அருள்மணி பறக்கப் பறக்க ஓடி வந்து "துரை சொத்தெல்லாம் இன்னிக்கு ஏலமாமே வள்ளி?" என்று படபடத்தாள்.

"அதுதான் சோமுவைப் பாத்து ஏதாவது ஏற்பாடு பண்ணலாம்னு இது வேணும்குதே" என்று பதறினான் நாகு.

"அவரு காரணமாத்தான் நம்ம கிட்ட இதைச் சொல்லாம இருக்காரு, அதை யறிஞ்சுக்கவேணும்—நம்ப?" என்று ஒரு போடு போட்டாள் வள்ளி.

வள்ளியின் நுண்ணறிவைக் கண்டு அயர்ந்து போனார்கள் நாகுவும், அருள்மணியும்.

பன்னிரண்டு மணிக்கு ஏலச்சாவடியில் ஊரே திரண்டு வந்திருந்தது.

நாகுவும் வள்ளியும் அருள்மணியும்கூட அங்கு வந்திருப்பதை பார்த்தார்கள் சோமுவும், ஐயரும்.

"சோமு, நாகுவோட வள்ளியும் வந்திருக்காளே!" என்று ஆச்சரியப்பட்டார் ஐயர்.

சோமு பதில் ஒன்றும் சொல்லவில்லை. இவள் எதற்கு வந்தாள் என்று நினைத்தான் முதலில். பிறகு யோசிக்க ஆரம்பித்தான் மூளை குழம்பியது.

ஏல அதிகாரி ஏலம் கூறினார்.

ஏலத்துகை ஏறிக் கொண்டே போயிற்று.

"இருபத்தையாயிரம்" என்றார் ஐயர்.

"இருபத்தாறாயிரம்" என்றாள் உரத்த குரலில் வள்ளி!

கூட்டம் பிரமித்தது! ஐயரும் சோமுவும் திக்பிரமைகொண்டு பேச்சிழந்தவர்களாக வள்ளியைக் கூர்ந்து பார்த்தார்கள்.

நாகு மனைவியின்புறம் திரும்பிப் பார்த்தான். அருள்மணி உலுக்கி விழுந்தாள்! ஐயர் ஆத்திரத்துடன் மேலும் ஓராயிரம் உயர்த்த வாயெடுத்தார், சோமு தடுத்து விட்டான்.

துரையின் சொத்து முழுவதும் வள்ளி ஏலத்தில் எடுத்து விட்டாள் என்றதும் பலவிதமான அபிப்பிராயங்கள் அங்கு அடிபட்டன!

எல்லாம் முடிந்து வீடு திரும்பும் போது ஐயர் சோமுவிடம் "இந்தக் குட்டி செய்தவேலையைப் பார்த்தியா சோமு, நீயேன் என்னை மடக்கினே...கூடாதுன்னு?" என்று படபடத்தார். துரையின் அதோ கதியை எண்ணி அவர் உள்ளம் பதறியது.

"அவள் எடுப்பாள் என்று யாருக்குத் தெரியும். நீங்கள் ஏத்தி உபயோகமில்லை. அவளும் ஆயிர, ஆயிரமாக ஏத்திக் கொண்டே வருவாள்! அது அவள் குணம்"

"பெண்ணோ, லட்சணமோ, நாகு இதை கட்டிக் கொண்டு எப்படி காலந்தள்ளப் போறானோ. நம்மை ஒரு வார்த்தை கேட்டுதா பாரு. பணம் வந்ததும் கர்வமும் அதோட கூடவே வந்துடுத்து. நாகுவைக் கூட அது கேட்டதாத் தெரியல்லேடா" என்று வழி நெடுகிலும் பொரிந்து தள்ளிக் கொண்டே வந்தார் ஐயர். எதற்கும் சோமு வாயைத் திறக்கவேயில்லை. வீட்டுக்கு வந்ததும் அவர் ஓயவில்லை, பாலம்மாளிடம் சொல்லிச் சொல்லி ஆற்றுமைப் பட்டார். "பேஷ், பழி தீர்த்துக் கொண்டு விட்டாளாக்கும்" என்றாள் பாலம்மாள் ஸ்திரீ சுபாவத்துடன்.

"பள்ளிக்கூடம் கட்டராளாம், பாடசாலை வைக்கராளாம்..."

"ஆமாம், அதோடுகூட இன்னொரு கடமையையும்கூட செய்துட்டேனுங்க" என்று கூறியபடி நாகு

வும், அருள்மணியும் கூடவர வள்ளி அங்கு தோன்றினுள்.

ஐயர் முகம் விழுந்து விட்டது.

"சோமு, ஐயருக்கு ரொம்பக் கோவம் வள்ளி மேலேன்னு தெரியுது! அவருக்கில்லாத பாத்தியம் யாருக்கு? நல்லா கோவிக்கட்டும்" என்ருன் நாகு புன்னகையுடன்.

"சாமி, எனக்கு பத்திரம், பாடி, பதிவு இந்த தண்டாவெல்லாம் ஒண்ணும் தெரியாது. இப்ப நான் ஏலம் எடுத்த அவ்வளவையும் சின்னய்யரு பேருக்கு மாத்திக் குடுத்துடுங்க. என்ன அப்படி முளிக்கறீங்க எல்லாருமா? எங்க முப்பட்டான், பாட்டான், அப்பன் மூணு பேரு உளுது, விதைச்சு, கண்டு முதலு எடுத்த பண்ணை அது! அது அந்த வமிசத்தை உட்டு கைமாறக்கூடாதுன்னுதான் நான் எடுத்தேன். எங்கப்பன் இருந்து, இந்த தண்டோரா காதிலே கேட்டிருந்தால் அந்த வயல்லியே போய் விளுந்து உசிரை விட்டுடும்! பெரியய்யிரு மகாராஜா. அவரு வமிசம் வீடும் விளக்குமாத் தொலங்கணும்னுதான் செய்தேன். நாளைக்கி இதுக்கு என்னென்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்து, அவருகிட்ட ஒப்பிச்சு அவருக்கு ஒரு பொண்ணையும் பாத்து கட்டி வச்சிடுங்க முதல் வேலையா. நான் ஏன் இதை செஞ்சேன்னுல், திமை செஞ்சவங்களுக்கும், நன்மையே செய்யணும்னு எங்க பள்ளிக்கூடத்திலேயும் இந்தம்மா கிட்ட இருந்தும் இரண்டு வருசமா கேட்டுக் கேட்டு என் மனசிலே இருந்த பாவ நினைப்பெல்லாம் பறந்து போச்சு. பணக்காரி எங்கிற அகம்பாவத்திலே கொடுக்கலே—ஆண்டவன் பேராலே நான் கொடுத்தேன். பெரிய மனசு பண்ணி அவரை ஏத்துக்கச் சொல்லுங்க, எங்கப்பனுக்காகவும் எனக்காகவும் அநேக தெண்டமும் சொல்லுங்க" என்ருள் வள்ளி. அருள்மணி கண்ணீர்சோர வள்ளியை தன்னேடு ஆரத்தழுவியபடி தன்னை மறந்தாள்!

முக்கூடல் டிரேடிங் கம்பெனி

பேப்பர், பிரிண்ட் இங்கு வியாபாரம்

நெ. 108, கீழ ரத வீதி,

நெல்லை டவுன்.

Grams: "BRASSWARE" Phone: 236

K. S. முத்து அய்யர்

பாத்திர வியாபாரம்,

நெ. 36, அம்மன் சன்னதி,

நெல்லை டவுன்.

எங்களிடம் திருநெல்வேலியில் தயாராகும் பலவகைப் பித்தளை பாத்திரங்கள் மொத்தமாக சகாய மான விலைக்குக் கிடைக்கும்.

K. S. முத்து அய்யர்

பாத்திர வியாபாரம்,

நெல்லை டவுன்.

சில நிமிஷ நேரம் அங்கு மௌனம் நிலவியது.

சோமுவின் குரல் எழுந்தது. "நன்னு யோசனே பண்ணி பார்த்தையா வள்ளி?" என்று கேட்டான்.

"எதுக்கு? கடமையைச் செய்ய யோசனே என்ன இருக்குது சாமி? அவங்க வீட்டு உப்பும்,சோறும்தான் என் உடம்பிலே ரத்தமா ஓடிக்கிட்டு இருக்குது! இதை நான், செய்யாத போனு கடவுள் என்னே மன்னிக்க மாட்டாரே?" என்று நகைத்தாள் வள்ளி.

சிவந்த கண்களிலிருந்து கண்ணீர் ஆருய்ப் பெருக காமிரா உள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த துரை உணர்ச்சிப் பெருக்கால் உடல் தள்ளாட, "வள்ளி, எனக்கு ஒண்ணும் வேண்டாம். என் பாவத்துக்குப் பரிகாரமாக நான் தேச சஞ்சாரம் செய்யப் போகிறேன், உனக்குச் செய்த அபசாரத்துக்கு"

"அடடா, இவரு எங்கே வந்தாரு இங்கே?" என்ருள் வள்ளி.

"இன்னி தினம் அவனே அங்கே விட்டு வைக்கப்படாதுன்னு இங்கே வச்சிருக்கேன்" என்ருன் சோமு.

ஒரு அடி முன்னல் வந்து துரைக்கு நமஸ்காரம் செய்துவிட்டு. "பழைய நினேவே இனிமே வேணும். ஊருக்குள்ளே பகையே இருக்கக் கூடாது. நம்ப ஊரு ஒரு படிப்பினேயா இருக்கணும் ஜனங்களுக்கு. அதிலே, உங்களுக்கு ரொம்ப வேலேயிருக்குது. அதிலே, உங்க மனசும் ஆறும், பாவமெல்லாம் கரைஞ்சுடும். இந்த என் சொல்லுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆவணும். இதை அதிகாரமாச் சொல்லல்லே, அடக்கமாகச் சொல்றேன். ஓ சின்னம்மா ராஜலக்ஷ்மி அம்மா, இங்கே எல்லாருக்குமா ஒருகாப்பி தயாரு பண்ணி கொண்டாங்க பாப்பம்" என்ருள் வள்ளி சுவாதீனமாக.

"தயாராகிக் கொண்டிருக்கு காபியும்—சமையலும்கூட!" என்ருள் ராஜலக்ஷ்மியும் சளைக்காமல்.

நிகழ்வதையெல்லாம் பார்த்துக் கொண்டுநின்ற பாலம்மாள் மனதில் அழுக்குப் பாவாடையும், பரட்டைத் தலேயுமா மார்கழி மாசத்திலே முப்பது நாளும் பறங்கிப்பூ போட்டு காசு வாங்கின கந்தப்பன் பொண்ணு, இன்னிக்கி, தனக்கு சமமான சொத்து சுதந்திரத்துடன் நடுக்கூடத்தில் நின்று நியாயமும் தருமமும், பாவ புண்ணியமும் பற்றி பேசுகிருளே, இதென்ன நிஜமா இல்லே கண்கட்டு வித்தையா, என்ற பிரமை உண்டாயிற்று.

நாகுவின் நினேவு பேரானந்தக் கடலில் மூழ்கித் திளேத்துக் கொண்டிருந்தது! தியாகத்தின் நிலேக்களனை வள்ளியை மனேவியாக அடையப்பெற்ற அவன் பெருமைக்கு ஈடேது, இணேயேது?

அன்று தினம் சோமுவின் வீடு கல்யாணம் பட்ட பாடுதான். ஒரே கோலாகலம். 'அருள்மணி இல்லம்'த்தின் அஸ்திவாரக் கல் நடு விழாவுக்கு இரண்டு நாட்கள் இருந்தன. அன்று தினம் அந்த கிராமத்தின் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும் என்பது வள்ளியின் அவா.

அவள் விருப்பத்தை நிறைவேற்ற அதற்கான சாமக்ரியைகளேச் சேகரித்தான் நாகு.

புதன்கிழமை காலேயில் மருதூர் கிராமம் கலியாணக் கோலத்துடன் கண் விழித்தது. கிராம மக்களின் சந்தோஷம் கரை கடந்தது. வீடு தோறும் விளக்கேற்றி வைத்தனர். எங்கும் தோரணங்கள் தொங்கின. நீதி வாக்கியங்களேச் சொல்லும் வளேவுகள் தெருக்கள் தோறும் காணப்பட்டன!

அஸ்திவாரக்கல் நடும் நேரமான காலே ஆறரை மணிக்கு அவ்விடத்தில் எல்லோரும் கூடினர்கள். வள்ளியின் வேண்டுகோளின் பேரிலும் சோமுவின்கட்டாயத்தினுலும் புனிதமான எண்ணமும் புனிதமான செயலுமுள்ள அருள்மணி அம்மையாரு

டைய கையினால் அஸ்திவாரக் கல் நடப்பட்டது !

கேட்போருடைய உள்ளம் உருகும் வண்ணம் அருள்மணி அம்மையார் வள்ளியின் பிறப்பு, வளர்ப்பு, இன்றைய நிலை அவளுடைய தியாகம், கற்பு, நேர்மை முதலிய உத்தம பண்புகளை வெகுவாகச் சிலாகித்து அவள் பிறந்து வளர்ந்து, வாழவேண்டிய அந்த ஊரில் அறமும், அறிவும், தருமமும் தழைத்தோங்க இறைவனை மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டு பேசி முடித்தாள்.

சோமு முன் வந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வள்ளியை கொந்தளிக்கும் உள்ளத்துடன் இந்த ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு போனேன், ஆண்டவனுடைய அருளை நம்பி ! இன்று அந்த நிலைமைக்கு நேர்மாறாக தியாகமும், செல்வமும் கூடிய வள்ளியாக சந்தோஷமான உள்ளத்தோடு அழைத்து வந்தேன். யாருமே எதிர்பாராமல் தனது ஜன்ம பூமியான இந்த மருதூரில் கல்வி நிலையம் ஸ்தாபனமாகி தனது பிறவியைப் பயனுள்ளதாக்கிக்கொண்டான் ஆறுமுகம். அவனுடைய அன்பு நிலையமான இந்தவள்ளிக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளையும், நல்வாழ்வையும் அளிப்பானாக என்று ஆனந்தக் கண்ணீரோடு சொல்லி முடித்தான்.

துரை முன்வந்தான் "பகைவனுக்கு அருள் செய்யும் பண்பு எல்லோரிடமும் இருப்பதில்லை ! வள்ளியின் அந்தப் பண்புக்கும் தியாக வேள்விக்கும் முன்பு நான் தலை வணங்குகிறேன். இந்த அருள்மணி இல்லத்தின் வளர்ச்சியில் எனது மீண்ட சொத்தில் பெரும்பாகத்தைச் சேர்த்து, அதன் ஊழியனாகப் பணியாற்றி என் பிறவியைப் பயன்படுத்த நிச்சயித்துவிட்டேன்" என்று உணர்ச்சி உரை தடுமாறப் பேசி முடித்தான்.

கடைசியாக ராமநாதய்யர் பேச ஆரம்பித்து, "குழந்தைகளே, நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒற்றுமையோடும் ஆர்வத்தோடும் உழைத்து இந்த '**அருள்மணி இல்ல**'த்தின் கொள்கைகளை எல்லோரும் பின்பற்றும் முறையில் அதை சிறப்பித்து நடத்திவர சர்வேசுவரன் கிருபை நிறைந்திருக்குமாக !" என்று தமது வலது கரத்தை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

அப்பொழுது எழுந்த கரகோஷம் வானை எட்டியது ! **(முற்றும்)**





இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC: 424

புல்லியன் செய்த பிழைபொறுத்தேயருள் வெண்ணிலாவே!

-வல்லிக்கண்ணன்-

அவன் அவளைக் காதலித்தான்.

அவள் பெயர்?

எதுவாக இருந்தால்தான் என்ன!

இருப்பினும், கதைக்காக அவளுக்கு ஒரு பெயர் அவசியம் அல்லவா? அது 'மங்கையர்க்கரசி' என்றுதான் இருக்கட்டுமே!

மங்கையும் அவனைக் காதலித்தாள்.

அவனுக்கும் ஒருபெயர் வேண்டுமன்றோ? அவனை 'நம்பி' என்றே குறிப்பிடலாம்.

நம்பி என்பதற்கு 'ஆண்களில் சிறந்தவன்' என்று ஒரு பொருளும் உண்டாம். ஆண்களில் சிறந்தவன் அவன் என்றுதான் மங்கையர்க்கரசி கருதினாள். அவளுடைய உள்ளத்திலே அரும்பி, வளர்ந்து, மலர்ந்து, அவளுக்கு மகிழ்வளித்துக் கொண்டிருந்த காதல் எனும் உணர்வு அவளை அவ்வாறு எண்ணும்படி தூண்டியது.

அவள் அழகாக இருந்தாள். தான் பார்த்த—பார்க்கின்ற—பெண்கள் எல்லோரிலும் அவள்தான் பேரழகி என்றே எண்ணினான் அவன்.

அல்லி மலர்கள் பூத்த தடாகத்திலே முழுதலர்ந்து நிற்கின்ற செந்தாமரை அவள். முல்லை மலர்களிடையே எழில் சிரிக்க விளங்குகிற குண்டுமல்லி. வெள்ளிகளில் எல்லாம் சிறப்பு மிகுந்து திகழும் விடிவெள்ளி அவள். தன்னிகரற்ற முழுமதியும் அவளே.

இப்படி எல்லாம் அவன் எண்ணி மகிழ்வது உண்டு. அவனுள் குமிழியிட்டுப் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்த காதல்தான் அவனை அவ்வாறு எண்ணச் செய்தது.

அவள் முகத்தைப் பார்க்கவேண்டும்; பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை அவனது செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்தது.

அவனைப் பார்க்கும்போது அவள் முகத்தில் மலர்ச்சி பரவும். காலை இளம் பொழுதில் மலர்ந்தும் மலரா நிலையில் திகழும் மொக்கு ஒரு தனி அழகு உடையது. அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அழகு சிலிர்க்கும் இதழ்கள் சிறிது சிறிதாக விரிகின்றன. பின் திடீரென்று ஒரே கணத்தில் பூ முழுதும் எழில் குலுங்கச் சிரிக்கிறது. அந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது? கவனிக்கும் கண்களுக்குப் புலனாகாத அதிசயம் அது. அவ்விதமே, அவனது பார்வையை ஏற்கும் அவள் முகமும் சிறிது சிறிதாக மலர்ச்சி காட்டிப் பின் குபீரெனச் சிவக்கும்; அழகின் சிரிப்பாய் மிளிரும்.

அந்த அழகுக்கும், அதற்குத் தனி உயிர்ப்பு அளிக்கும் கரிய, பெரிய கண்களின் கவிதை மயமான பேச்சுக்கும் இணை வேறு எந்தப் பெண்ணிடமும் காண முடியாது என்று அவன் நம்பினான். அவளிடமும் கூறத் தயங்கியதில்லை.

அவள் அருகில் இல்லாத ஒவ்வொரு நிமிஷமும் அவனுக்கு ஊர்ந்து நகருகின்ற பெரும் பொழுதாகத் தோன்றியது. அவள் அவனோடு இருந்து சிரித்துப் பேசிப் போக்கிய பல மணி நேரம் கூட வேகமாக ஓடுகின்ற சில கணப்பொழுதாகவேபட்டது.

அவளுக்கும் அவ்விதமே தோன்றியது.

காதல் என்பது விசித்திரமான சக்தி தான். அது விசாலமான உல

கத்தைக்கூடக் குறுகியதாகத் தோன்றும்படி செய்கிறது! அகன்ற கடற்கரையிலே உட்காரும் போது கூட, காதலனும் காதலியும் 'இட நெருக்கடி'யால் சிரமப்படுகிறவர்கள் மாதிரி ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டுதான் உட்கார்ந்திருக்கிறார்கள். இட விசாலம் பெற்ற புது மாடல் காரின் பின் ஸீட்டில் அமர்ந்து போகிறபோதுகூட, 'மூன்றுவது வகுப்பு ரயில் பெட்டியின் பெஞ்சு' மீது எப்படியோ இடம் பிடித்துக் கொண்டு விட்டவர்களைப் போல், ஒருவர்மீது ஒருவர் நெருக்கி மோதிக் கொண்டுதான் பிரயாணம் போகிறார்கள். பகல் இரவு என்பதையும்,அக்கம் பக்கம் என்பதையும், பொது இடம் தனி இடம் என்பதையும், இன்னோரன்ன பேதா பேதங்களையும் மறந்துவிடும்படி செய்கிறது இந்தக் 'காதல்' என்கிற மாயம்!

அவனுக்கு அவள்தான் உலகம்; அவளுக்கு எல்லாம் அவனே.

மங்கையர்க்கரசி இல்லாமல் தனக்கு வாழ்வு இல்லை என்றுதான் நம்பி எண்ணினான். அவளுடைய அசைவிலே அழகைக் கண்டான் அவன். நிற்கின்ற நிலையிலே, நடக்கின்ற நடையிலே, கை வீச்சிலே, தலைப் பின்னலின் ஆட்டத்திலே, சேலைத் தலைப்பின் விசிறலிலும் கொசுவத்தின் சுழற்சியிலும் அவன் அழகை—அதுவரை எங்கும், எவளிடத்தும் காணாத அற்புதத்தை—கண்டு வியந்து ரசித்து மகிழ்ந்தான். அவளுடைய சிரிப்பிலும்,பேச்சிலும், இனிமையும் எழிலும் கலந்து திகழ்வதை அவன் உணர்ந்தான். கனவின் இனிமை எல்லாம், காவியத்தின் அற்புதமெல்லாம், ஓவியத்தின் உயர்வு எல்லாம், இயற்கையின் வளம் எல்லாம் அவளிடம்—அவளிடம் மட்டுமே—ஒருங்கு கூடி நல்லதோர் விருந்து எனத் திகழ்வதாக நம்பினான் அவன். தன் அதிர்ஷ்

டத்தை எண்ணி இறுமாந்திருந்தான்.

அவளும் அவனில் அழகை, இனிமையை, வாழ்வை, உலகை, உயர்வைக் கண்டாள். தன்னையே அவனில் கண்டாள். தான் எனும் அகந்தையை மறந்து, தன்னையே அவனுக்குத் தந்துவிட்டாள். அவள் அகத்தில் அன்பு குடி கொண்டிருந்தது. ஆகவே அவள் முகத்தில் ஆனந்தம் நிறைந்து பிரகாசித்தது.

அவனுக்காகவே அவளும், அவளுக்காகவே அவனும் பிறந்திருப்பதாக நம்பிச் செயல் புரிந்த மங்கையர்க்கரசியும் நம்பியும் ஒருவருக்கொருவர் துணையாகி, வாழ்க்கைப்

பாதையில் கைகோத்துச் செல்வது என்று திர்மானித்தார்கள். ஆனால், 'பொருளாதாரம்' குறுக்கே கிடக்கும் நந்தியாக வழிமறித்தது.

நிரந்தரமான வருவாய்க்கு வழி செய்யும் ஒரு வேலை கிடைக்க வேண்டும்; அதற்கு முயற்சி செய்கிறேன் என்று அவன் சொன்னான்.

தன்னால், எவ்வளவு காலம் வேண்டுமாயினும் காத்திருக்க முடியும்என்று அவள் அறிவித்தாள்.

காலம் வழக்கம்போல் ஓடிக் கொண்டிருந்தது. சில சமயங்களில் இறக்கை கட்டிக் கொண்டு பறப்பது போலவும், சில சமயங்களில் நத்தை வேகத்தில் முன்னேறுவது போலவும் போய்க் கொண்டிருந்தது.

காலக் 'கிழவன் குறும்புக்காரன்; குழந்தைத்தனம் பெற்றவனும்கூட; 'கடவுள்தனம்' படைத்தவன் என்றுகூடச் சொல்லலாம். ஜீவராசிகளின் இன்ப துன்பங்களை— பொருள்களின் மதிப்பு, அழிவு, லாபம், நஷ்டம் முதலியவைகளை— கருத்தில் கொள்ளாமல் அழித்து மகிழ்வதை 'அலகிலா விளையாட்டு' ஆகக் கொண்டுவிட்ட தன்மை காலத்தின் போக்கிலும் காணப்படுகிறதே!

எழில் மிகுந்த பூவாகத் திகழ வேண்டிய ரோஜா முகையை உள்ளிருந்தே புழு ஒன்று அரித்துப் பாழ்படுத்திவிடுவது போலவும், நல்ல கனியாக விளங்க வேண்டியது வெம்பி விழுவது போலவும், தளதளவென்று ஓங்கி வளர்ந்து வரும் பச்சைப் பசும் பயிர் ஏதோ நோயினால் கருகிச் சுருண்டு விடுவது போலவும், மங்கையர்க்கரசியின் 'கண் நிறைந்த' அழகு சீர் கெட்டுப் போகும்படி கொடு நோய் பாதித்தது.

ஒருமுறை பார்த்தால் மறுபடியும் மறுபடியும் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டும் காந்த வனப்பு பெற்றிருந்த அவள் முகம், ஒரு தடவை பார்த்தாலே 'ஐயே!' என்று முகம் சுளிக்கவைக்கும் கோரத் தன்மை பெற்றதாக மாறிவிட்டது. முழு நிலவாகப் பொலிந்த முகத்தில் கிரகணத்தின் இழுக்கு சேர்ந்து விட்டது.

நம்பிக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது அது. அனுதாபம் கலந்த ஆறுதல் மொழிகள் கூறிவிட்டுப் போன அவன் அப்புறம் அவளைப் பார்க்க விரும்பவே இல்லை. அவனைச் சந்திக்க அவள் ஆசைப்பட்ட போதெல்லாம், சாக்குப் போக்குகள் கூறித் தட்டிக் கழித்து வந்தான் அவன்.

அவனிடம் இந்தப் பண்பை அவள் எதிர்பார்க்கவில்லை. அவனைச் சரியாக உணரத் தவறிவிட்டது தனது குற்றம் எனப் புரிந்து கொண்டாள் மங்கை. தன்னை அவன் காதலிப்பதாக நம்பி ஏமாந்திருந்த காலமெல்லாம் தனது அழகைத்தான் காதலித்தான் நம்பி— அதையே அவன் போற்றிப் புகழ்ந்தான்–என்பதை உணர்ந்து கொண்டதும் மங்கையர்க்கரசி வேதனையால் விம்மினாள்; வெய்துயிர்த்தாள்; வாழ்வே பாழாகி விட்டதாகக் கருதிக் குமைந்தாள்.

காலம் 'மாயங்கள் வல்ல' மருத்துவனும்கூட. அவள் மனத் துயர் ஒருவாறு தணிந்துவிடத் துணை புரிந்தது அது.

அவள் உள்ளத்திலே அன்பு ஒளி வீசிக் கொண்டிருந்தது. அதன் கதிர்கள் எங்கும் பரவ அவளுடைய செயல்கள் உதவின. பிறருக்குத் தேவையான பணிகளைச் செய்வதன் மூலம் அமைதியும் மன நிறைவும் காண முயன்றாள் மங்கை.

வாழ்க்கையில் ஏமாற்றம் அடைய நேர்ந்து விட்டதே என்று நம்பி வருத்தப்பட்டான் என்பது நிஜமே. எனினும் அவன் வருத்தம் அவனைச் செயலற்றவனாகவோ, வேறு பரோபகாரப் பணிகளிலோ மாற்றிவிடவில்லை. சில தினங்களிலேயே, அவனுக்குப் பிரியமான, மிகுந்த உல்

லாசம் அளிக்கும் வேலை நம்பிக்குக் கிடைத்து விட்டது.

அவன் கண்களுக்கு விருந்தாக, எண்ணங்களின் இன்பச் சுவையாக, நினைவின் காவியமாக, கனவின் எழில் ஓவியமாக மின்னிய பெண் ஒருத்தி எதிர்ப்பட்டாள். சிரித்துச் சிரித்துப் பேசும் சிங்காரி அவள். 'சஞ்சலா' அவள் பெயர். கொஞ்சுவதற்குக் கிடைத்த கோலக் கிளி மொழியாள் என்று பெரு மகிழ்வு எய்திவிட்டான் நம்பி.

இந்த உலகத்தில் மிக அழகான பெண் அவள்தான் என்று அவனுக்குத் தோன்றியது. சஞ்சலாவுடன் கழிக்க முடிகிற காலம்தான் பொன்மயமானது எனக் கருதினான் அவன். தனது வாழ்வின் இன்பமும் நிறைவும் ஜீவனும் அவளே என்று துதிபாடினான் அவன். அவள் கண்களில் வேறு எந்தப் பெண்ணின் கண்களிலும் காணுத-காண முடியாத—அற்புதத்தை, ஆனந்த ஒளியை, காதல் ரகசியத்தை எல்லாம் கண்டு களிக்க முடிவதாக அவன் நம்பினான்.

தனது வாழ்விலே மங்கையர்க்கரசி என்றொரு பெண் வந்து சேர்ந்ததையும், அவளிடம் அவன் ஒப்புவித்த பாடங்களையும் அவன் மறந்து விட்டான். மனதின் அடிமட்டத்தில் அந்நினைவுகள் கிடந்தால்கூட, அவற்றை மேல் பரப்புக்கு இழுத்து வர அவன் ஆசைப்படவே இல்லை.

அழகுச் சிறகுகள் பரப்பி உல்லாசமாகத் திரியும் 'வண்ணப் பூச்சிகள்' இனத்தைச் சேர்ந்தவள் சஞ்சலா. அனுபவித்து ஆனந்தமாக வாழ்வதற்காகவே ஏற்பட்டுள்ளன இந்த வாழ்க்கையும் உலகமும் என்ற தத்துவத்தின்மீது செயல்புரிகிறவர்களில் அவளும் ஒருத்தி.

அவளோடு பொழுது போக்கும் வாய்ப்பு தனக்குக் கிட்டியது தன்னுடைய பாக்கியம் என்றே கருதினான் அவன். அவளைத் தன் துணைவியாக வரித்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான் நம்பி.

காலம் மீண்டும் விளையாடியது.

ஒரு விபத்திலே சிக்க நேர்ந்த நம்பி கைகளில் ஒன்றை இழந்து விட்டான். காலும் சற்றே ஊனமாயிற்று.

அவனுக்கு அனுதாபம் அறிவிக்க வந்து போன சஞ்சலா அதன் பிறகு அவனிருந்த திசைப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை.

ஆஸ்பத்திரியில் கிடந்த நம்பியை மங்கையர்க்கரசி காண நேர்ந்தது. அவனை அவள் வெறுக்கவில்லை. அவன் இந்தப் பரிதாபநிலை அடைந்ததற்காக வருத்தப்பட்டாள். அவனுக்குத் தேவையான சிறு உதவிகளைச் செய்யவும் முன்வந்தாள். அவள் மாண்பு மிகுந்த பெண். அன்பு நிறைந்தது அவள் உள்ளம்.

முதலில் அவளைக் கண்டதும் அவன் வெட்கமடைந்தான். அவளிடம் எப்படிப் பேசுவது என்று கலவரம் கொண்டான். அவள் 'எதுவுமே நடவாததுபோல' சகஜமாகப் பேசிப் பழகுவதைக் கண்டதும் அவனுக்குத் தெம்பு பிறந்தது. அவளை அவன் கவனித்துக் கொண்டே இருந்தான்.

அவளுடைய முகம் மாறியிருந்த போதிலும், அவள் அகம்—மிக உயர்ந்தது; ஒளி மிகுந்தது—மாறுதல் அடையவே இல்லை. எனவே, அவள் முகத்தில் ஒரு அமைதியும், 'களி துலங்கும் நகை'யும் சதா விளங்குகின்றன என உணர்ந்தான் நம்பி.

ஒரு நாள்—

மீண்டும் அவன் அவளோடு தன் பழைய உறவைப் புதுப்பித்துக் கொள்ள ஆசைப் பட்டான். 'அன்பே! மங்கையர்க்கரசி என்ற பெயர் உனக்குத்தான் தகும்' என்று, ஆரம்ப பாடத்தை மீண்டும் துவக்கினான் அவன்.

'இந்தப் பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம்!' என்று கண்டிப்பாக அறிவித்தாள் அவள்.

அவளுடைய குரல் அவனுக்கு உற்சாகம் அளித்து, அவன் முயற்

சிக்கு ஊக்கம் தருவதாய் ஒலிக்க வில்லை.

'என்னை மன்னித்து விடு, மங்கை!' என்று கெஞ்சினன் அவன்.

'உங்களை நான் என்றே மன்னித்து விட்டேன்' என்று 'மூன்றும் மனிதன்' எவனிடமோ, சர்வ சாதாரண உண்மை எதையோ, கூறுவது போல் பேசினள் அவள்.

'என்னை நீ வெறுக்கிருயா?' என்று கேட்டான் நம்பி.

'உங்களை நான் வெறுக்கவுமில்லை; விரும்பவுமில்லை!' என்ருள் மங்கை.

'பழைய வாழ்க்கையை நினைத்தாவது...'

'அது நடவாது இனி. உங்கள் ஆசை முகத்தையே அவாவியது. முகம் பழுதுபட்டதும், நாம் போற்றி வளர்த்த நேசத்தையும் மறந்து விட்டதே உங்கள் நெஞ்சம்! ஒளி நிலவும் கோயில் என நான் மதித்த உள்ளம் இருள் மண்டிய குகை தான் என அறிந்த பிறகும் நான் அதை எப்படி விரும்ப முடியும்?' என்று சொல்லி, மங்கையர்க்கரசி போய்விட்டாள்.

'இவள் பண்பு உயர்ந்தது. இவள் உள்ளம் புனிதமானது' என்று முனங்கினன் நம்பி. 'இவளைப் போன்றவர்கள் இருந்து பெண்மைக்கு உயர்வு தரும் சமூகத்திலேதான் சஞ்சலாக்களும் வெற்றிகரமாக வாழ்கிருர்கள். சஞ்சலாக்கள் இல்லையென்ருல், மங்கையர்க்கரசிகளின் உண்மையான மதிப்பைப் புரிந்து கொள்ள முடியாதோ என்னவோ! 'நிழலின் அருமை வெயிலில்தானே நன்ருகத் தெரியும்!' என்று எண்ணினன் அவன்.

ஒன்றின் சிறப்பு நன்கு புரிய வேண்டுமானல், அதற்கு முற்றிலும் நேர்மாருன முரண்பாடுகளும் அவசியம் தேவைதான் என்று ஆமோதித்தது அவன் மனம்.

பல ஆண்டுகளாக விவசாயக் கருவிகள் செய்வதில் பழுத்த அனுபவம் பெற்ற எங்கள் தொழிலாளரைக் கொண்டு இவ்வாண்டு கீழ்க்கண்ட 5 புது கருவிகளை உற்பத்தி செய்து குறைந்த விலையில் விநியோகித்துக் கொண்டிருக்கிறோம்.





(1) 'கிஸான்'' தழை மிதிக்கும் கருவி. (2) ஜப்பானிய களை எடுக்கும் கருவி (3) பர்மீஸ் செட்டுன் (4) மண் வாரி (5) கலப்பை.

இன்னும் அநேக கருவிகள் செய்ய உத்தேசித்துள்ளோம்.

விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

Tel: ROJA. பிராஞ்சு: நான்குநேரி.

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்

(உரிமையாளர்: M. S. கந்தசாமி நாடார்)

அரசாங்க அங்கிகாரம் பெற்ற விவசாயக் கருவி தயாரிப்பாளர், திருநெல்வேலி டவுன்.

காற்றிலேறி அவ் விண்ணையும் சாடுவோம்

- ஆரையம்பதி அன்புமணி -

சந்திர மண்டலம் தாவுதல் — இங்கு
சாத்தியமில்லையென் றோதினர்
மந்த மதியினர் அன்னவர் — நம்
பண்டை நூல் கூற்றை மறந்தவர்.



இன்று மதியினுக் கேகிட — ஏற்ற
எந்திரம் ஆகுது; அத்துடன்
மன்றுள் முன் யாத்திரைக்காகிய — பல
மாதிரிச் சீட்டும் விற்றாகுது.

எல்லையில்லாப் பெரும் ஞானத்தை — மக்கள்
ஏங்கிடும் போரில் அழிக்காமல்
நல்ல வழியில் செலுத்தினோர் — செயல்
நம்மவர்க் கிந்த நலம் இது.

பொங்கும் நிலவொளி வீசிடும் — மதி
போந்து நம் பூமியை நோக்கிடும்
மங்கள நாளை மகிழ்வுடன் — இன்று
மானசிகத்தில் நாம் காணுவோம்.

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% Nacl)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்குச் சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித்
தெரிந்து கொள்ளவும்:

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 **Tel. Address. MACSALT**

Telephone: MADRAS **4890** MADURAI : **581**

இன்பம் தரும்

31

301

3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதரூஸ் . பெங்களூர் . விஜயவாடா

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன்: 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

கிளைகள்: சென்னை, காயல்பட்டணம்,

யாழ்ப்பாணம் & கொழும்பு.

மோகீ மிதித்துவிடு பாப்பா!

-த. சண்முகசுந்தரபாண்டியன்-

"இந்தாப்பா! பிடி!" அந்த அம்மாள் வலக்கை நிறையச் சாதம் கொண்டு வந்து நீட்டினள்.

அவனும் அதை வாங்கிக் கொள்ளத்தான் தன் இரு கைகளையும் நீட்டினன். ஆனல்...

"என்ன? கையிலா...? திருவோடு இல்லையா?" நீட்டிய கையை மடக்கிக் கொண்டு கேட்டாள் அந்த அம்மாள்.

"இல்லை" அவன் மெதுவாகப் பதிலளித்தான்.

"'பாத்திரமறிந்து பிச்சை போடு' என்பார்கள்; திருவோடு இல்லாத பரதேசிக்கு அன்னம் போடக்கூடாதேயப்பா!... போ! போயி...ஏதாவது பாத்திரம் கொண்டு வா!"

"அம்மா! அம்மா!"

"பாத்திரம் கொண்டுவா, போடுகிறேன்"

"அம்மா! நான் பரம்பரையாப் பரதேசி கிடையாது; ஏதோ இப்படியாகி விட்டேன் தாயே...!"

"நான் கதை கேட்கத் தயாராக இல்லை"

"...கொண்டுவந்த சோற்றைப் போட்டுவிடம்மா! மானத்தை விட்டுக் கேட்கிறேன், காது அடைத்துப் போச்சு, கண்ணும் மங்கிப் போச்சு... அம்மா! அம்மா!!"

அவள் கேளாக் காதினளாக உள்ளே சென்று விட்டாள்.

எதிர் வீட்டு முற்றத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த தேனம்மாளுக்கு, அந்தத் திருவோடில்லாத பரதேசியின் மீது அளவற்ற பரிதாபம் பிறந்தது.

"பாத்திரமறிந்து பிச்சை போட வேண்டுமாம். திருவோடில்லாத பரதேசிக்கு அன்னம் போடக் கூடாதாம். இந்த உபதேசங்களையா அந்த அம்மாளிடம் கேட்டார்கள். 'பசி' என்று வந்தவனுக்கு 'புசி' என்று கொஞ்சமேனும் உணவளிக்க மனமில்லாத இந்த அம்மாள் உபதேசிக்க வந்து விட்டாள். உகும்! பாரதியாரும் பாடியிருக்கிருரே '**தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழிப்போம்**' என்று! இப்போது இவளை என்ன செய்வதாம்?"— இப்படியெல்லாம் தேனுவின் மனம் குமுறியது. அந்தப் பிச்சைக்காரன் தன்னுடைய வீட்டுக்கும் வருவான்; வீட்டிற்குள் அழைத்து, வயிறு நிறைய சோறு போட்டு அனுப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனல் அந்தப் பிச்சைக்காரனே சோர்ந்து போய் அந்த அம்மாள் வீட்டு முற்றத்திலேயே அமர்ந்து திண்ணைச் சுவரோடு சாய்ந்து விட்டான். தேனுவின் இதயம் வேதனையால் விம்மியது. 'போய் அவனைக் கூட்டிக் கொண்டு வந்தால் என்ன' என்று எண்ணினள்.

சேச்சே! யாரும் பார்த்தால் சிரிக்கப் போகிருர்கள். சிரித்தால் என்ன? யாரும் சிரித்தால் எனக்கு என்ன வரும்? உயிரற்ற ஜீவன் போலிருக்கும் அவனுக்கு உணவளிப்பது தவறு? 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று பாடியிருக்கிருர்களே!— இப்படிப் பல போராட்டங்கள். வாசலில், தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த தேனு, ஒரு முடிவுக்கு வந்தவளாய் முற்றத்தில் நடந்தாள்.

வீட்டில் வேறு யாரும் இல்லை. அவளது அப்பா ஆபீஸிலிருந்து வரவே இல்லை; அம்மாவும் கோயிலுக்குப் போயிருந்தாள். அம்மா

வரும்வரை காத்திருக்கலாமென்றால் அந்தப் பிஞ்சு நெஞ்சத்திற்குப் பொறுமையே இல்லாது போயிற்று.

எதிர் வீட்டு முற்றத்தில் போய் நின்றாள். அவனை எப்படி அழைப்பது...?

"...பசியா யிருக்குதா? சோறு தானே வேணும்?" என்றாள் தேனு.

அதற்கு அவன் தலையசைத்தான் பேசமுடியவில்லை.

"எங்க வீட்டுக்கு வா(ங்க) சோறு போடறேன்!" என்றாள்.

கேளாத வார்த்தைகளைத் தொடர்ந்து கேட்ட மாத்திரத்தில் அவன் உடலெல்லாம் புல்லரித்தது. மெதுவாக எழுந்தான். திகைத்து வியந்து நின்றான்.

"வாங்களேன்! ஊம்! வாங்க...!" என்று கூவி முன்னே நடந்து வழி காட்டினாள்.

அவன் சிந்தனைக்குரியவன் ஆனான். அவள் அவனுக்கு அல்ல, உலகுக்கே வழிகாட்டுவது போல் தெரிந்தது. அவளது வார்த்தைகளை அந்தப் பராரியால் பொறுக்க முடியவில்லை. **'கொள்' எனக் கொடுத்தல் நன்று, இவளோ 'கொள்ளேன்! கொள்ளேன்!'** என்று கூவுகின்றாளே! அந்தஈகையின் சிறப்பினை உணர்ந்தபோதே ஈவின் இழிவையும் உணர்ந்து விட்டான். ஆனால் பசியோ அவனைப் பிடித்துத் தள்ளியது. நடந்தான்.

உணவு பரிமாறப்பட்டது எத்தனை பரிவு! **'இப்படிப்பட்ட சிறுவர்களிடத்திலேதான் இந்த உலகை ஒப்படைக்க வேண்டும்; அப்போதுதான் உலகம் உய்யும்' என்று அந்தப் பஞ்சையின் நெஞ்சம் எண்ணிக் கொண்டது. பாவம்! அந்தப் பைத்தியக்காரன் அதை வெளியே சொல்லவில்லை.**

சாப்பாடு முடிந்தது. ஒட்டகம் போல் கொஞ்ச நாட்களுக்காவது பசியின்றி இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டான். அவ்வளவுக்கு வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டான். கை கழுவி விட்டுத் திரும்பினான்.

"கையெழுத்துப் போடத் தெரியுமா?" என்றாள் அச்சிறுமி. கையில் ஒரு நோட்டுப் புத்தகமும் பேனாவும் வைத்திருந்தாள்.

"தெரியும்" என்று தலையசைத்தான். அவள் நோட்டுப் புத்தகத்தை நீட்டினாள். அதை வாங்கி "பொன்னன்" என்று எழுதினான். அப்பொழுது...

"யாரம்மா அது?" என்று குரல் வந்தது. தேனுவின் தாய்தான், கோயிலிலிருந்து வந்து விட்டாள். அவளிடத்தில் தேனு எல்லாவற்றை

யும் சொன்னுள். அவளுக்கும் பொன்னன் மீது இரக்கமே ஏற்பட்டது. தன் கணவனிடம் கூறி அவனுக்கு ஒரு வேலேயும் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும் என்று எண்ணினுள்.

அன்று இரவு பொன்னனைத் திண்ணேயில் படுத்துக் கொள்ளும்படி சொன்னுர்கள். படுத்துக் கொண்டான். இரவு 12 மணி இருக்கும். ஊர் உறங்கும் அந்த வேளையில் பொன்னனின் உள்ளம் உறங்கவில்லே. எதையெதையோ எண்ணிக் கொண்டு திண்ணேயில் புரண்டான் :

எப்படியோ ராஜோபசாரம் கிடைத்தது. ஆனல் அந்த உபசாரம் என்றைக்குமே கிடைக்க முடியுமா? விடிந்தால் தெருவில் திருவோடில்லாப் பரதேசியாகத்தானே அலேய வேண்டும்? இப்போது பசி இல்லே. காலேயில் பசிக்குமே?— என்பன போன்று பல எண்ணங்கள் அந்த உள்ளத்தில் எழுந்தன. இந்த மடமில்லா விட்டால் இன்னெரு மடம் என்று வாழும் ஆண்டியைப்போல் காலத்தைக் கழித்து வந்த அவனுக்குப் புதியதொரு ஆசையும் அதனல் பெருங் கவலேயும் எழுந்தது. இன்றுபோல் நாளேயும் இருக்க வேண்டுமென்பதே அவனது ஆசை. எப்படி இருக்க முடியும்? தெருவோடு நிற்கும் திருவோடில்லாப் பரதேசி எங்கே? திருவோடு வாழும் அந்தப் பெருங் குடும்பம் எங்கே?

எழுந்து அமர்ந்தான். வழக்கம் போல் அந்த இரவிலும் வீட்டின் கதவுகள் திறந்தே இருந்தன. உள்ளே சிறுமியுட்பட எல்லோரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். அவனுடைய மனத்தில் புயலடிப்பது போன்றதோர் பேரிரைச்சல் எழுந்தது. திருடன் என்ற பட்டத்திற்குரிய பாடங்கள் அவனது மனத்தில் பதிந்தன. விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. பரதேசியாக இருந்தபோதும் சரி, அவன் இப்போது திருடனுக மாறிய போதும் சரி, அவனுக்கு வழிவிடத் தயங்கவில்லே அந்த வீட்டின் கதவுகள்; உள்ளே நுழைந்தான். சிறுமியின் கால்களிலிருந்த 'தண்டைகள்' தாம் அவன் கவனத்தை ஈர்த்துக் கொண்டன. மெதுவாக அவள் காலடியை அணுகினன். காலேத் தொட்டான். அவள் புரண்டாள்; விழித்துக் கொண்டாள். ஆனல் அலறியடித்துக் கொண்டு எழுந்துவிடவில்லே. படுத்துக் கொண்டே நடப்பதைக் கவனித்தாள்.

பொன்னன்தான் அவன் என்பதையும் அறிந்து கொண்டாள். மனத்தில் பயமில்லே. "அட பாதகனே?" என்ற அங்கலாய்ப்புதான். ஆனலும் வாயைத் திறக்கவில்லே. "பாத்திரமறிந்து பிச்சை போடு" என்று எதிர்வீட்டு அம்மாள் சொன்னது நினேவிற்கு வந்தது. பாரதியாரின் பாடல் ஒன்றும் நினேவிற்கு வந்தது. பாரதியாரின் பாடல் என்ருல் அவளுக்குக் கரும்பாயிற்றே!

"பாதகஞ் செய்பவரைக்
கண்டால்—நாம்
பயங் கொள்ள லாகாது
பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா!
—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு
பாப்பா!"

என்ற பாட்டுதான் அது.

அவளது காலடியில் அமர்ந்து தண்டையை மெதுவாகக் கழற்றினன் பொன்னன்.

ஆழ்ந்த யோசனேக்குப் பிறகு திடீரென்று அவள் தன் காலே உதறினுள். அவ்வளவுதான் காலடியில் அமர்ந்திருந்தவன், கைகளே நீட்டிக் கொண்டு அவளது தலேமாட்டிற்குப் பாய்ந்தான். சத்தம் வராதபடி வாயைப் பொத்திவிட வந்தானே அல்லது, கழுத்தையே நெறித்துக் கொன்றுவிட வந்தானே தெரியவில்லே. அதற்குள்...

"திருடாதே! திருடாதே!!" என்ற குரல் தேனுவின் வாயிலிருந்துதான்வந்தது. கண்கள் மூடியே இருந்தன. அவனுக்கு இதுபெருத்த ஆச்சரியமாயிருந்தது.

அவளது கைகள் அசைந்தன. தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி நீட்டினாள். அப்போதும் அவளது கண்கள் மூடியே இருந்தன.

"கேவலம்! காலில் கிடக்கும் வெள்ளித் தண்டைக்கு ஆசைப்பட்டாய்! இதோ கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலியையே கழற்றித் தருகிறேன் எடுத்துக் கொள்!" என்றாள், கண்களைத் திறக்காமலே தான்.

அந்த வார்த்தைகள் அவனது முகத்திலே உமிழ்ந்தது போலிருந்தது. அவ்வளவுதான்! உதைக்கப்பட்டவன்போல் துள்ளி எழுந்து ஓடினான். 'கும்'மென்றிருந்த இருளைக் கிழித்துக் கொண்டு ஓடினான்.

அன்று ஓடியவன்தான், அதற்குப் பிறகு அவன் வரவே இல்லை.

"பொன்னன்" என்று அவன் கையொப்பமிட்டிருந்ததற்கடியில் பாரதியாரின் அந்தப் பாடலையும் எழுதி வைத்துக் கொண்டாள் தேனு. அதை அடிக்கடி திறந்து பார்ப்பாள். அப்போதெல்லாம் பொன்னனின் நினைவு வரும். அவன் எப்படி இருக்கிறானோ என்ற கவலையும் எழும். அதற்குப் பதிலாக, 'அவன் நல்லவனாகவே இப்போது இருப்பான். அவன்தான் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொன்னனாகி விட்டானே' என்ற எண்ணமும் உண்டாகும். ★



தயாரிப்பாளர்:

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை
பெரம்பூர், சென்னை.

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம்:

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

சினிமா விமர்சனம்

கலைப்பகுதி

எம்ஜியார் பிக்சர்ஸ்

நாடோடி மன்னன்

தென்னாட்டின் ரசிகர்களுடன் நீண்ட காலம் 'இதோ...அதோ... நாளை...அடுத்த மாதம்' என்று கண்கட்டி விளையாட்டு நடத்தி வந்த 'நாடோடிமன்னன்' கடைசியில் வெண்திரைக்கு வந்தே விட்டான்.

மக்கள் ஆட்சி-இன்றைய சாதாரண குடிமக்களையும் கவரும் தன்மைபடைத்தது; மன்னனாட்சி-படை, பட்டாளம், கோட்டை, கொத்தளம், துள்ளி ஓடும் புரவி, மின்னிப் பாயும் கத்தி, விஷக் கோப்பை, பாதாளச்சிறை போன்ற 'திரைக் கவர்ச்சி அம்சங்கள்' கொண்டது. எம்ஜியார் பிக்சர்ஸார் 'மக்கள் ஆட்சி' என்று முழங்கியபடியே மன்னனாக ஆளும் ஓர் கதாநாயகனைப் படைத்து இரண்டு வகை ஆட்சி முறைகளிலும் உள்ள கவர்ச்சிகர இயல்புகளை ஒன்றாக்கி இருக்கிறார்கள். இது கதைக் **கதம்பத்தின்** விளக்கம்.

கதம்ப உணவு பலவாறு ருசிப்பதைப் போல, இந்தக் கதையிலும் பல ரசங்கள். அடுக்கடுக்கான சம்பவங்கள். இடைவேளைக்குப் பிறகு விசித்திரத் தீவு ஒன்றிலே சம்பவங்கள் நடப்பது வேறு ரசக் கலவைக்குத் துணை செய்கிறது.

வசனம்—சிறப்பாகவே உருவாகியுள்ளது; எம். ஜி. ஆர். என்றதும் நீண்ட பிரசங்கத்தை எதிர்பார்ப்பவர்கள் ஏமாந்து போவார்கள். ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் சிறிய சொற்பொழிவு ஆற்றுகிறார் எம். ஜி. ஆர்.; அதுவும் கச்சிதமாத அமைந்து விட்டது.

நாடோடி மன்னனால், திட்டம் ஒன்றும் தரப்பட்டுள்ளது. அதிலே பல கருத்துக்கள் பழையன; பல நிறைவேறிவிட்டவை; சில நடைமுறையிலிருப்பவை. திட்டம், நன்றாகத் திட்டமிடப்படாது தரப்பட்டுள்ளது. நாடோடியின் **திரைத்திட்டம்** தானே?

நடிப்பிலே துடிப்பாகப் பேசிடும் பானுமதிக்கு முதல் பரிசு. கிண்கிணிக் குரல்; திரைப்படத்திற்கேற்ற முக அமைப்பு; அநுபவ நடிகை; கேட்கவா வேண்டும்?

ராஜம் நடிப்பிலே அடுத்த இடம் பெறுகிறார். இரட்டை வேடம் தாங்கியுள்ள தயாரிப்பாளர், டைரக்டர், கதாநாயகராகிய எம். ஜி. ஆருக்குப் பொறுப்புக்கள் அதிகம் என்பதாலோ என்னமோ நடிப்பிலே மெருகதிகம் இல்லை. சண்டைக்காட்சிகள், அதை எதிர்பார்க்கும் ரசிகனை நிச்சயம் திருப்தி செய்யும்; ஆளைப் பார்த்தவுடனே மகிழ்ச்சி வந்து விடுவதால், உணர்ச்சிப்படப் பிடிப்புகளை யார் கவனிக்கப் போகிறார்கள்!

கூர்ந்து கேட்கும் இக்கூர்விழியாளை 'நாடோடி மன்னனி'ல் சந்திக்கலாம்.

சரோஜாதேவி படம் பார்ப்பவரின் 'கவர்ச்சித் தேவை' களை நன்கு பூர்த்தி செய்திருக்கிறார். அவரிடம் நாம் வேறென்ன எதிர் பார்க்க முடியும் ?

பிற நடிகர்கள், தத்தம் வழக்கமான பாணிகளை நிலை நாட்டிக் கொண்டுள்ளனர்.

ஒரு வார்த்தை — நடிகை சகுந்தலாவிற்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதை அவரது சிறிய பாத்திரம் சொல்லாமல் சொல்கிறது.

பட்டுக்கோட்டையார் பாடல்கள் 'தூங்காதே, தம்பி தூங்காதே', 'சும்மா கெடந்த நெலத்தைக் கொத்தி', பொருட் சுவை, இசைச் சுவை நல்கும் விருந்துகள்.

கன்னித் தீவு நடனங்கள் — அவர்கள் உழைப்பு அதிகம், நமக்கு பலன் கொஞ்சம்.

ஒலி, ஒளிப்பதிவுகள், டெக்னிக் முறைகள் திருப்திகரம்; கழுகுக் கையிலிருந்து மன்னனைக் காப்பாற்றுவது, ரத்னாவின் கனவுக் காட்சி, கடைசிக் காட்சியான பாலச் சண்டை, நன்கு அமைந்து உள்ளன, அறிவுக்குப் பொருந்தாவிட்டாலும்!

குறைகளும் உண்டு. சில கூறுவோம். நீளம் அதிகம்; சில்லரைக் காட்சிகள் சில தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

பாத்திரங்களின் பெயர்களுக்கு வடமொழிச் சொற்களாகவே கையாண்டிருக்க வேண்டாம்; பிற தயாரிப்பாளர்கள் செய்யலாம். ஆனால் எம்ஜியார் பிக்சர்ஸார் இது தவிர்க்க வேண்டும்; நல்ல தமிழ் பெயர்கள் ஆயிரம், ஆயிரம் உள்ளனவே ?

பிரச்சாரக் கலப்பு தேவைக்கு அதிகம்; தமிழ் நாட்டு ரசிகனின்

மனப்போக்கு மாறி வருவதை நாடி பார்த்து உணராததால் வரும் கேடு இது.

டைரக்ஷனில் ஒரு பெரும் குறை—ஒலி நேர் வழி செல்லா விட்டால் சிதறுண்டு வடிவம் இழக்கும். குழாய் வழியே பாட்டும், பேச்சும் மேலிருந்து கீழே கேட்குமா! இல்லை கீழிருந்து மேலே போகுமா? **பகுத்தறிவு இதை ஒத்துக்கொள்ளாது**; பானுமதி, எம். ஜி. ஆர். என்பதற்காக இயற்கை விதியும் மாறுது!

நாடோடி மன்னனை நாடிச் செல்லும் சாதாரண ரசிகனது உள்ளத்திற்குச் சிறந்த கலை விருந்துண்டு. பாமர ரசிகன் பலமுறையும், தேர்ந்த விமர்சகன் ஒரு முறையும் 'நாடோடி மன்னனை' நிச்சயம் சந்திப்பார்கள்.

"ரசிகன்"

மினர்வா பிக்சர்ஸ்

சாரங்கதரா

பெரிய பயில்வான் ஒருவனை 'புல் தடுக்கி வஸ்தாது' ஒருவன் சவால் விட்டுச் சண்டைக்கு அழைத்தால், எல்லோருக்கும் ஆச்சரியம் ஏற்படுவது இயற்கை தானே? அதே போல மாபெரும் தயாரிப்பு என்று நாடே எதிர் பார்க்கும் ஒரு படம் வெளிவரும் நேரத்திலே, அதே நாளிலே தான் நாங்களும் திரையிடுவோம் என்று ஒரு படத்தை அதன் தயாரிப்பாளர்கள் வெளியிட்டால், 'ஓகோ! இவர்கள் படத்திலும் ஏதாவது சரக்கு இருக்குமோ?' என்று நமக்குச் சந்தேகம் முளைப்பது சரி தானே!

சாரங்கதரன் அத்தகைய ரசிகனின் சந்தேகத்தைத் தான் முதலாக வைத்துக் கடை விரித்தான். ஆனால் சந்தேகம் பொய்யாகி விட்டது! சாரங்கதரன் போட்டிப் புயலில் சமாளிக்கும் வலிமை பெற்ற வஸ்தாது அல்ல என்பதும் தெளிவாகி விட்டது.

நாடறிந்த பழைய கதை; அதை நளினமாகக் கையாண்டிருந்தால், பலனை அதிகம் அறுவடை செய்திருக்கலாம். 'புது மெருகுடனும், கலை மணத்தோடும், கருத்தின் சுவையோடும் ரசிகப் பெருமக்களுக்கு சமர்ப்பிக்கிறோம்,' என்று பாட்டுப் புத்தகத்தில் கட்டியம் கூறிக் கொள்பவர்கள், வெள்ளித் திரையில் வெத்து வேட்டுகளாக்கி இருக்கிறார்கள்.

சாரங்கதரன் — அரிய பண்புகளின் உறைவிடம். அவனது மனைவியாக முயன்று, சிற்றன்னையாக வந்து சேரும் சித்ராங்கியின் சூழ்ச்சி வலையில் சிக்கித் தவித்து இறுதியிலே வெல்லுகிறான்.

நல்லவன் என்பதனால்தான் வாளை அவன் நாடுவதே இல்லை. ஒரு கத்திச் சண்டை கூட நடக்க விடாமல் சாமர்த்தியமாகக் கதையை நகர்த்தி இருக்கிறார் டைரக்டர். கத்திச் சண்டை 'கண், கண்' என்று ஓரிரண்டு இடத்திலாவது ஒலித்திருந்தால், தயாரிப்பாளர்கள் கல்லாப் பெட்டியிலும் சில காசுகளாவது 'ஜல், ஜல்' என்று முனகியிருக்கும். பாவம்...கொலைக் களம் வரை சென்றாலும் கொதிக்காத அப்பாவிப் பாத்திரத்தை வைத்துக் கதையை நடத்தினால், விறுவிறுப்பு எங்கே இருந்து ரசிகனுள்ளத்தில் இறங்கும்?

வசனம்—பாராட்டப்பட வேண்டியது; கடவுளுக்கு இலக்கணம் சொல்லும் வரிகள் இலக்கிய

மேதைகளை நினைவுறுத்துகின்றன. சில இடங்களில் நெரடுகள் தட்டுகின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

13 பாடல்கள்; 15 ஆயிரம் அடிப் படத்தில் பெரும் பகுதி அடைக்கும் பாடல்கள், தங்களது வருகையைச் சுருதி கூட்டும் இசைக் கருவிகள் மூலம் அறிமுகம் ஆகும் பொழுதே நமது முகம் சுருங்குகிறது.

சிவாஜி கணேசனின் நடிப்பு முத்திரைகள் வெளிப்படும் இடங்கள், படத்தில் பாலைவனப் பசுஞ் சோலைகள், பானுமதியும் சில இடங்களில் ஒத்துழைத்து உயிரூட்டுகிருர்.

ராஜ சுலோசன காதல் கட்டத்தில் 'தாராளமாக' இருந்து பணியாற்றுகிருர்.

முத்துலட்சுமி—கருணாநிதி இணை வழக்கம் போல; மன்னனிடம் ஒரு சொல் (கருணாநிதி) பல சொற்களில் சித்ராங்கியின் சதியை உரைப்பது மிகை நடிப்புக்கு ஓர் இமாலய உதாரணம்.

குமாரி கமலாவின் நீண்ட நடனம், உப்பு அதிகமாகி விட்ட உப்பு மாவில் கிடைக்கும் ஒரு முந்திரிப் பருப்பு !

சிறந்த சில நட்சத்திரங்கள் மின்னினாலும், சாரங்கதாரா இருண்ட வனமாகப் போனதற்கு என்ன காரணம், என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

சம்பவக் கோர்வை இன்மை, நடைபெறும் சம்பவங்களும் உயிரின்றி நிற்பது, முக்கிய காரணம். நரேந்திர மன்னனின் அரண்மனை, "மூர்மார்க்கெட்" போல இருக்கிறது. அரண்மனையிலே அரச கல்யாணங்கள் ஆடம்பரமின்றி அநாதைக் கல்யாணங்கள் போல நடப்பது நம்மைச் சலிப்புக் கொள்ளச் செய்கின்றது.

'தமிழ் நாடும் ஹாலிவுட்டுக்கு இளைத்ததில்லை !'

('சாராங்கதாரா' காட்சி)

பாத்திரங்கள் உயிரில்லாமல் ஒருவரோடொருவர் பற்றில்லாமல் நடமாடுகிருர்கள். எடிட்டிங்கின் சாதாரண விதி முறைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது கலியாணம் நடந்தேறிய காட்சியைக் கண்ட பிறகு, 'அந்தக் கலியாணம், கூடாது' என்று கணவனிடம் வாதாடுபவளைக் கண்டால், சிரிப்புத் தான் வருகுதையா !

ஒலி, ஒளி அமைப்புகள் — 'மோசம்' என்ற பத்திரத்தைப் படம் பார்ப்பவரிடம் பெறுகின்றன.

இன்னும் வேறென்ன வேண்டும், ஒரு படத்தைச் சீக்கிரம் ஓய்வெடுத்துக் கொள்ள அனுப்புவதற்கு ?

நான் சொல்வதில் சந்தேகம் இருந்தால், இத்தனையும் பொறுக்கும் துணிவிருந்தால், வஞ்சனை இல்லாது நன்ருக நடித்துள்ள சிவாஜி கணேசனிடம் கருணையிருந்தால், ஒரே ஒருமுறை சாரங்கதரனைப் பேட்டி கண்டு வாருங்கள்!

"ரசிகன்"

போன் : 151 தந்தி : VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு, பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை, செம்புத் தகடுகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

ஜுபிடர் பிக்சர்ஸ்

"தங்கப் பதுமை"

ஜுபிடர் பிக்சர்ஸாரின் "தங்கப் பதுமை" திரு. ஏ. எஸ். ஏ. சாமியின் டைரக்ஷனில் நெப்டியூன் ஸ்டுடியோவில் வளர்ந்து வருகிறது. சிவாஜி கணேசன், நம்பியார், ஆர். பாலசுப்பிரமணியம், பத்மினி, ராஜ சுலோசனா, எம். என். ராஜம் இப்படத்தில் நடிக்கிறார்கள். கதை, வசனம் திரு. அரு. இராமனுதனால் எழுதப்பட்டுள்ளது.

மார்னிங் ஸ்டார்

"கல்யாணிக்குக் கல்யாணம்"

மார்னிங் ஸ்டார் கம்பெனியாரின் இப்படத்தில், எஸ். எஸ். ராஜேந்திரன், டி. எஸ். பாலையா, தங்கவேலு, பிரேம்நசீர், வி. ஆர். ராஜகோபால், மைனாவதி, எம். என். ராஜம் ஆகியோர் நடித்து வருகிறார்கள். இப்படத்தின் கதை வசனமும், திரு. அரு. இராமநாதனது பொறுப்பிலே தான் உள்ளது.

மாடர்ன் தியேட்டர்ஸ்

"தலை கொடுத்தான் தம்பி"

"பாண்ட்மேன்" என்ற ரசமான ஆங்கில நாவலைத் தழுவி, திரைக் கதை, வசனம் அமைக்கப்பட்டுள்ள "தலை கொடுத்தான் தம்பி" என்ற படத்தை மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்து வருகிறார்கள். திரைக் கதை, வசனம் திரு. மாறனால் எழுதப்பட்டுள்ளது. மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. டி. ஆர். சுந்தரம் டைரக்ட் செய்யும் இப்படத்தில் மனோகர், எஸ். எஸ். இராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி, தாம்பரம் லலிதா ஆகியோர் நடித்து வருகிறார்கள்.

பத்மினி பிக்சர்ஸ்

"சபாஷ் மீனா"

திரு. பி. ஆர். பந்துலுவின் டைரக்ஷனில் இப்படம் பரணி ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. வசனம் திரு. ப. நீலகண்டனால் எழுதப்பட்டுள்ளது. சிவாஜி கணேசன், புதுமுகம் மாலினி, சந்திரபாபு, ரங்கா ராவ், வி. ஆர். ராஜகோபால், சரோஜாதேவி இப்படத்தில் நடித்து வருகிறார்கள்.

மணிவேல் பிக்சர்ஸ்

"பத்தரை மாத்து தங்கம்"

கவர்ச்சிகரமான தலைப்புக் கொண்ட இப்படத்தை மணியாகத் தயாரித்து வருகிறார்கள், மணிவேல் பிக்சர்ஸார். பாலையா, கண்ணப்பா, டி. ஆர். ராமச்சந்திரன், பண்டரிபாய், சுந்தரிபாய், கே. எஸ். ராஜம் ஆகிய நட்சத்திரங்கள் இந்தப் படத்திலே மின்னுகிறார்கள். கதை, வசனம் கலைப்பித்தனும், டைரக்ஷன் கே. எஸ். மணியாலும் கவனிக்கப்பட்டு வருகின்றன.

ஸ்ரீ லட்சுமி பிக்சர்ஸ்

"தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை"

'நல்ல இடத்து சம்பந்தத்தை' மிக விரைவாகத் தயாரித்து வெளியிட்ட ஸ்ரீ லட்சுமி பிக்சர்ஸார் மின்னல் வேகத்தில் இத்தலைப்புக் கொண்ட மற்றொரு படத்தை அடுத்து வெளியிடப் போகிறார்கள். கதை, வசனத்தை திரு. ஏ. பி. நாகராஜனின் அநுபவமிக்க பேனாமுனை தீட்டிக் கொண்டுள்ளது. புதிய முகமான சுகந்தினி, மனோகர், வி. கே. ராமசாமி, கே. சாரங்கபாணி, ஏழுமலை, சாயிராம், ஜி. வரலட்சுமி, ஸி. கே. சரஸ்வதி ஆகியோர் இப்படத்தின் தாரகைகள். புனித சிவராத்திரி நாளில் இப்படம் ரசிகர்களுக்குக் காணிக்கை ஆக்கப்படும் என்று தெரிகிறது.

சரவணபவா &
யூனிடி பிக்சர்ஸ்
நான் வளர்த்த
தங்கை

சித்ரா மூவீஸ்
அதிகாரி
காட்சிகள்
எஸ். எஸ். ராஜேந்திரன், முஸ்தபா, டி. கே. ராமச் சந்திரன் விஜயகுமாரி, எம். என். ராஜம், ஈ. வி. சரோஜா, ஆகியோர் நடிக்கும்
"அதிகாரி"யை
விரைவில் நீங்கள் சந்திக்கலாம்

காக்கை குருவி எங்கள் கூட்டம்

-அழகனார்-

சிட்டுக் குருவி வா வா வா!
 சீக்கிரம் பறந்து வா வா வா!

பட்டுப் போன்ற உன்உடலைப்
 பார்த்து மகிழ்வேன் வா வா வா!

பீதி ஏதும் கொள்ளாதே;
 பிசகு எதுவும் நேராது;

சேதி ஏதும் உண்டென்றால்
 சொல்லிடு வந்து சீக்கிரமாய்!

உன்னைப் பிடித்து கூடதனில்
 அடைத்து வைக்க மாட்டேன்நான்;

என்னைப் போலே நீயெங்கும்
 இன்பமாய்ப் பறந்து சென்றிடலாம்.

எங்கள் வீட்டுச் சோலையிலே
 எத்தனை எத்தனை மரமுண்டு;

உங்கள் இனமே வாழ்ந்தாலும்
 உவகை கொள்வோம் நாங்களெலாம்!

197697

தீ பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும்
கதிர்கள்: 3,472

❋

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி
உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான
துணியையும் பொறுத்திருக்கிறது.
எங்கள் ஆலை மிக நேர்த்தியான
உயர்ரக நூல்களை
விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனி

போன் ; 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸபோர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை.



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்.
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும், வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பிராஞ்சு: மதுரை

போன் : 512 தந்தி : "TRANSPORT"

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுக நாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.